
# திருமால்புரம்



ஆசிரியர்

**ப. பூபாலன்**

பதிப்பாசிரியர்

**முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர், இ.ஆ.ப,**

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை - 600 008

# திருமால்புரம்

ஆசிரியர்

ப. பூபாலன்

பதிப்பாசிரியர்

முனைவர். தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப.,

முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2010

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | TIRUMALPURAM |
| Editor | : | Principal Secretary & Commissioner |
| Copy right | : | T.N. State Dept. of Archaeology |
| Subject | : | History |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Publication No | : | 213 |
| Year of Publication | : | 2010 |
| No.of Pages | : | 140 |
| Type Point | : | 11 Pt |
| Paper used | : | 80 GSM Maplitho |
| Printer | : | The Chennai Printers Industrial Co-operative Society Ltd. 6, Pycrofts Road, Triplicane, Chennai - 600 005 Ph:28446287/89 |
| Publisher | : | State Dept. of Archaeology Tamil Valarchi Valaagam Halls Road, Egmore, Chennai - 600 008. |
| Price | : | Rs. 89/- |

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இ.ஆ.ப.
முதன்மை செயலர் (ம) ஆணையர்
தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை ~ 600 008.
நாள் : 12~1~2010.

# பதிப்புரை

தமிழ்நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை வெளிக்கொணரும் பணிகளில் தொல்லியல் துறை செயல்பட்டு வருகிறது. இப்பணிகளை தொல்லியல் அகழாய்வுகள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்வதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாய்வுகள் நிறைவுற்ற பின்னர் நூலாக வெளியிடும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது.

இத்துறையில் தொல்லியல், தமிழ், வரலாறு, சமஸ்கிருதம் ஆகியவற்றில் முதுகலைப்பட்டம் படித்த மாணவர்களுக்கு கல்வெட்டியல் (ம) தொல்லியலில் ஓராண்டு முதுநிலைப் பட்டயம் வகுப்பு கல்வெட்டுப்பயிற்சி நிறுவனம் மூலம் நடைபெற்று வருகிறது. மாணவர்களின் திறனை வளர்க்கும் விதமாக இப்பயிற்சியின் நிறைவில் கோயில்களைப் பற்றிய ஆய்வேடு ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாய்வேடுகளை நூலாக வெளியிடும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில் 2009-10 ஆம் ஆண்டில் நான்கு நூல்களை வெளியிடுகிறது. அதில் ஒன்றாக கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் மாணவரான (1995) திரு ப. பூபாலன் அவர்கள் சமர்ப்பித்த ''திருமால்புரம்'' என்ற இவ்வாய்வேடு வெளியிடப்படுகிறது.

இந்நூலில் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருமால்புரம் ஊர், கோயில்கள் ஆகியவற்றின் சிறப்பினை ஆய்வுமாணவர் பல்வேறு இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் மூலம் விளக்கியுள்ளார். மேலும் கல்வெட்டில் அக்காலத்திய குற்றங்களையும் அதற்கான தண்டனைகளையும் விவரித்திருப்பது சிறப்பாகும்.

இவ்வாய்வேட்டிற்கு பல புதிய வரலாற்றுச் செய்திகளை அளித்துதவிய முனைவர். அர.பூங்குன்றன் கல்வெட்டறிஞர் இந்நூலின் பதிப்பு பணியில் ஈடுபட்ட கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி.சு.சம்பத் மற்றும் திரு. இரா. சிவானந்தம் ஆகியோருக்கும், D.T.P. மற்றும் அச்சுப்பிழைத்திருத்தம் செய்தளித்த அச்சுப்பிரிவுப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்கள்.

இந்நூல் வெளியிடுவதற்கு நிதியுதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை ஆய்வறிஞர்கள், வரலாற்று ஆர்வலர்கள், ஆய்வுமாணவர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயன்பெற விரும்புகிறேன்.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | |
| 1. | வரலாற்றில் திருமால்புரம் | 1 |
| 2. | இலக்கியத்தில் திருமால்புரம் | 7 |
| 3. | மணிகண்டேஸ்வரர் கோயில் | 10 |
| 4. | செப்புத்திருமேனிகள் | 57 |
| 5. | வழிபாடுகளும் விழாக்களும் | 65 |
| 6. | பிறகோயில்கள் | 68 |
| 7. | கல்வெட்டுச் செய்திகள் | 78 |
| 8. | நாடும் ஊரும் | 80 |
| 9. | சோழர்கால அரசியல் வரலாறு | 84 |
| 10. | வேந்தரும் வேளாண்களும் | 90 |
| 11. | கொடைகள் | 93 |
| 12. | திருமால்புரம் கோயில் நிலங்கள் | 100 |
| 13. | நீர்ப்பாசன அமைப்பு | 102 |
| 14. | மூவேந்த வேளாண் | 103 |
| 15. | குற்றங்கள், தண்டனைகள் | 105 |
| 16. | திருமால்புரம் இன்றைய நிலை | 118 |


முன் அட்டை: திருமால்புரம் மணிகண்டேஸ்வரர் கோயில் வாயிற் கோபுரம்

பின் அட்டை: நடராசர் செப்புத் திருமேனி கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு

# வரலாற்றில் திருமால்புரம்

## *தொண்டை நாடு*

தொண்டை நாடு என்பது பழைய செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியையும், தன் அகத்தே கொண்டது. இதில் சிறப்புற்று விளங்கிய தலைநகரம் காஞ்சிபுரம். இதன் சிறந்த துறைமுகப்பட்டினம் மல்லை (மகாபலிபுரம்). இந்நாட்டிற் சிறப்புடைய பெரிய ஆறு பாலாறு. இந்நாட்டில் மலைகள், மிகுதியாக உண்டு. வேங்கடம், காளத்தி, நகரி, நாகலாபுரம், இராமகிரி, வேலூர், செங்கற்பட்டு, சோழசிங்கபுரம், முதலிய பல இடங்களிலும் மலைத்தொடர்கள், தனிமலைகள், குன்றுகள் ஆகியவற்றைக் காணலாம். இந்நாட்டின் பல பகுதிகளில் பெருங்காடுகளும், சிறிய காடுகளும் இருக்கின்றன. ஆங்காங்கு ஒன்றும் விளையாத பாலை நிலங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கு இடையே கண்ணுக்கு விருந்தளிக்கும் பசிய வயல்கள் காட்சி அளிக்கின்றன. சுருங்ககூறின் தொண்டை நாட்டின் ஐந்திணை வளங்களையும் கண்டு களிக்கலாம்.

## *பெயர்க்காரணம்*

தொண்டைநாடு முதலில் குறும்பர் நிலம் எனப்பெயர் பெற்றிருந்தது. குறும்பர் தம் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு பொழுது போக்கினர். அவர்களே தங்கள் நாட்டை இருபத்து நான்கு கோட்டங்களாக வகுத்துக்கொண்டார்கள். அக்குறும்பர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகருடன் கடல் வாணிபம் நடத்தினர். பிற்காலத்தில் ஆதொண்ட சக்கரவர்த்தி என்பவர் குறும்பரை வென்று நாட்டைக் கவர்ந்தான் அன்றுமுதல் அந்நாடு அவன் பெயரால் "தொண்டைநாடு" என வழங்கலாயிற்று என்பது செவிவழிச் செய்தியாகும்.

"கரிகாற் சோழன் சோழன் தொண்டை நாட்டைக் கைப்பற்றிக் காடு கெடுத்து நாடாக்கினான் பிறகு தொண்டைக்கொடியால்

சுற்றப்பட்டுக் கடல் வழிவந்த (நாகர் மகளுக்கும் சோழ மன்னனுக்கும் பிறந்த) இளந்திரையன் என்பவன் ஆண்டதால் தொண்டை நாடு" எனப்பெயர் பெற்றது என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன.

## கரிகாலன் இளந்திரையன்

தொண்டைநாடு" என்ற பெயர் எக்காரணம் பற்றி வந்தது என்பது திட்டமாகக் கூறுதற்கில்லை. ஆனால் சங்க காலத்தில் அந்நாடு சோழர் ஆட்சியில் இருந்தது என்பதை மட்டும் திட்டமாகக் கூறலாம். கி.பி. முதல் நூற்றாண்டினன் என்று கருதத்தகும் கரிகாலன் இமயம் செல்லும் பொழுது வேடன் ஒருவன் எதிர்ப்பட்டுக்காஞ்சி நகரத்தின் சிறப்பைக் கூற, அச்சோழர் பெருமான் காஞ்சி நகரைத் தனதாக்கிக் குன்று போன்ற மதிலை எழுப்பினான். தொண்டை நாட்டில் பலரைக் குடியேற்றினான் என்பது புராணக் கூற்றாகும். "இளந்திரையன் என்பவன் காஞ்சியைத் தலைநகராககொண்டு தொண்டைநாட்டை ஆண்டு வந்தான் அவன் பாண்டவரைப் போலப் பகைவரை வென்றவன் தொண்டையர் குடியிற் பிறந்தவன், பகைவர் அரண்களை அழித்தவன் நான்கு குதிரைகள் பூட்டிய தேரை உடையவன் சிறந்த கொடையாளி என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

## தொண்டைநாட்டு சிவத்தலங்கள்

காஞ்சி, திருமுல்லைவாயில், திருவான்மியூர், திருவொற்றியூர், திருஇடைச்சுரம், திருமாற்பேறு, திருஒத்தூர், திருஆலங்காடு, திருவூறல் போன்ற சிவத்தலங்கள் அப்பர் வாழ்ந்த காலமாகிய 7-ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே உயர்நிலையில் இருந்தன. அவை நாயன்மார் காலமான பல்லவர் காலத்தின் பின்னும் சிறப்புற்றன. ஆதித்த சோழன் மரபினர் காலத்தில் கற்றளிகளாக மாறிவிட்டன. பூசை, விழாக்கள் முதலிய சிறப்புகளில் செம்மையுற்றன. பாடல் பெற்ற கோயில்களைப் போலவே தொண்டை நாட்டுப் பிற (பல்லவர்-சோழர்கால) கோயில்களும் நாளடைவில் சிறப்புப்பெற்று பொதுமக்கட்குச் சமய உணர்ச்சியை ஊட்டி வந்தன.

## தொண்டைநாட்டுக் கோட்டங்கள்

தொண்டை நாடு எப்பொழுது யாரால் 24 கோட்டங்களாக பிரிக்கப்பட்டது என்பது திட்டமாக கூற முடியாது. இருபத்து நான்கு கோட்டங்களின் பெயர்களும், பல்லவர் காலத்தில் வழங்கியவாறே

பிற்காலச் சோழர் காலத்திலும் வழங்கி வந்தன. அவ்விருபத்து நான்கு பிரிவுகளாவன :-

1. புழல் கோட்டம்
2. ஈக்காட்டுக் கோட்டம்
3. மணவிற் கோட்டம்
4. செங்காட்டுக் கோட்டம்
5. பையூர்க் கோட்டம்
6. எயில் கோட்டம்
7. தாமல் கோட்டம்
8. ஊற்றுக்காட்டுக் கோட்டம்
9. களத்தூர் கோட்டம்
10 செம்பூர் கோட்டம்
11. ஆமூர் கோட்டம்
12. வெண்குன்றக் கோட்டம்
13. பல்குன்றக் கோட்டம்
14. இலங்காட்டுக் கோட்டம்
15. கலியூர்க் கோட்டம்
16. செங்கரைக் கோட்டம்
17. படுவூர் கோட்டம்
18. கடிகூர்க் கோட்டம்
19. செந்திருக்கைக் கோட்டம்
20. குன்றவட்டானக் கோட்டம்
21. வேங்கடக் கோட்டம்
22. வேலூர்க் கோட்டம்
23. சேத்தூர்க் கோட்டம்
24. புலியூர்க் கோட்டம்

என்பன ஆகும்.

## *திருமால்புரம் அமைவிடம்*

இவ்வூர் வேலூர் மாவட்டம் அரக்கோணம் வட்டம் செங்கற்பட்டு - அரக்கோணம் இருப்புபாதையில் திருமால்பூர் இரயில் நிலையத்திலிருந்து 5 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் நடுவே மணிகண்டேசுவரர் எனும் சிவன் கோயில் அமைந்துள்ளது. தொண்டை நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற 32

தலங்களில் பதினோராவதுத் தலமாக விளங்குகிறது. இவ்வூருக்கு அருகே சிறப்பு பெற்ற குருபகவானான தட்சிணாமூர்த்தி ஆலயம் உள்ள கோவிந்தவாடி என்ற ஊர் உள்ளது.

## *ஊர்ப்பெயர்க் காரணம்*

திருமால் இங்கு சிவபெருமானை வழிபட்டு அவ்வழிபாட்டின் பயனாக அப்பெருமானிடமிருந்து நற்பேறு பெற்றதால் இத்தலத்திற்குத் 'திருமாற்பேறு' என்ற பெயர் சூட்டப்பெற்றது என்றும், திருமால் இறைவனை வழிப்பட்டு பேறு பெற்றதலம், என்பதால் 'மாற்பேறு' என்னும் பெயர் பெற்றது என்றும், திருமால் வழிபட்டுச் சக்ராயுதம் பெற்ற தலமாதலின் இதற்கு 'ஹரிச்சக்ரபுரம்' என்றும் கல்வெட்டுகளில் 'திருமாற்பேறு' என்றும் தேவாரப் பதிகங்களில் 'திருமாற்பேறு' என்றும் வழங்கப்பட்டுள்ளதால் திருமால்பேறு பெற்ற புராண அடிப்படையிலேயே இவ்வூருக்கு 'திருமாற்பேறு' என்ற பெயர் வழங்கலாயிற்று எனக் கூறலாம்.

## *கோயில் புராணம்*

குபன் என்னும் அரசன் பொருட்டாக திருமால் ததீசி முனிவரின் மீது தமது சக்கராயுதத்தை ஏவினார். அது அவரது வஜ்ர உடலைத்தாக்க முடியாமல் வாய்மடிந்தது. அதனால் திருமால இத்தலத்தை அடைந்து அம்பிகை பூசித்த சிவலிங்கத்தை ஆயிரம் மலர்களால் நாள்தோறும் அர்ச்சித்து சக்கராயுதம் அருள வேண்டினார்.

சிவபெருமான் அவரது பக்தியை சோதிக்க வேண்டி ஒரு நாள் திருமால் கொணர்ந்த ஆயிரம் தாமரை மலர்களில் ஒன்றை மறைத்தருளினார். அர்ச்சிக்கும் போது ஒருமலர் குறைவதைக் கண்டு தனது கண்ணைப் பறித்து கண்மலரை இறைவன் திருவடியில் அர்ச்சித்தார். இறைவன் உளம் மகிழ்ந்து திருமால் முன் தோன்றி, தாமரை மலருக்காக உன் கண்ணை எடுத்து அர்ச்சித்தமையால் உனக்கு தாமரை போலும் கண் கொடுத்தோம். அன்று முதல் திருமாலுக்கு 'தாமரைக் கண்ணன்" என்னும் பெயர் எய்தியது. அருள் செய்து நீ வேண்டிய சக்கரத்தையும் அருளினோம் என்று காட்சி நல்கினார். அச்சக்கரத்தை பெற்றுக் கொண்ட திருமால் இருவரங்களைச் சிவபெருமானிடம் கோரினார். அவற்றுள் ஒன்று எவரொருவர் இக்கோயிலில் வழிபாடு ஆற்றுகிறாரோ அவருக்கு இம்மை மறுமைப் பயன்கள் அனைத்தும் சிவபெருமான் அளிக்க வேண்டும்

மற்றொன்று இத்தலம் அன்று முதல் தம்மை நினைவு கூரும் வகையில் திருமாற்பேறு என்னும் பெயரில் விளங்க வேண்டும் என்பதாகும். இவ்விரு வரங்களையும் சிவபெருமான் மணமுவந்து அருளினார். இதை உறுதிப்படுத்தும் வகையில் திருமாலின் உற்சவத் திருமேனி ஒன்றில், ஒரு கையில் தாமரை மலரும், மறுகையில் 'கண்' ணும் கொண்டு நின்ற கோலத்தில் இருப்பதை இக்கோயிலில் காணலாம்.

## *பல்லவர் காலம்*

இவ்வூரிலுள்ள திருமால் கோயில் பல்லவர் காலக் கட்டடப் பாணியில் அமைந்துள்ளது. மேலும் இவ்வூரிற்கு அருகிலுள்ள கோனேரின்மை கொண்டான் கோயில் எதிரே நான்கு உருளைத் தூண்கள் காணப்படுகின்றன. இத்தூண்களும் பல்லவர் கால அமைதியில் உள்ளன. எனவே இவ்வூர் கோயில்கள் பல்லவர் காலத்தில் தொடர்புடையது எனலாம். ஏனெனில் பல்லவர் காலத்தில் தோன்றிய சமயக்குரவர்களான நாயன்மார்கள் பாடியுள்ளனர். காஞ்சிக்கு அருகில் உள்ள பாடல் பெற்ற தலமாகச் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. இவ்வூரில் இந்திய தொல்லியல் அளவீட்டுத்துறை பராமரிப்பில் உள்ள கோனார் கோயில் தூண்கள் பல்லவர் கலை அமைப்புக்களைப் பெற்றுள்ளது என்றும், இவ்வூரிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள கோனேரின்மை கொண்டான் கோயிலின் எதிரில் ஒரே அமைப்பும், அளவும் கொண்ட மூன்று உருளை வடிவமான கற்றூண்கள் காணப்படுகின்றன. இதில் உள்ள அமைப்பு பல்லவர் காலத்திய கலையை பெற்றுள்ளது. எனினும் இங்கு பல்லவர் காலக் கல்வெட்டுகள் எதுவும் கிடைக்கவில்லை.

## *சோழர் காலம்*

திருமால்பூர் கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் அனைத்தும் சோழர்களுடையதாகும். இங்குள்ள கல்வெட்டுகள் அனைத்தும் படியெடுக்கப்பட்டு இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் மொத்தம் 83 கல்வெட்டுகள் வெளிவந்துள்ளன. அனைத்து சோழ மன்னர்களின்

கல்வெட்டுகளும் இங்கு படியெடுக்கப்பட்டுள்ளன. இவ்வூர் சோழர்காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியுள்ளது. இக்கல்வெட்டுகள் மூலம் சோழர்களின் ஆட்சி காலத்தில் அரசுத்துறை மிகச் சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. பல்வேறு வகையான அதிகாரிகள், ஊர் சபைகள், கோயில்கள் ஆகியவற்றை நிலைநாட்டினர் இதனால் திருமாற்பேறு வரலாற்றில் சிறப்புப்பெற்று விளங்கியது.

# இலக்கியத்தில் திருமால்புரம்

திருமாற்பேறு இறைவன் மீது திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களும், திருநாவுக்கரசர் நான்கு பதிகங்களும் பாடியுள்ளார்கள். சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் இவ்விரு அடியார்களின் வரலாறு குறிக்கும் போது, இவர்கள் காஞ்சிபுரம் மேற்றருளி இறைவனை வணங்கி, பாலி ஆற்றின் தென்கரை வழியாக திருமால்புரம் வந்து இறைவனைக் கண்டு பதிகங்கள் பாடினர் என்று குறிப்பிடும் போது, மூன்று பாடல்களில் திருமாற்பேற்றினை குறிப்பிடுகின்றார். சம்பந்தர் பாடிய பதிகத்தை குறிப்பிடும் போது, 'மொழி மாலை' என்று சிறப்பித்து கூறுகின்றார்.

திருஞான சம்பந்தர் பாடிய இரண்டு பதிகங்களிலும் ஏழாவது பாடல் கிடைக்கவில்லை. சம்பந்தர் மேலும் திருப்புங்குறுத்தியைக் குறிப்பிடும் போது மாற்பேறினையும் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசரின் பதிகங்கள் நான்கில், 1. திருவிருத்தமாக இரண்டு பாடல்களை மட்டுமே உடையது. இரண்டு பதிகங்கள் திருக்குறுந்தொகை அமைப்பிலும் ஒரு பதிகம் திருத்தாண்டக அமைப்பிலும் அமைந்துள்ளது.

## *திருஞான சம்பந்தர் பதிகங்கள்*

சம்பந்தர் பதிகங்களில் முதல் பதிகம் திருமாற்பேறின் சிறப்பினை குறிப்பிட்டு, இத்தகைய சிறப்புடைய ஊரின் இறைவனை வணங்குங்கள் என்று சொல்லுவது போல் அமைந்துள்ளது. இரண்டாம் பதிகம் இத்தகைய சிறப்புடைய இறைவன் இருப்பதால் சிறந்து விளங்குகின்ற திருமாற்பேறு என்ற ஊரை புகழ்கின்றது. முதல் பதிகத்தில் இவர் திருமாற்பேறு சேருநிறைந்த வயல்கள் உள்ள ஊர், பலி ஆற்றின் தென்கரையில் உள்ள ஊர், மடைகளில் நீர் நிறைந்துள்ள ஊர், திருமால் வழிபடுகின்ற ஊர் என்று ஊரை போற்றுகிறார். இறைவனை மாசில்லாமணி, திருநீறு பூசிய உடலை உடையவர், நஞ்சு உண்ட கழுத்தினை உடையவர், படம் எடுத்து ஆடும் அரவத்தினை உடையவர், இராவணனை அடக்கி வரம் தந்தவர், மாலும், அயனும் அடி முடிகாணாத அண்ணல் என்று திருமாற்பேறு

ஊரின் உருவ அமைப்பினை தெய்வ அமைதிகளில் குறிப்பிட்டுள்ளன. இறைவனை மாற்பேறு அடிகள், திருமாற்பேற்று ஈசன் என்று அழைத்து வணங்குகின்றார். இந்த பதிகத்தில் சமணர்களை ஆடை அணியாமல் புழுதியையும், தூசியையே ஆடையாக கொண்டவர்கள் என்று பழித்து பேசுகிறார். இரண்டாவது பதிகத்தில் திருமாற் பேற்றினை "வளர் நகர் மாற்பேறு" "மலையவர் வளவன் நகர் மாற்பேறு" மறையவன் வளநகர் மாற்பேறு" என்று நகரமாக குறிப்பிடுகின்றார். இறைவனை கபாலம் ஏந்தியவன், திருநீர் அணிந்தவன், உமை ஒரு பாகன், பிறப்பு அறுப்பவன், காலனை கொன்று உகந்தவன், பிறை அணி, சடைமுடி, உடையவன், கரைமிடற்றண்ணல், வெண்மதி அரவம் சூடியவன் என்று புகழ்கின்றார். மேலும் செந்தாமரை உடைய திருமாலுக்கும், வெண்தாமரை உடைய பிரம்மனுக்கும் தலைவன் என்று போற்றுகிறார். இப்பதிகத்தில் குளிக்காத உடலை உடைய சமணர்கள் என்று சமணர்களையும் சாடுகிறார்.

## *திருநாவுக்கரசர் பதிகம்*

திருவிருத்தம் பதிகத்தில் மாணிக்கு உயிர் கொடுக்க காலனை உதைத்தவன் என்று மார்கண்டேயன் கதை சொல்லப்படுகிறது. கருடனின் மீது ஊர்ந்து செல்லுகின்ற திருமாலுக்கு காணக்கிடைக்காத இவருடைய திருவடிகள், இவ்விறைவன் மீது பக்தி கொண்டால், குருடருக்கும், காணக் கிடைக்கும் என்றார். குறுந்தொகை பதிகத்தில் இவ்விறைவனை வணங்குங்கள் குறைத்தீரும் என்று ஒவ்வொரு பாடலிலும் கூறுகின்றார். திருமால் சக்கராயுதம் வேண்டி மலர்களைக் கொண்டு வணங்கி இவ்வூர் இறைவன் வழிப்பட்டால் வினைகள் தீரும். ஆலமர நிழலில் இருந்து நால்வருக்கு உரை செய்தவன். மாதொரு பாகன், மழுவை ஏந்தியவன், வேடனாக வந்து விஜயனாகிய அர்ச்சுனனுக்கு அருள்புரிந்தவன். ஆணவத்தால் கயிலை மலையை எடுத்த இராவணனை வருத்தி அருள்புரிந்தவன் என்று இறைவனை புகழ்கின்றார். திருமாற்பேறு முரசுகளின் ஓசையும், மறைவர்களின் வேத ஒலி ஓசையும், நிறைந்த பொழில்கள் சூழ்ந்த ஊர், மாட வீடுகள் நிறைந்த ஊர் என்று குறிப்பிடுகின்றார். இரண்டாவது குறுந்தொகை பதிகத்தில் இத்தகைய சிறப்புடைய இறைவன் என்று திருமாற்பேறு இறைவனை போற்றுகிறார். சிவனின் நாமத்தை ஓதினால் பயமில்லை என்று நெஞ்சுக்கு கூறுகிறார். இறைவன் நமக்கு இடர்கள் ஏற்பட்ட போது சேமநிதிகள் போல் வந்து உதவுவார். அதுவும் மாத்திரை (நொடி) பொழுதில் உதவுவார். நோய்ப்பிணி அகற்றும் மருத்துவர்,

வாட்டம் தீர்ப்பவர். இவர் செம்பொன் போன்ற நிறத்தை உடையவன், எருதின் மீது ஏறி வருபவர் என்று சிவபெருமானின் திருவுருவ அமைதிகளையும் குறிப்பிடுகிறார்.

இவரது நான்காவது பதிகமாகிய திருத்தாண்டகத்தில் திருமாற்பேற்று இறைவனை "சென்றடைந்தேன் நானே" என்று ஒவ்வொரு பாடலும் முடியும்படி பாடுகிறார். இதனில் இறைவன் நீலகண்டன், காலனைக் காய்ந்தவன், கயிலை மலையினன் அவர்கள் தலைவன், செம்விளக்குன்று கம்பன், கச்சி கொம்பன், திகழ்ஒளி கொம்பு பொன் துளைக்கின்ற துளைபோன்றவன் என்று சிவனின் திருவுருவ அமைதிகளைக் குறிப்பிடுகின்றார். மேலும் இவர் பிற ஊர்களில் பாடிய நான்கு பாடல்களில் திருமாற் பேற்றிலும் குறிப்பிட்டு பாடியுள்ளார்.

## *சேக்கிழார்*

சேக்கிழார் பெரிய புராணத்தில் சம்மந்தர் வரலாறு கூறுகின்ற போது பாலி நதியின் தென்கரையில் உள்ள திருமாற்பேற்றின் இறைவன் மீது மொழி மாலை சாத்தினார் என்று ஒரு பாடலிலும் "திருப்பதிகப் பெரும்பினையில் அணிவித்தார்" என்று மற்றொரு பாடலிலும் குறிப்பிட்டுள்ளார். அப்பரை குறிப்பிடும் பொழுது "அப்பர் பாடிய பதிகத்தை" தமிழ் பாடினார் என்று குறிப்பிடுகின்றார். இவ் திருமாற்பேற்றினை நகரம் என்றும், பதி என்றும் காட்டுகிறார்.

# மணிகண்டேஸ்வரர் கோயில்

## கோயில் அமைவிடம்

மணிகண்டேஸ்வரர் கோயில் ஊரின் மையத்தில் ஒரு ஏக்கர் இருபது செண்ட் நிலப்பரப்பில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. நமக்கு முதலில் தெரிவது இராஜகோபுரம், இது ஐந்து நிலைகளுடன் காணப்படுகிறது. தூண்கள் உள்ளது போல் இக்கோபுரத்தின் சாலை, கூடம், நீடம் ஆகிய அமைப்புகள் சுதையால் உள்ள பழமை மாறாத நிலையில் கோபுரத்தின் ஐந்து நிலைகளிலும் ஒவ்வொரு நிலையிலும் வாயிற் முன்பு இரண்டு பக்கங்களிலும் துவாரபாலகர்கள் நின்ற நிலையில் காட்சி அளிக்கின்றனர். கோபுரத்தின் மேலே ஏழு கலசங்கள் மிகவும் வனப்புடனும், புதிய பொலிவுடனும் காட்சி அளிக்கின்றன. கோபுரம் மிகவும் பழமையாக உள்ளதால் சுதையினால் செய்யப்பட்ட சிற்பங்கள் சிதைந்து காணப்படுகின்றன. மேலும் சிற்பங்களின் இடையே சிற்பத்தின் அழகையும் கோபுரத்தின் வலிமையையும் சிறுசிறு செடிகளும் பாசமும் மறைக்கின்றது. இதனை அடிக்கடி அப்புறப்படுத்துவது சிரமம், காரணம் கோபுரம் 72 அடி வரை மிகவும் உயரமாக உள்ளது. முகப்பில் கீழத்தளத்தில் தென்புறம் வலம்புரி விநாயகருக்கு வலது புறமும், சுப்பிரமணியருக்கு இடதுபுறமும் சிறுகோயில்கள் இருக்கின்றன. விநாயகரின் வயிற்றுப் பகுதி சற்று பின்னமடைந்துள்ளது.

கோயிலின் உட்பகுதியில் செல்லும் போது சுவர்க்கல்லில் 'திருமாற்பேறு' என்று பொறிக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் உட்பகுதியில் உபபீடத்தில் விஜயநகரர் சின்னமாகப் பன்றி, கடாரி ஆகியவை வரிப்படமாகப் செதுக்கப்பட்டுள்ளன. இதற்கு சற்று கீழே பசு ஒன்று லிங்கத்திற்கு பால் சொரிவது போன்று உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே இக்கோபுரம் விஜயநகரர் காலத்திய தாகலாம். இங்கு கி.பி. 16, 17 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று உள்ளது.

கோபுரம் சுமார் 4 அடி உபபீடத்தின் மீது அமைந்துள்ளது. உபபீடத்தின் மீதுள்ள அதிட்டானப் பகுதி, ஜகதி, முப்பட்டைக் குமுதம்

கண்டம், பட்டிகை ஆகிய அமைப்புகளைக் கொண்டுள்ளது. கோயிலில் இன்று எஞ்சியுள்ள தொன்மையான கட்டிடப் பகுதிகளில் இதுவும் ஒன்று. திருமாற்பேறு மணிகண்டேஸ்வரர் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், நடராசர் சன்னதி, அம்மன் சன்னதி, நந்தி, பலிபீடம், பள்ளியறை, சோமாஸ்கந்தர் சன்னதி, உட்கோபுரம், இரண்டாம் திருச்சுற்று, மடைப்பள்ளி, வெஞ்சன அறை, வாகன மண்டபம், திருக்குளம், ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. இக்கோயிலில் விநாயகர், சுப்பிரமணியர், அஞ்சனையாட்சியம்மையார் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு உரிய சிற்றாலயங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.

## *கருவறை*

கருவறை சதுர வடிவமானது நடுவே வட்டவடிவமான ஆவுடையார் மீது அமைந்துள்ள இலிங்கம் மணிகண்டேஸ்வரர் என்ற பெயரால் அழைக்கப்பெறுகின்றது. வட்டவடிவமான ஆவுடையார் சுமார் 2 மீட்டர் சுற்றளவும் 1 மீட்டர் உயரமும் உடையது. பீடம் முதல் ருத்ர பாகம் வரை இலிங்க வடிவம் 2 மீட்டர் உயரமுடையது. இலிங்கத்தின் முகத்தில் வடிவமைப்பும் வனப்பு மிக்க இந்த இலிங்க வடிவம் காலத்தால் தொன்மை மிக்கது. மணிகண்டேஸ்வரர் என்ற பெயரில் வழிபாட்டில் உள்ள இந்த 2 இலிங்கம் புகழும் பெருமையும் மிக்கது. இக்கோயிற் கருவறை வாயில் இருபக்கங்களிலும் செப்புத் திருமேனிகள் உள்ளன. கருவறையில் நேரே மூலவர் தரிசனம் சிவலிங்கத்திருமேனி தீண்டாத் திருமேனி. மரக்கால் போன்ற கவசம் அணிவித்து இலிங்கத்தின் ருத்ரபாகத்தை மறைத்தே அபிஷேகம் செய்யப்படுகிறது. காரணம் இலிங்கம் மண்ணால் ஆனது. அவ்வப்போது புனுகுச்சட்டம் சார்த்தப்படுகிறது. இந்த ருத்தர பாகம் கூம்பு வடிவில் உள்ளது. எதிரில் முன்மண்டபத்தில் நந்தியின் உருவம் உள்ளது.

## *கோயில் அமைப்பு*

1.கருவறை, 2. நந்தி, 3. பலிபீடம், 4. நடராசர் சன்னதி, 5. ஆறுமுகன் சன்னதி, 6. வல்லப விநாயகர், 7. திருவழி(திருச்சுற்று), 8. விநாயகர், 9. நந்தி, 10. திருமால், 11. 12. துவாரபாலகர்கள், 13. சூரிய மூர்த்தி, 14. சோளீஸ்வரர், 15. நால்வர் சன்னதி: சுந்தரர், அப்பர், திருஞானசம்மந்தர், மாணிக்கவாசகர் 16. பஞ்சமி பிராமி, கௌமாரி, வராகி, வைஷ்ணவி 17. மாகேஸ்வரி, 18 சோமஸ்கந்தர்

19. பாலகணபதி, 20. உச்சிஷ்ட கணபதி 21. சிதம்பரஸ்வரர், 22. கெஜலஷ்மி, 23. சுப்பிரமணி, 24. திருபள்ளி அறை, 25. வீரபத்திரர், 26. பைரவர், 27. சந்திரன், 28. வலம்புரி விநாயகர், 29. தட்சிணாமூர்த்தி, 30. மகாவிஷ்ணு, 31. பிரம்மா, 32. சண்டிகேஸ்வரர், 33. அஷ்டபுஜ துர்க்கை, 34. நந்திகேஸ்வரர், 35. நவகிரகம், 36. கிணறு, 37. பெரிய நந்தி, 38. கொடி மரம், 39. பலி பீடம், 40. பால அறை, 41. வாகன அறை, 42. யாக சாலை, 43. ஸ்தல விருட்சம், 44. அஞ்சனட்சி அம்மன் சன்னதி, 45. மடப்பள்ளி, 46. 16 கால் மண்டபம், 47. உக்ராணம், 48,49. திருச்சுற்றுகள், 50. நுழைவுவாயில், 51. விநாயகர் சன்னிதி, 52. சுப்பிரமணியர் சன்னதி.

## *கட்டடக்கலை*

கோயில்கள் கருவறை, இடைக்கட்டு, முன்மண்டபம், மஹா மண்டபம், திருச்சுற்று, பரிவாரக்கோயில், கோபுரவாயில் எனப்பல பகுதிகளைக் கொண்டது. கோயிலை எடுப்பதற்கு முன்னர் உரிய நிலத்தைத் தேர்ந்தெடுத்துச் சமன் செய்வர். அங்கு எடுக்கவிருக்கும் கோயிலின் அளவையொட்டி நிலத்தில் ஒரு சதுரம் வரைவர். அதை பக்கத்திற்கு எட்டாக மொத்தம் 64 சதுரங்களாகவோ அன்றி பக்கத்திற்கு ஒன்பது சதுரங்களாக 81 சதுரங்களாகவோ அமைப்பர். இவற்றில் நடுவில் உள்ள சதுரங்களில் திருச்சுற்று, பரிவாரக்கோயில் முதலியவற்றையும் அமைப்பர். இடைப்பட்ட சதுரங்கள் வெளியாக இருத்தல் வேண்டும், இவற்றை "மர்மத்தானங்கள்" என்றும் அங்கு எந்த கட்டடமும் எடுத்தல் கூடாது என்றும் கூறுவர். திருச்சுற்றை நீண்டசதுரமாக அமைக்கச் சதுரத்தை இரட்டிப்பர். ஒவ்வொரு சதுரத்திற்கும் உரிய தெய்வங்கள் யாவை என்று உரிய நூல்கள் குறிக்கின்றன. கட்டடம் எழுப்புவதில் ஆதாரப் பகுதிகளாக உள்ளவை 1. அதிட்டானம் (பீடம்), 2. சுவர்(கால்), 3. பிரஸ்தரம் (கூரை), 4. கிரீவம் (கழுத்து), 5. சிகரம் (தலை) 6. ஸ்தூபி (குடம்) என்பவையாகும். இவ்வங்கங்களை அடி, கால், தோள், கழுத்து, தலை, முடி என மனித உடல் அங்கங்களுக்கு உவமிப்பர்.

## *1. அதிட்டானம் (அடி)*

இது உபானம், ஜகதி, குமுதம், பத்மம், அந்தரி, வாஜணம், பட்டிகை என பல பகுதிகளை உடையது. இவற்றை மாற்றி மாற்றி அமைப்பதால் பல்வேறு வகையான அதிட்டானங்களை அமைக்கலாம்.

அதிட்டானத்தில் சிறப்பாக இருவகை உண்டு. 1."பாதபந்த அதிட்டானம்" (பாதக்கட்டு) என்றும், பத்மபந்த அதிட்டானம் (தாமரைக்காட்டு) என்றும் இருவகைப்படும். அதிட்டானத்தின் கீழ் சிலகோயில்களில் "உபபீடம்" என்னும் பகுதி அமைக்கப்படும். தஞ்சைப் பெருங்கோயில், கங்கை கொண்ட சோழீச்வரம் ஆகிய கோயில்களில் இதைக் காணலாம். கட்டடத்தின் உயரத்தை அதிகப்படுத்துவதற்கும் அழகு அளிப்பதற்கும் உபபீடத்தை அமைப்பர். பல கோயில்களில் உபபீடம் இன்றி அதிட்டானம் மட்டும் அமைக்கப்பட்டிருக்கும் அதிட்டானம் தான் மேலுள்ள கட்டடம் முழுவதையும் தாங்குகிறது.

## *2. சுவர் (கால்)*

அதிட்டானத்தின் மேல் உள்ள பகுதி சுவர் அல்லது கால் என்று அழைக்கப்படும். இப்பகுதி வெறும் நெடுஞ்சுவராக இருந்தால், அழகு இராது. ஆதலின் ஆங்காங்கே அரைத்தூண்களும், கோட்டங்களும், மகர தோரணங்களும் அமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளது. கருவறை உள்ள பகுதியின் எந்தத் திக்குகளில் எந்தக் கோட்டங்களில் எத்தெய்வங்கள் வைக்கப்பட வேண்டும் என்ற நியதி உண்டு.

## *3. பிரஸ்தரம் (கூரை)*

சுவரின் மேல் வரும் கூரையே அறையை மூடும் அங்கமாகும். இது பூதவரி, கொடுங்கை, யாளிவரி என மூன்று பகுதி உடையது. இதன்மேல் ஒன்று, இரண்டு, அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் அமைக்கப்படுவதுண்டு.

## *4. கழுத்து (கிரீவம்)*

மேலே அமைக்கப்படும் தலையின் (சிகரத்தின்) அமைப்பை ஒட்டிக் கழுத்து சதுரமாகவோ வட்டமாகவோ, எண்பட்டையாகவோ, அமைக்கப்படும். இதில் நான்கு திசைகளிலும், நான்முகன், விஷ்ணு, சிவன், முருகன் (அல்லது) இந்திரன் ஆகிய தெய்வங்களின் உருவங்கள் வைக்கப்படும். தென்திசையில் சிவனும், மேற்குதிசையில் திருமாலும், வடதிசையில் நான்முகனும் பெரும்பாலும் காணப்படும். கிழக்குத்திசைகளில் சில இடங்களில் முருகனும், சில இடங்களில் இந்திரனும் காணப்படுவதுண்டு. இவை தவிர குறிப்பிட்ட மாற்றங்களை

உடைய வேறு சில கோயில்களும் காணலாம். இடைப்பட்ட பகுதிகள் வெளியாக இருக்கும் (அல்லது) திசைக்காவலர்களின் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

### *சிகரம் (தலை)*

கழுத்துக்கு மேல் அமையும் பகுதியைச் சிகரம் என்று அழைப்பர். இது சதுரமாகவோ, எண்பட்டையாகவோ, வட்டமாகவோ, தூங்கானை மாட வடிவிலோ காணப்படும். சிகரத்தின் அமைப்பைக் கொண்டு கோயிலைப் பல்வேறு வகையாகப் பிரிப்பர். எண்பட்டைச் சதுரமாக இருந்தால் அதைத் 'திராவிட சிகரம்' என்றும், கருவறையின் மேல் நிலைகளில், ஒன்றின் மேல் ஒன்றாக இரண்டு கருவறைகளுமாக மூன்று கருவறைகளுள்ள கோயில்கள் உண்டு. மாமல்லபுரத்திலுள்ள தர்மராஜ இரதம், காஞ்சியிலுள்ள வைகுந்தநாதர் கோயில், உத்தரமேரூரிலுள்ள சுந்தரவரதர் கோயில் முதலியவற்றில் இதுபோல் மூன்று கருவறைகளைக் காணலாம். கீழ்நிலையில் கருவறையின்றி மேல் நிலையில் மட்டும் கருவறை அமைக்கப்பட்டால் அதை ''மாடக்கோயில்'' என்பர். நின்று உறங்கும் யானை போல் அமைக்கப்பட்ட கோயிலைத், ''தூங்கானை மாடம் என்பர். இது தவிர வேறு சில அமைதிகள் உடைய கோயில்களும் உண்டு. கருவறையும், மேலுள்ள கட்டடப்பகுதியும் ''விமானம்'' எனவும் ஸ்ரீகோயில் எனவும் அழைக்கப்படும். வாயிலை அலங்கரிக்கும் கட்டடத்தைக் ''கோபுரம்'' என அழைப்பர். கருவறை உள்ள கட்டடத்தைக் கோபுரம் என்று அழைக்கக் கூடாது.

வாயிலை அலங்கரித்து நிற்கும் அழகிய கட்டடப் பகுதிக்கு ''கோபுரம்'' என்று பெயர். இது பல நிலைகளை உடையதாய் இருக்கும் ஏழுநிலை, ஒன்பது நிலை முதலிய பலநிலைகளை உடைய கோபுரங்கள் உண்டு. சதுரமாக இருந்தால் அதை நாகர சிகரம் என்றும், வட்டமாக இருந்தால் வேசர சிகரம் என்றும் அழைப்பர். இப்பெயர்கள் உருவங்களை அறிந்து கொள்ள இடப்பட்ட இடுகுறிப் பெயர்களாகும். இவ்வமைப்பு அனைத்தும் தமிழகத்தில் காணப்படுகின்றன.

## குடம்

சிகரத்தின் மேல் குடம் போலும் அதன் மேல் குவிந்த தாமரைப்போலும் உள்ள பகுதியைக் குடம், கலசம், ஸ்தூபி என்றழைப்பர். இது கல்லாலோ, சுதையாலோ, உலோகத்தாலோ செய்யப்பட்டிருக்கும்.

## நிலை (தளம்)

பிரஸ்தரத்திற்கு மேல் ஒன்று, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டநிலைகள் அமைக்கப்படுவதுண்டு. ஒரு நிலை உள்ள கோயிலைச் சிறுகோயில் (அல்ப பிராஸாதம்) என்று அழைப்பர். பிற கோயில்களை நிலைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, "இருநிலை விமானம்" மூன்று நிலை விமானம்" என்று பெயரளிப்பர். ஒவ்வொரு நிலையிலும் சாலைகளும், கூடங்களும், மாலைப் போல் சுற்றியமைக்கப்பட்டிருக்கும். சதுர அமைப்புடையதைக் கூடமென்றும் அழைப்பர். சில கோயில்களில் மண்டபங்களை எடுக்க அதிட்டானம், கால், பிரஸ்தரம் ஆகிய மூன்று பகுதிகளே தேவைப்படும். மண்டபங்கள் கருவறையின் முன் இணைக்கப்பட்டிருந்தால் அதை "முன் மண்டபம்" என்றும் அதுவே பெரிய அளவிலிருந்தால் "மகா மண்டபம்" என்றும் அழைப்பர். கோயிலைச் சுற்றி எடுக்கப்பட்ட சுவருக்குத் திருச்சுற்று மதில் என்றும் அதையொட்டி மாளிகை எடுக்கப்பட்டிருந்தால் அதைத் "திருச்சுற்று மாளிகை" என்றும் அழைப்பர்.

## சோழர் காலம்

சோழர் காலத்தில் விஜயாலயன் காலம் தொடங்கி ராஜராஜன் காலம் வரை கோயில் ஒரு குறிப்பிட்ட வகை கட்டடம் எனலாம். இக்காலத்தில் பெரும்பாலான கோயில்கள் பல்லவர் கால இறுதியில் எந்த அமைப்பில் இருந்தனவோ அதை போலவே அமைக்கப்பட்டன. பாடல் பெற்ற பல கோயில்கள் இதற்கு முன்னர் செங்கல்லால் கட்டப்பட்டவையாய் இருந்தன. அவை இக்காலத்தில் முற்றும் கருங்கல்லால் மாற்றி அமைக்கப்பட்டன. இவை கற்றளிகள் என அழைக்கப்பெற்றன. கி.பி. 9,10 - ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட சோழர் கோயில்கள் அதிக உயரமில்லாவிட்டாலும் கலை அழகு மிகுந்தவை. இவற்றில் பலவற்றின் அடிப்பகுதியில் (அதிட்டானத்தில்) இராமாயணம், சிவபுராணக் காட்சிகள் சிறுசிறு சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் மிகச்சிறியவையாகக் காணப்பட்ட போதிலும் ஒப்பற்ற கலைப்படைப்புகளாகும்.

## *விமானம்*

சிவன் கோவில் அதிட்டானம் உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம், வேதிகை ஆகிய பகுதிகளை கொண்டுள்ளது. கருவறையின் வெளிப்புறச்சுவரில் தேவ கோட்ட மாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றி அழகிய உருவங்கள் எட்டு(எண்) திசைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. வாயில்படியின்மேல் ரிசபத்தின்மேல் சிவனுடன் பார்வதி உருவம் உள்ளது. வலதுபுறம் விநாயகரும் இடதுபுறம் முருகனும் அமைக்கப்பட்டுள்ளனர்.

## *அர்த்த மண்டபம்*

கருவறை முன் அர்த்த மண்டபம் நீண்டுள்ளது. இது சதுர வடிவமானது. அர்த்த மண்டபத்தின் நந்தி பீடத்தின் மீது காலை மடித்தவாறு தலையை நன்கு தூக்கியவாறு அமர்ந்த நிலையில் காட்சி அளிக்கிறது. அதன் தலையில் மணிகளும் கழுத்தில் மணி உடன் கூடிய மாலையும் சேர்ந்தவாறு கல்சிற்பம் அழகு செய்யப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்தில் வடக்கு திசையில் நடராசர் சன்னிதியும் தெற்கில் திருவழியும், வடகிழக்கில் ஆறுமுகன் சன்னிதியும் தென்கிழக்கில் வல்லபவிநாயகரும் தென்மேற்கில் விநாயகரும் பத்துகால்களுடன் காட்சிதருகின்றனர். இது அற்புதமான காட்சியாக அமைந்துள்ளது. மண்டத்தின் உள்ளே நான்கு அழகிய கல் தூண்களில் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பிரம்மன், திருமால், ஆறுமுகன், தட்சிணாமூர்த்தி அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பார்வதி, வீர ஆஞ்சநேயர், வீரபத்திரன், பைரவர், கிருஷ்ணன் போன்றவர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையிலுள்ள சண்டேஸ்வரர் சன்னதிக்கு நேரெதிரில் திருமால் தன்னுடைய பின்கைகள் இரண்டினுள் ஒன்றில் சங்கும், மற்றொன்றில் சக்கரமும் ஏந்தி முன்னிருகைகளையும் தம் மார்புவரையில் உயர்த்திக் கூப்பி மணிகண்டேஸ்வரரை வணங்கிக் கொண்டு நிற்கும் கோலத்தில் உள்ளார். அந்நிலையில் மணிகண்டேஸ்வரருக்கு அவர் அருச்சணை புரியத் தம்முடைய உள்ளங்கையில் தாமரை மலரை ஏந்தியுள்ளார். திருமால் திருவுருவத்திற்கு முன் சிறிய வடிவிலான நந்திதேவரின் திருவுருவம் மணிகண்டேஸ்வரரை நோக்கியவாறுள்ளது. வல்லப விநாயகர் ஒருபுறம் பத்து கரங்களுடன் காட்சிதருகின்றார். இது அபூர்வமான அமைப்பாகும். மறுபுறம் சண்முகன் உள்ளார்.

## *துவார பாலகர் - 1*

சிவன் கோயிலின் அர்த்த மண்டப வாயிலின் வடதிசையில் நிற்கும் துவாரபாலகர், இடதுகாலை இருக்கையில் ஊன்றி, வலது முழங்கால் வரை மடித்து முன்புறம் குறுக்காக நிறுத்தி, இடுப்பை இடப்புறம் வளைத்து, முகத்தை வலப்புறம் சாய்த்து நின்றகோலத்தில் வாயிலைக் காத்து நிற்கிறது. துவாரபாலகரின் மேல் வலக்கை திரிசூலத் தண்டையும், இடக்கை டமரையும் ஏந்தியுள்ளன. கீழ் வலக்கை மேல் நோக்கி வியக்கும் கரமாக அமைந்து தர்ஜனை முத்திரையை காட்டியுள்ளது. கீழ் இடக்கை நாகம் சுற்றிய கதாயுதத்தின் மேல் அமைந்துள்ளது.

சடைமகுடம், சிரச்சக்கரம், செவிப்பூ, மகர குண்டலங்கள், வட்டக் குழைகள், சரப்பளி, மலர் பதக்கம் கோத்த இரட்டை வட முத்து மாலை, தோள் மாலை, மலர் முகப்புடைய கேயூரம், காப்பு, வங்கி, இலைகளுக்கு முகப்புடைய இடைக் கச்சை, மணிகள் கோத்த இடைவார், குறங்குசெறி, தொடை மணி, தொடை மாலை, தண்டை பாதசரம் ஆகிய அணிகள் துவாரபாலகரை அலங்கரிக்கின்றன.

இவ்வுருவம் பீடம் முதல் முடிவரை 6½ அடி உயரமும் தோள் அகலம் 3 அடி கொண்டும் விளங்குகிறது. இதன் காலம் கி.பி.15-16ஆம் நூற்றாண்டு.

## *துவார பாலகர் - 2*

அர்த்த மண்டபத்தின் இடதுதிசையில் மற்றொரு வாயிற் காவலர் உருவம் காணப்படுகிறது. இவ்வுருவம் வட்டமான பீடத்தின் மேல் வலதுகாலை ஊன்றி இடதுகாலை மடித்து முன்புறம் குறுக்காகநிறுத்தி நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது.

மேல்வலக்கை கதாயுதத்தையும் மேல் இடக்கை பாசக் கயிறையும், கீழ்வலக்கை எச்சரிக்கும் கரமாக அமைந்து தர்ஜன்ய முத்திரையும் காட்டி நிற்கின்றன. இடக்கை நாகம் சுற்றிய நீண்ட கதாயுதத்தின் மேல் அமைந்துள்ளது. வாயிற்காவலரின் இவ்வுருவம் கரங்களால் முத்திரை காட்டி தலையை வலப்புறம் திருப்பிக் கூரிய கடைவாய்ப் பற்களுடன் திறந்தவாயும் புடைத்த மூக்கும் விரிந்த

கண்களும், தூக்கிய புருவமும், தனித்து நிற்கும் கண்களும் கொண்டு செங்குத்தான ஜடா மகுடம் தரித்து மிகப் பொலிவாகக் காட்சி அளிக்கிறது.

இதன் தலையை அலங்கரிக்கும் ஜடா மகுடம் வேலைப்பாடு மிக்கதாகத் திகழ்கிறது. பின் தலையில் வட்டமான சிரச்சக்கரம் அணி செய்கிறது. இவ்வுருவம் பெரியதாக இருப்பினும் அணிகலன்களும், ஆடையும் நிறைந்து நேர்த்தியான வேலைப்பாடு மிக்கதாகத் திகழ்கிறது. துவாரபாலகரின் திரண்ட தோளும், விரிந்த மார்பும் வலுவான உடற்கட்டும் உறுதியான அங்கங்களும் கை, கால், முட்டி, எலும்புகளும், நரம்புகளும், கூட நன்கு வெளிப்படும் வகையில் கவனமாகச் செதுக்கப்பட்டுள்ள சிற்பியின் கலைத்திறன் பெருமைக்கும், போற்றுதலுக்கும் உரியது. இவ்வுருவம் பீடம் முதல் முடிவரை 6 ½ அடி உயரமும், தோள் அகலம் 3 அடி கொண்டும் விளங்குகிறது. இதன்காலம் கி.பி.16 – 17ஆம் நூற்றாண்டு.

## *சூரியன்*

இவ்வுருவம் திருச்சுற்று மாளிகைப் பத்தியின் தென்கிழக்கு பகுதியில் மேற்கு நோக்கி அமைந்து உள்ளது. பரிவாரத் தெய்வங்களில் ஒன்றான சூரியனது உருவம் உயர்ந்த பீடத்தின் மீது இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் செம்மையாகச் செதுக்கப்பட்டுள்ளது. இரண்டு கரங்களிலும் தண்டுடன் கூடிய தாமரை மலரைக் கொண்டுள்ளது. தலையைக் கிரீடம் மகுடம் அலங்கரிக்கிறது. தலையின் பின்புறம் வட்டமான ஒளிவட்டம் அமைந்து எழிலூட்டுகிறது. பின் தலையில் சிரச்சக்கரம் காணப்படுகிறது. நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப் பட்டம் வனப்பூட்டுகிறது. காதுகளில் குண்டலங்கள் அலங்கரிக்கின்றன. கழுத்தில் கற்கள் பதித்த அட்டிகையும் மலர்ப் பதக்கம் கோத்த மூன்று வடமுத்து மாலையும் எழிலூட்டுகின்றன. இடது தோளிலிருந்து கீழ் வயிற்றை நோக்கிப் புரிநூல் ஓடுகிறது.

தோள்பட்டை மீது மெல்லிய தோள்மாலையும் மேல் கைகளில் கேயூரமும், பிரிந்து நிற்கும் தோள்களின் இடையே சரிந்து தொங்கும் மணிக் குஞ்சமும் முன் கைகளில் காப்பும், சூரியனை அலங்கரிக்கின்றன. மேல் வயிற்றில் உதரபந்தக் கச்சையும். இடையில் இருந்து முழங்காலுக்குக் கீழ்வரை அலை, அலையான மடிப்புடைய

ஆடையும் இடையின் பக்கங்களில் கணுக்கால் வரை சரிந்து நிற்கும் அழகிய ஆடைக் கட்டும் கால்களில் தண்டையும், பாதசரமும் இவ்வுருவை அணி செய்கின்றன. இச்சிற்பத்தின் உருவ அமைதி, நிற்கும் நிலை, எடுப்பான தோற்றம் ஆடை அணிகளின் தன்மையும் மிகவும் அழகாக உள்ளது. இந்த சிலையின் உயரம் பீடம் இல்லாமல் 2 அடி தோள் அகலம் 1 அடி காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டு.

## *சோளீஸ்வரர்*

இவ்வுருவம் திருச்சுற்று மாளிகையின் பத்தியில், கருவறைக்கு தென்கிழக்கில் சூரியனுக்கு பக்கத்தில் அமர்ந்துள்ளது. இச்சிலையின் உருவம் மேற்கு நோக்கியவாறு உள்ளது. இதன் முன்பு உள்ள நந்தி கிழக்கே இலிங்கத்தை பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறிய நந்தி தன்னுடைய முன்னிருகால்களை மடித்தும் பின்னிரு கால்களை மடக்கியும் படுத்த நிலையில் உள்ளது. இது சதுரமான பீடத்தில் வட்ட அமைப்பின் மீது உள்ளது. இதன் நீளம் 4 அடி, உயரம் 3 அடியும் உள்ளது. இதன் காலம் கி.பி.15,16 - ஆம் நூற்றாண்டு.

## *நால்வர் சன்னதி*

திருஞானசம்பந்தர்
அப்பர்
சுந்தரர்
மாணிக்கவாசகர்

இந்நால்வர் சன்னதி திருச்சுற்று மாளிகையின் கருவறைக்கு தெற்கில் அமைந்துள்ளன.

## *திருஞானசம்பந்தர்*

இச்சிற்பம் இடையில் ஆடைதரித்து கைகளில் தாளம் ஏந்தி இசைக்கும் நிலையில் காட்டப்படுள்ளது. இவரது தலையைச் சுற்றிலும் உருத்திராட்ச மாலை அணி செய்கிறது. மழுக்கிய முன் தலையில் முன் குடுமி காட்டப்பட்டுள்ளது. காதுகளில் உருத்திராட்ச குண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் சரப்பளி அழகு

செய்கிறது. மார்பிலும் கையிலும் பெரிதும், சிறிதுமாக உருத்திராட்ச மணி மாலைகள் அமைந்து அழகு சேர்க்கின்றன. நின்ற கோலத்தில் உள்ள இவ்வுருவம் 2 ½ அடி பீடத்திற்கு மேல் உள்ளது. உயரம் 2 ½ அடியும் தோள் அகலம் 1 அடியும் உள்ளது.

### *அப்பர்*

அப்பரடிகள் இருகைகளால் அஞ்சலித்து வணங்கி நிற்கிறார். இவரது வலது முன் தோளில் உழவாரப்படை காணப்படுகிறது. பக்திப் பரவசத்தோடு பணிந்து நிற்கும் இவரது தலை, கழுத்து, மார்பு தோள், கை ஆகிய அங்கங்களில் உருத்திராட்ச மாலைகள் அணி செய்கின்றன. நெற்றியிலும், உடலிலும் திருநீறு பூசிய சிவபக்தராகக் கூப்பிய கரங்களோடு தோற்றமளிக்கிறார். இவரது இடுப்பில் துண்டும் இடுப்பிலிருந்து முழங்கால் வரை நீண்ட ஆடையும் தரித்துக் காணப்படுகிறார். இவ்வுருவம் உயரம் 2 அடியும், தோள் அகலம் 1 அடியும் கொண்டு விளங்குகிறது.

### *சுந்தரர்*

அரச உடையில் தலையில் மகுடம் தரித்து மகரக் குழைகள் அலங்கரிக்க, கழுத்தில் கண்டிகையும், மார்பில் பதக்கம் கோத்த மணிவடமும் மூன்று வடமுத்து மாலையும் அணிசெய்ய, வலக்கையின் தாமரை மொட்டினை ஏந்தி, இடக்கையை முத்திரை காட்டியபடி ராஜவசீகரத்தோடு நின்ற கோலத்தில் தோற்றமளிக்கிறார் இவ்வுருவம் உயரம் 2½அடியும் அகலம் 1 அடியும் உள்ளது.

### *மாணிக்கவாசகர்*

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகப் பெருமான் இருகைகளில் அக்கமாலையும், சுவடியும் ஏந்தி இடையில் கௌபீனம் தரித்துச் சிவபக்தராகத் தோற்றம் அளிக்கிறார். இடக்கரத்தில் அக்கமாலை ஏந்தி நிற்கிறார். வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. மழுக்கிய தலையைச் சுற்றிலும் உருத்திராட்ச மாலை அலங்கரிக்கிறது. இவரது நீள்செவிகள் அணியின்றி எளிமையாகக் காட்டப்பட்டுள்ளன. பதக்கம் கோத்தமணி மாலை, தோள்வளை, காப்பு, உதரபந்தம், புரிநூல், ஆகிய அணிகள் வாதவூர் அடிகளை அழகு செய்கின்றன. இவ்வுருவம் உயரம் 2 அடியும் அகலம் 1 அடியும் உடையது.

சம்பந்தரை பொற்றாளம் ஏந்தி இசைக்கும் இளம்பிள்ளை யாகவும், அப்பரை உழவாரப்படை ஏந்தி நிற்கும் முதியோராகவும், சுந்தரரை ராஜவசீகரத்துடன் அரச உடையில் அரசராகவும் மாணிக்கவாசகரை ஏடு ஏந்தி நிற்கும் எளியவராகவும் சித்தரித்துள்ள சமயநெறி பெருமையுடன் போற்றத்தக்கது.

## *சப்தமாதர்கள்*

சப்தமாதர்கள் ஏழுபேர் கொண்ட அமைப்பாகும். ஆனால் இங்குள்ளவர்கள் பஞ்சமிகள் என அழைக்கப்படுகின்றனர். இவ்வுருவங்கள் நான்கு சிற்பங்கள் இணைந்தும் கடைசியில் ஓர் உருவம் தனித்தும் காட்டப்பட்டுள்ளன. முதலில் பிராமியும், இரண்டாவதாக கௌமாரி, மூன்றாவதாக வராகியும், நான்காவதாக வைஷ்ணவியும், ஐந்தாவதாக கடைசியில் மாகேஸ்வரியும் உள்ளன. இங்கு இந்திராணி, சாமுண்டா ஆகிய இவ்வுருவங்கள் மட்டும் இடம் பெறவில்லை.

## *பிராமி*

இக்கோயிலில் உள்ள சப்தமாதர் சிற்பங்களில் முதலாவதாக உள்ள பிராமிச் சிற்பம் இது. செவ்வக பீடத்தின் மீது இடக்காலை மடித்து வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் உள்ளது. நான்கு கரங்களில் மேல் வலக்கரம் அக்கமாலையும் இடக்கரம் கெண்டியையும் பிடித்துள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கரம் தொடை மீது உள்ளது. ஜடா மகுடம் உத்திராட்ச குண்டலம், மணிவடம், கேயூரம், கைவளை, இடைக்கச்சை பாதசரம் ஆகிய அணிகள் பிராமியை அலங்கரிக்கின்றன. இவ்வுருவத்தில் மூன்று தலைகள் காட்டப்பட்டுள்ளன. பிராமியின் வாகனமான அன்னம் பீடத்தின் முன்புறம் செதுக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. இதனுடைய உயரம் பீடம் இல்லாமல் 2 அடி, தோள் அகலம் 1¼ அடியும் உள்ளது. இதன் காலம் கி.பி. 10, 11 -ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிற்பமாகக் கருதலாம்.

## *கௌமாரி*

சப்தமாதரில் கௌமாரியின் சிற்ப வடிவம் பிராமிக்கு அடுத்த நிலையில் இரண்டாவதாக காணப்படுகிறது. இவ்வுருவம் 2 அடி உயரமுள்ள செவ்வக பீடத்தில் 1½ அடி அகலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் வலதுகாலை மடித்து இடதுகாலைப் பீடத்தின் முன்புறம்

எழிலாகத் தொங்கவிட்ட நிலையில், நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. இதன் மேல்வலக்கை கடக முத்திரையில் அக்கமாலைப் பிடித்துள்ளது. மேல் இடக்கையில் எளிமையான கமண்டலம் காட்டப்பட்டுள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. கீழ் இடக்கை தொடை மீது காட்டப்பட்டுள்ளது. கௌமாரியின் தலையைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. மேல் நெற்றியில் கண்ணிமாலை காட்டப்பட்டுள்ளது. இரு காதுகளிலும் வட்டமான ஓலைக்குழைகள் அழகு செய்கின்றன. கழுத்தில் கண்டிகையும், சரப்பளியும், மணிவடமும் அலங்கரிக்கின்றன. மேற்கரங்களில் கருக்கு முகப்புடைய தோள்வளையும் முன்கையில் மூன்று கைவளையும் அணிசெய்கின்றன. மார்பின் மீது பட்டையான குஜபந்தம் காட்டப்பட்டுள்ளது. மேல்வயிற்றில் சன்னவீரம் அழகு செய்கிறது. இடையிலிருந்து மேல் தொடைவரை கீழாடை அணிசெய்ய இடைக்கட்டு அரைவட்ட வடிவில் பீடத்தின் முகப்பில் சரிந்துள்ளது. பெருமிதமான முகத்தோற்றத்துடன் விளங்கும் கௌமாரியின் பீடத்தின் முன்புறம் அவளுக்குரிய வாகனமாக மயில் பக்கவாட்டில் காட்டப்பட்டுள்ளது. கி.பி - 10-11 ஆம் நூற்றாண்டு.

## *வராகி*

சப்தமாதர் வரிசையில் ஆறாவதாக அமைய வேண்டியது வராகி. இவ்வுருவம் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. மேற்கரங்கள் இரண்டு சக்கரத்தையும் சங்கையும் கடக ஹஸ்தத்தில் பற்றியுள்ளன. கீழிரு கரங்கள் அபயமளிப்பதாகவும், தொடை மீது அமைந்தும் காணப்படுகின்றன. தலையில் கரண்ட மகுடம், காதுகளில் மகரகுண்டலங்கள், கழுத்தில் கண்டசரம், மார்பில் சிறிய பட்டையான கச்சை, கைகளில் கேயூரம், கைவளை அணிந்து காணப்படுகிறது. காலடியில் சிம்மம் உருவம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 10, 11- ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்தை சார்ந்தது எனலாம். இவ்வுருவத்தின் உயரம் 2 அடி, தோள் அகலம் 1½ அடி ஆக உள்ளது.

## *வைஷ்ணவி*

இச்சிற்பம் சப்தமாதர் வரிசையில் நான்காவது உருவமாகக் காணப்படுகிறது. வைஷ்ணவி உயர்ந்த செவ்வக பீடத்தின் மீது நான்கு கரங்களுடன் சுகாசனத்தில் வீற்றிருக்கிறாள் இவளது மேல்

வலக்கை பிரயோக சக்கரத்தையும் இடக்கை சங்கையும் பிடித்துள்ளன. கீழிருகைகளில் வலக்கை அபய முத்திரையில் அருள் வழங்குகிறது. இடக்கை தொடை மீது அமைந்துள்ளது. வேலைப்பாடு மிக்க உயர்ந்த கிரீட மகுடம் வைஷ்ணவியின் தலையை அலங்கரிக்கிறது. பின் தலையைச் சுற்றியும் வட்டமான சிரசச்சக்கரம் அணி செய்கிறது. மகர குண்டலம், பத்ர குண்டலம், கண்டசரம், சரப்பளி முத்துக்கள் கோத்த புரிநூல், மார்புக் கச்சை, தோள்வளை, கைவளைகள், இடைக்கச்சை, மடிப்புடைய கீழாடை பாதசரம் என அணிகள் பல வைஷ்ணவியை அழகு செய்கின்றன. பீடத்தின் முன்புறம் உள்ள கண்டப்படையில் கருட வாகனம் புடைப்புச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ள கருடன் மனித உடலும் பறவையின் இறக்கைகளும் கொண்டு காணப்படுகிறது. இவ்வுருவம் 2½ அடி உயரமும் 1½ அடி அகலமும் கொண்டுள்ளது. இதன் காலம் கி. பி. 10-11 ஆம் நூற்றாண்டு.

## *மாகேஸ்வரி*

சப்தமாதரில் தனித்து இருக்கும் இவ்வுருவம், உயர்ந்த செவ்வகப் பீடத்தின் மீது சுகாசனத்தில் நான்கு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. இதன் மேல் வலக்கை கடக முத்திரையில் மழுவாயுதத்தைப் பிடித்துள்ளது. இடக்கை துள்ளிக் குதிக்கும் மானின் பின் கால்களைப் பிடித்துள்ளது. கீழ் வலக்கை அருள்தரும் நிலையில் அபய முத்திரை காட்டுகிறது. இடக்கை தொடை மீது அமைந்துள்ளது. மாகேஸ்வரியின் தலையை ஜடா மகுடம் அலங்கரிக்கிறது. மகர குண்டலம், கண்டசரம், சரப்பளி, மலர்கள் பதித்த மாலை, முப்புரிநூல், மார்புக்கச்சை, இலைக்கருக்கு முகப்புடைய தோள்வளை, கைவளை, காப்பு, மணிவளை, இடைக்கச்சை, இடைவார், பாதசரம் ஆகிய அணிகள் மாகேசுவரியை அழகு செய்கின்றன. இதன் பீடத்தின் முன்புறம் உள்ள கண்டப்படையில் மாகேசுவரியின் வாகனமான காளை உருவம் தலையை உயர்த்திய நிலையில் பக்கவாட்டில் செம்மாந்து நிற்கிறது. மாகேசுவரியின் முகம் தெய்வ மணங்கமழும் தீர்க்கமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்தின் உயரம் 2 அடி ஆகவும், தோள் அகலம் 1 ¼ அடி ஆகவும் உள்ளது. இதன் காலம் கி. பி. 10-11 ஆம் நூற்றாண்டாகும்.

இந்த சப்தமாதர்களின் தொகுப்பு ஒரே மேடையில் அமைந்துள்ளது. இம்மேடையின் நீளம் 6 அடி ஆகவும், அகலம் 1 ½ அடி ஆகவும், உயரம் 2 அடி ஆகவும் அமைக்கப்பட்டுள்ளது.

## *சோமாஸ்கந்தர்*

திருச்சுற்று மாளிகையின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இச்சிற்பம் நீண்ட பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் ஸ்கந்தருடன் சிவனும் உமையும் அம்மையப்பனாகத் தோன்றும் காட்சியாக அமைந்துள்ளது.

## *பாலகணபதி*

இச்சிற்பம் திருச்சுற்று மாளிகையில், கருவறையின் மேற்கு பகுதியில், சோமாஸ்கந்தர் சிலைக்கு அருகில் இடப்பக்கத்தில் அமர்ந்த நிலையில் காணலாம். இடம்புரிவிநாயகர், கணபதியின் இடதுகரம் தாமரை மொட்டும், வலதுகரம் அபயமும் கொண்டுள்ளது. இவ்வுருவம் 4 அடி நீளத்தின் பீடத்தில் 2 அடி உயரத்தில் 1¼ அடி அகலத்தில் மூசிக வாகனத்தில் அமைந்துள்ளது.

## *உச்சிஷ்டகணபதி*

இச்சிற்பம் திருச்சுற்று மாளிகையில் கருவறையின் பின்புறம், மேற்குப்பகுதியில் பாலகணபதியின் இடதுபுறத்தில் அமைக்கப் பட்டுள்ளது. சிவப்பு நிறமோடு தாமரை மலரில் அமர்ந்துள்ள கணபதி சிற்பம், மேலிருக்கரங்களில் வலதுகரத்தில் தாமரைமொட்டும், இடதுகரத்தில் பழமும், கீழிரண்டு கரங்களில் இடதுகரத்தில் அக்கமாலையும், வலதுகரத்தில் அபய முத்திரையும் கொண்டுள்ளது. இவ்வுருவம் 2 அடி உயரமும் 1 ½ அடி அகலமும் உடையது.

## *சிதம்பரேஸ்வரர்*

திருச்சுற்றுமாளிகையில் கருவறையின் பின்புறம், உச்சிஷ்ட கணபதியின் இடதுபுறம் சிதம்பரேஸ்வரர் அமைந்துள்ளார். இவருக்கு ஐப்பசியில் அன்னாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. இச்சிற்பத்திற்கு முன்பு நந்தியின் உருவம் அமர்ந்த நிலையில் உள்ளது. நந்தியின் நீளம் 1½ அடியும், அதன் உடல் பின்பகுதி 1 அடியும், இதன் உயரம் 1½ அடியும் கொண்டுள்ளது. இதற்கு முன்பு இலிங்கத்தின் உருவம் 2½ அடி உயரம் வரை அமைந்துள்ளது.

## கஜலஷ்மி அம்மன்

இச்சிற்பம் திருச்சுற்று மாளிகையில், கருவறைக்குப் பின்புறம் வடமேற்கில் அமைந்துள்ளது. நான்கு கரத்துடன் அமர்ந்த கோலத்தில் கஜலட்சுமியின் உருவம் காட்சியளிக்கிறது. மேல் வலதுகையில் அக்கமாலையும், இடக்கையில் தாமரை மலரை கடகமுத்திரையிலும், கீழ்க் கைகள் இரண்டும் அபய முத்திரையிலும், வரத முத்திரையிலும் அமைந்து அருள் பாலிக்கின்றன.

கஜலட்சுமி கீழ்திசை நோக்கி அருள்பாலிக்கிறார். இவரது பக்கங்களில் இரு யானைகள் அமுதக் கலசத்தைத் துதிக்கையில் பற்றி லட்சுமிக்குப் புனிதநீர் சொரியும்காட்சி வனப்போடு காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவம் 3½ அடி நீளத்தில் 1½ அடி உயரம் பீடம் அமைந்துள்ளது. பீடத்திற்கு மேல் 2½ அடி உயரம் 1 அடி அகலம், மற்றும் 3 அடி நீளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## சுப்பிரமணியர் சன்னதி

ஆலயங்களில் நிறுவி வழிபடுவதற்குரிய முருகன் திருவுருவங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆகம நூல்கள் விவரித்துக் கூறும். ஒருமுகம் இருகரங்களும் உடையது. ஒருவகை, ஒருமுகம், நான்கு கரங்களும் உடையது இரண்டாவது வகைத் திருவுருவம் ஆறுமுகங்களும் இருகரங்களும் உடையது மற்றொருவகைத் திருவுருவம். இன்னொன்று ஆறுமுகங்களும் பன்னிருகரங்களும் அமைந்தது ஆகும்.

இச்சிற்பம் திருச்சுற்று மாளிகை மத்தியில் வடமேற்கு கீழ்திசை நோக்கி மயில் வாகனத்தில் காட்சி அளிக்கிறது. இவரது மேல்வலக்கை சக்தி படையைக் கத்திரி முத்திரையில் பற்றியுள்ளது. இடக்கை வஜ்ரப்படையை ஏந்தி நிற்கிறது. கீழ்வலக்கை அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கிறது. இடக்கை எழிலாக நீண்டுதொடை மீது வைத்த நிலையில் உள்ளது.

தலையில் வேலைப்பாடு மிக்க உயர்ந்த கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. பின் தலையை ஒட்டி வட்டமான சிரச்சக்கரம்

அமைந்துள்ளது. தலையின் இரு பக்கங்களிலும் சுருண்டகேசங்கள் தோள்வரை விரிந்து வனப்பூட்டுகின்றன. காதுகளில் வட்டக்குழைகள் அணி செய்கின்றன. கழுத்தில் கண்டசரமும், மார்பில் மூன்றுவடக் கற்கள் பதித்த முகப்புடைய சரப்பளியும் அழகு செய்கின்றன. முப்புரி நூலும் உதரபந்தமும் காட்டப்பட்டுள்ளன.

தோள்பட்டைகளில் மெல்லிய தோள்மாலை சரிந்துள்ளது. இடுப்பிலிருந்து கீழ்த் தொடை வரை உடலை ஒட்டிய எளிய கீழாடை அலங்கரிக்கிறது. இடையைச் சுற்றிலும் அரைப்பட்டி கையும், இடையின் பக்கங்களில் ஆடைக்கட்டும், காலில் பாதசரமும் இவ்வுருவை அலங்கரிக்கின்றன.

உயர்ந்த மகுடம், நீள்வட்டமுகம் தூக்கிய புருவம், கீழ் நோக்கிய அருள் சுரக்கும் கண்கள், எடுப்பான மூக்கு, குவிந்த திருவாய், அளவான மேலுடல் அழகிய அங்கங்கள், நெடிய உடல்வாகு, நேர்த்தியான ஆடை அணிகள் நுட்பமான ஆயுதங்கள் யாவும் இச்சிறபத்தில் கவனமாகவும், கலை அழகோடும் படைக்கப்பட்டுள்ளன. பின்புறம் உடலை ஒட்டி அழகிய மயில் நீண்ட தோகையோடு எடுப்பாக நிற்கும் தோற்றத்தைக் காணலாம்.

இச்சிற்பத்தின் உருவ அமைதி, நிற்கும் நிலை, தலைக் கோலம், ஆடை, அணிகள் இவையாவற்றையும் கொண்டு இதன் காலம் கி.பி. 13-14 ஆம் நூற்றாண்டு எனலாம்.

### *வள்ளி*

மயில்வாகனரின் வலப்புறம் நின்ற கோலத்தில் வள்ளியை காணலாம். இத்திருவுருவத்தின் இடதுகையில் தாமரை மலரை ஏந்தி, வலது கையைத் தாழ்கரமாகக் கொண்டுள்ளது. பாதசரம், தண்டை காலிலும், கச்சை இடையிலும், கைவளை முன் கையிலும், தோள்வளை மேற்கையிலும் இரட்டைவட முத்துவடம் மார்பிலும், அட்டிகை கழுத்திலும், வட்ட குழைகள் காதிலும், முத்துப்பட்டம் நெற்றியிலும், கரண்ட மகுடம் தலையிலுமாக வள்ளியைப் பாதாதிகேசாந்தம் வனப்புடன் அலங்கரிக்கின்றன.

### தெய்வானை

மயில்வாகனின் இடப்புறம் வலது கையில் அல்லி மலரை ஏந்தி, இடக்கையைத் தாழ்கரமாகக் கொண்டு ஒயிலாகத் தனித்து நின்ற கோலத்தில் தெய்வானை உருவம் காட்சியளிக்கிறது.

தலையில் கரண்டமகுடமும், நெற்றியில் முத்துப்பட்டமும், காதில் மகரக் குழையும், கழுத்தில் அட்டிகையும், மார்பில் இரட்டை வடமுத்து மாலையும், மேற்கைகளில் தோள்வளையும், முன்கைகளில் கைவளையும் இடையில் இருந்து முழங்கால் வரை நீண்ட கீழ் ஆடையும் காலில் தண்டையும் பாதசரமும் இவ்வுருவை அலங்கரிக்கின்றன. வள்ளியின் தனங்கள் மார்புக்கச்சையுடனும், தெய்வானையின் தனங்கள் மார்புக்கச்சை இன்றியும் காணப்படுகின்றன. வள்ளியின் காதுகளை வட்ட குழைகள் அலங்கரிக்க, தெய்வானையின் காதுகளில் மகரக்குழைகள் காட்டப்பட்டுள்ளமை இவ்விருசிற்ப வடிவங்களையும் அடையாளம் காண நமக்கு துணை செய்கின்றன.

### திருப்பள்ளியறை

திருச்சுற்று மாளிகையின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ளது. பள்ளியறை என்று தனியறை இல்லை. சுற்றிலும் இரும்புத்தடுப்பு மட்டுமே சுவர் போன்று அமைந்துள்ளது. பள்ளி அறையில் வீற்றிருப்பவர்கள் செப்புத் திருமேனியுடைய அம்மையும் அப்பனும் ஆவர். பள்ளியறையின் நடுவே கேடய ஊஞ்சலில் பள்ளியறை அம்மன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இரவில் அர்த்தசாமப் பூசை மற்றும் பல்லக்கில் உற்வசம் நடத்தி பள்ளியறையில் வைப்பார்கள்.

### வீரபத்திரர்

இச்சிற்பம் திருச்சுற்று மாளிகையில், கருவறைக்கு வடகிழக்கில் நீண்ட செவ்வகப் பீடத்தின் மீது நின்ற கோலத்தில் உள்ளது. இவரது தலையைப் பக்கங்களில் அரைவட்டவடிவில் எழிலாக விரிந்த ஜடாபாரம் அழகு செய்கிறது. மேல் நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப் பட்டம் அலங்கரிக்கிறது. வலது காது தோள்வரை வடித்து காணப்படுகிறது. இடது காதில் பளுவான பத்ரகுண்டலம் அலங்கரிக்கிறது. கழுத்தில் கல்பதித்த ஆரம் ஒன்றும், பெரிய மணிகள் கோத்த மணிவடம் ஒன்றும் ஆக இரண்டு கழுத்தணிகள் அலங்கரிக்கின்றன. இடது மார்பிலிருந்து கீழ்வயிற்றை நோக்கிப் பட்டையான முப்புரிநூல் ஓடுகிறது. இதன்

பிரம்மமுடிச்சு இடதுமேல் கேயூரமும் முன்கையில் தடித்த இருவளையும், இடையிலிருந்து மேல்தொடை வரை கீழாடையும், கால்களில் பாதசரமும், வீரபத்திரரை அலங்கரிக்கின்றன. இவரது மேல்வலக்கை அக்கமாலையைப் பற்றியுள்ளது. இடதுகையில் வில், அம்பும், கீழ் வலதுக்கரத்தில் சின் முத்திரையுடனும், இடதுகரம் தொடைமீது ஊறு ஹஸ்தத்திலும் உள்ளன. பரந்த முகம், அகன்ற நெற்றி, செங்குத்தான நெற்றிக்கண், வில்லை ஒத்தவளைந்த புருவம், அருள் சுரக்கும் மலர்ந்த கண்கள், எடுப்பான மூக்கு இவ்வுருவத்தை அழகு செய்கின்றன. சிவனது காளை வாகனம் கம்பீரமாகக் கழுத்தை உயர்த்தி நிற்கும் நிலையில் புடைப்புச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. வீரபத்திரர் 2 அடி பீடத்தின் மீது 1½ அடி அகலத்தில் 2 ¾ அடி உயரம் உள்ளது.

### *பைரவர்*

பைரவர் சிற்பம் திருச்சுற்று மாளிகையின் வடகிழக்குப் பகுதியில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. பைரவர் வட்டமான தாமரை பீடத்தின் மீது, நான்கு கரங்களில் ஆயுதம் தாங்கி, நேராக நின்ற கோலத்தில், அச்சுறுத்தும் வகையில் சீற்றமுடையதாகக் காட்சி அளிக்கிறது. இவரின் மேல் வலக்கை ஒலிக்கும் உடுக்கையைப் பக்கவாட்டில் பற்றியுள்ளது. மேல் இடக்கை ஆடும் நாகத்தைப் பிடித்துள்ளது. கீழ் வலக்கை அழகிய கதாயுதத்தின் மேல் அமைந்துள்ளது. கபாலம் ஏந்தும் கீழ் இடக்கை அடையாளம் காண இயலாதவாறு சிதைந்துள்ளது. பைரவரின் தலையைச் சுற்றிலும் விரிந்த ஜுவாலைகளுடன் கூடிய சுடர்முடி மகுடமாக வனப்பூட்டுகிறது. சுடர்முடியின் முகப்பில் பூரிமம் அலங்கரிக்க, வலப்புறத்தில் ஆடும் நாகமும், இடப்புறத்தில் இளம்பிறையும் அணி செய்கின்றன.

பைரவரின் நெற்றியைச் சுற்றிலும் வேலைப்பாடு மிக்க முத்துச்சரம் அலங்கரிக்கும் நெற்றிப்பட்டம் வனப்பூட்டுகிறது. காதுகளில் அழகிய மகரக்குழைகள் அணி செய்கின்றன. இடதுதோளில் இருந்து கீழ்வயிற்றை நோக்கிப் பட்டையான புரிநூலும், மேல் வயிற்றைச் சுற்றிலும் மெல்லிய உதரபந்தக் கச்சையும் காட்டப்பட்டுள்ளது. ஆடையணியா அழகரான பைரவரின் இடையைச் சுற்றிலும் அழகிய அரவம் அரைஞாணாக அணி செய்கிறது. அவ்வரவத்தின் மகுடத்தினுடைய தலைப்பகுதி கபாலம் ஏந்தி நிற்கும் கீழ் இடக்கையோடு இணைந்துள்ளது. முழங்காலைச் சுற்றிலும் சதங்கை கோத்த உடைமணியும், கால்களில் கழல்களும், பாதசரமும் பைரவரை அழகு செய்கின்றன.

சதுரமான பரந்த முகமும், நெளிந்த புருவமும், விரிந்த நெற்றியில் செங்குத்தாகத் திறந்த நெற்றிக்கண்ணும், அகன்ற கண்களிலிருந்து வெளிப்படும் பெரிய விழிகளும், புடைத்த மூக்கும், கோரைப்பற்களுடன் கூடிய சற்று திறந்த வாயும், அகன்ற தோளும், விரிந்த மார்பும், நெடிய உடல்வாகும், நீண்ட கரங்களும், வலுவான கீழ் உடலும் பொலிவோடு விளங்க ஆடையற்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறது பைரவர் சிற்பம்.

இச்சிற்பத்தின் பின்புறம் பைரவரின் வாகனமாக நாயின் உருவம் காட்டப்பட்டுள்ளது. இது முகத்தைப் பைரவரின் இடப்புறம் உயர்த்திய வண்ணம், கபாலம் ஏந்தும் இடதுகையை நாவால் நீவும் நிலையில் இயற்கையாகக் காட்டப்பட்டுள்ளன. பைரவரின் கரங்களில் உடுக்கை, பாசம், திரிசூலம், கபாலம் ஆகிய கொடிய ஆயுதங்கள் காட்டப் பட்டுள்ளன. இச்சிற்பத்தின் உயரம் பீடத்துடன் 3½ அடியும், தோள் அகலம் 1½ அடியும், பீடம் மட்டும் உயரம் 1 அடி ஆகவும் உள்ளது. இதன் காலம் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டு.

### *சந்திரன்*

சிவன் கோயிலின் பரிவார தெய்வங்களுள் ஒன்றான சந்திரனது கற்சிலை திருச்சுற்று மாளிகைப் பத்தியின் வடகிழக்குப் பகுதியில் மேற்குதிசை நோக்கியவாறு அமைந்துள்ளது. உயர்ந்த பீடத்தின் மீது நேராக நிற்கும் இச்சிலையின் இருகைகளில் அல்லி மொட்டுகள் தண்டுகளுடன் கடக முத்திரையில் காணப்படுகின்றன. தலையைச் சுற்றிலும் ஒளி வட்டம் அமைந்து வனப்பூட்டுகிறது. ஒளிவட்டத்தினுள் பிறை வடிவம் காணப்படுகிறது. அது சந்திரனை எளிதில் அடையாளம் காண வகை செய்கிறது.

தலையில் கரண்ட மகுடம் அணிசெய்கிறது. மேல் நெற்றியில் நெற்றிப்பட்டமும், காதுகளில் குண்டலங்களும், கழுத்தில் மலர் முகப்புடைய அட்டிகையும், பதக்கம் கோத்த மூன்று வடமுத்து மாலையும், மார்பில் புரிநூலும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை மடிப்புடைய கீழாடையும், கால்களில் தண்டையும், பாதசரமும் அழகு செய்ய சந்திரனின் உருவம் செம்மையாகச் செதுக்கப்பட்டுள்ளது.

அமைதி தவழும் நீள்வட்ட முகமும், அகன்ற நெற்றியும், தூக்கிய புருவம், கீழ் நோக்கு மலர்ந்த கண்களும், எடுப்பான மூக்கும்,

குவிந்த வாயும், நீண்ட உடல்வாகும் பெற்று இவ்வுருவம் திகழ்கிறது. சதுரமான பீடம் உயரம் ¾ அடியும், சிற்பத்தின் உருவம் 1¾ அடியும், அகலம் ¾ அடியும் கொண்டுள்ளது.

## *வலம்புரி விநாயகர்*

திருச்சுற்று மாளிகையின் கருவறையை சுற்றியுள்ள பின்புற தேவ கோட்டத்தில், கருவறைக்கு தென்புறத்தில் வலம்புரி விநாயகர் சிற்பம் காட்சி தருகின்றது. இதனுடைய நான்குகரங்களில், மேலிரண்டு கரங்களில் அபயத்தையும் அக்கமாலையையும், கீழிரண்டு கரங்களில் ஒன்றைத் தொடையின் மீது வைத்துக்கொண்டும் மற்றொன்று தாமரைமொட்டை பற்றிக்கொண்டும் அமர்ந்த நிலையில் உள்ளது. விநாயகரின் துதிக்கை வலது புறமாக வளைந்து மோதகத்தை பற்றுகிறது. கரண்ட மகுடம் பின்புறம் சாய்ந்த நிலையில் அலங்கரிக்கிறது. காதுகள் பக்கங்களில் விரிந்துள்ளன. அகன்ற தோள்களில் தோள்மாலை சரிந்துள்ளது. கழுத்தில் கற்கள் பதித்த அகன்ற சரப்பளி வனப்பூட்டுகிறது. மார்பில் பெரிய உருத்திராட்ச மணிகள் கோர்த்த மாலை அலங்கரிக்கிறது. இடது தோளில் இருந்து புரிநூல் கீழ்வயிற்றை அடைகிறது. பெருத்த வயிற்றைச் சுற்றிலும் உதரபந்தம் கட்டப்பட்டுள்ளது. இடுப்பிலிருந்து தொடை வரை ஆடை தரித்துக் காலில் தண்டையணிந்து காணப்படுகிறது. விநாயகரின் முன்புறம் அவரது வாகனமான மூஷிகம் உள்ளது. பின்புறம் பலிபீடம் காணப்படுகிறது. இவ்வுருவம் தரையிலிருந்து 5 அடி உயரத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது. பீடத்திலிருந்து 2 அடி உயரமும் 1 அடி அகலமும் கொண்டுள்ளது.

## *தட்சிணாமூர்த்தி*

திருச்சுற்று மாளிகையில், கருவறையின் தெற்குபுறத்தில் தேவ கோட்டத்தில் அமர்ந்த நிலையில் உள்ளது. தட்சிணாமூர்த்தியினுடைய உருவம் ஞான தட்சிணாமூர்த்தி, யோக தட்சிணாமூர்த்தி, வியாகயான தட்சிணாமூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி என நான்கு வகைப்படும். சிவனது குருமூர்த்தமே தட்சிணாமூர்த்தி எனப்படும். ஞான உபதேசம் செய்யும் நிலை ஞான தட்சிணாமூர்த்தி எனவும், வியாக்யானஞ் செய்யும் நிலை வியாக்யான தட்சிணாமூர்த்தி எனவும், இசையை உபதேசிக்கும் நிலை வீணாதர தட்சிணாமூர்த்தி எனவும் பெயர் பெறும். பெரும்பாலும் சிவாலயங்களில் ஞான தட்சிணாமூர்த்தி உருவம் அமைக்கப்படுவது வழக்கம்.

இவ்வுருவம் ஆலமரத்தின் கீழ் வீராசனத்தில் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு தத்துவம் போதிக்கும், தட்சிணாமூர்த்தியின் உருவம் கரிய நிறக்கல்லில் சிற்பமாகச் செதுக்கப்பெற்றுள்ளது. கயிலை மலை மேல் அமர்ந்துள்ள சிவனது வலது திருவடி தாழ்ந்து அபஸ்மாரன் முதுகில் அமைந்துள்ளது. இடக்கால், வலது கால்மேல் தொடை மீது மடித்துத் தூக்கி வைத்த நிலையில் காணப்படுகிறது. அறம் உரைக்கும் அண்ணலின் நான்கு கைகளில், மேல் வலக்கை அக்கமாலை பற்றி படமெடுத்தாடும் பெருநாகத்தைப் பிடித்துள்ளது. மேல் இடக்கை கடக முத்திரையில் உள்ளது. கீழ் வலக்கரம் சின்முத்திரையிலும், இடக்கரம் சுவடி ஏந்திய கரமாகவும் அமைந்துள்ளது. காலின் பக்கங்களில் முனிவர் இருவர் உபதேசம் பெறும் நிலையில் உள்ளார்.

தட்சிணாமூர்த்தியின் தலையை வேலைப்பாடு மிக்கப் பெரிய சடாமகுடம் அலங்கரிக்கிறது. அவ்வாறு தலையின்கீழ் பக்கங்களில் இருந்து சுருண்ட முடிகள் தாழ்சடையாக வனப்புடன் தோள்வரை வீழ்ந்து பொலிவூட்டுகிறது. நெற்றிப் பட்டமும், நடுவே வட்டமான திலகமும், செவிமடல்களில் பூ மொட்டினை ஒத்த செவிப்பூவும், வலது காதில் மகர குண்டலமும், இடது காதில் பத்ர குண்டலமும், கழுத்தில் மணிவடமும், கற்கள் பதித்த அட்டிகையும், மலர்முகப்புடைய மூன்று வடமுத்துச்சரங்கள் கோத்த நீண்ட மகரக் கண்டிகையும், மேற்கைகளில் தோள்வளைகளும், தோள்பட்டைகளில் வாகுமாலையும், முன்கைகளில் மணிவளைகளும், புறங்கையில் வங்கியும், மேல் வயிற்றில் உதர பந்தமும், இடது மார்பில் நூலும், இடையில் இருந்து தொடைவரை ஆடையும், கால்களில் தண்டையும் பாதசரமும் இவ்வுருவை அணி செய்கின்றன.

பரந்த முகமும், பெருமிதமாகச் சற்று முன்புறம் குனிந்த தலையும், வில் போல் வளைந்த புருவமும், கீழ் நோக்கிப் பார்வை செலுத்தும் மலர்ந்த கண்களும், எடுப்பான மூக்கும், சனகாதி முனிவர்களுக்குத் தத்துவம் போதிக்கும் நிலையில் மெல்லத்திறந்த வாயும், வனப்பான அங்கங்களும், எழிலான உடற்கட்டும் கொண்ட நிலையில் இவ்வுருவம் காட்சி அளிக்கிறது. திருவடியின் கீழுள்ள அபஸ்மாரன் சிறுகுழந்தையைப் போல் படைக்கப்பட்டுள்ளான். தத்துவம் போதிக்கும் அண்ணலின் முன்புறம் வயது முதிர்ந்து, தலையில் முடியும், முகத்தில் நீண்ட தாடியும் தரித்துத் தத்துவம் கற்கும் நிலையில்

சனகாதி முனிவரில் இருவரின் சிற்பங்களைக் காணலாம். இவர்கள் வலது கையில் அக்கமாலையைப் பற்றி, இடது கையில் சுவடி ஏந்தி, இரு கால்களையும் மடித்த நிலையில் வீற்றிருக்கின்றனர். இவர்களது தலைகளில் உருமாறும் நெற்றி, கழுத்து, தோள், முன்கைகளில் உருத்திராட்ச மாலையும், காதுகளில் உருத்திராட்ச குண்டலமும் அணிந்து இடையில் ஆடை தரித்துள்ளனர்.

அறமுரைக்கும் அண்ணலின் பின்புறமுள்ள முதிர்ந்த ஆலமரத்தைச் சுற்றிலுமுள்ள அடர்ந்த இலைகளின் நடுவே விரிந்த மலர்கள் அமைந்து வனப்பூட்டுகின்றன. இவ்வாறு பருத்த ஆலமரத்தின் அடிமரமும், அம்மரத்திலிருந்து பாங்காகப் பிரிந்து படர்ந்து செல்லும் அடர்ந்த இலைகளும், விரிந்த மலர்களும் ஒரே கல்லில் செதுக்கப் பட்டுள்ளன. இவ்வுரும் தரையிலிருந்து 5 அடி உயரத்தில் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிலையின் உயரம் 2¾ அடியும், அகலம் 1அடியும் நீளம் 3 அடியும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.10,11-ஆம் நூற்றாண்டு.

## மகாவிஷ்ணு

விஷ்ணு சிற்பம் திருச்சுற்று மாளிகையில் தேவ கோட்டத்தில் கருவறைக்கு பின்புறம் மேற்கில், நின்ற கோலத்தில் அமைக்கப் பட்டுள்ளது. சமபங்கத்தில் நான்கு கரங்களுடன் மேற்கு திசை நோக்கியுள்ளது. பின்னிருகரங்களில் சக்கரமும், சங்கும் உள்ளன. கீழ்க்கரங்கள் இரண்டும் அபய முத்திரையிலும், தொடை மீது அமைந்தும் உள்ளன. மகாவிஷ்ணுவின் தலையை நீண்ட கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. காதில் மகர குண்டலங்கள் உள்ளன. தோள்களில் தோள்மாலை சரிந்துள்ளது. கழுத்தில் கண்டிகை, கிரைவேகஹாரம், சரடு ஆகிய ஆபரணங்கள் அலங்கரிக்கின்றன. இடது மார்பில் முத்தாலான பூணூல் அலங்கரிக்கின்றன. மேல் வயிற்றில் உதரபந்தம் காணப்படுகிறது. முன் கையில் இரண்டு வளைகள் அணி செய்கின்றன. இடையிலிருந்து கணுக்கால் வரை அழகிய பீதாம்பரம் வனப்பூட்டுகிறது. காலில் காப்பு, பாதசரம் என்னும் அணிகளும் உள்ளன.

விஷ்ணுவின் திருவுருவம் படர்ந்த முகமும், மெலிந்த புருவமும் விரிந்த கண்களும், அகன்ற மூக்கும், மூடிய உதடுகளும் அருள்பாலிக்கும் பார்வையும் பெற்று விளங்குகிறது. இவ்வுருவம்

பீடத்தின் மீது உயரம் 3 அடியும், தோள் அகலம் 1¾ அடியும் கொண்டுள்ளது. இதன் காலம் கி.பி. 15–16 ஆம் நூற்றாண்டு.

## *பிரம்மன்*

பிரம்மன் திருச்சுற்று மாளிகையில், தேவ கோட்டத்தில், கருவறைக்கு வடதிசையில் அமைந்துள்ளார். இச்சிற்பம் தரையில் இருந்து 5 அடி உயரம் உள்ள கோட்டத்தில் நின்ற நிலையில் உள்ளது. இதன் நான்கு கரங்களுடன், நேராக நின்ற கோலத்தில், மேலிருகரங்கள் அக்கமாலையும், கெண்டியும், கத்தரி முத்திரையும் கொண்டுள்ளன. கீழிருகரங்கள் அபய, வரத முத்திரையில் அமைந்து அருள் பாலிக்கின்றன. இங்கு பிரம்மன் நான்கு தலைகளுடன் காட்டப்பட்டுள்ளார். முன்புறம் மூன்றும் பின்புறம் ஒன்றுமாக நான்கு முகங்களைக் கொண்ட திசைமுகனின் தலைகளை உயர்ந்த சடை மகுடங்கள் அலங்கரிக்கின்றன. நெற்றியில் பட்டமும், காதுகளில், உருத்திராட்ச குண்டலமும், கழுத்தில் பொன் சரடும், சுவடியும், மார்பில் புரிநூலும், பதக்கம் கோத்த மூன்று சர முத்து மாலையும், காப்பும், இடையில் இருந்து முழங்காலுக்குக் கீழ்வரை மடிப்புடைய அழகிய ஆடையும், இடுப்பின் பக்கங்களில் நீண்டு சரிந்து நிற்கும் ஆடைக் கட்டும், கானல் காப்பும், பாதசரமும் இச்சிற்பத்தில் நன்கு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுருவம் பீடத்தின் மீது உயரம் 2¾ அடியும் தோள் அகலம் 1½ அடியும் கொண்டுள்ளது. இதன் காலம் கி.பி.15-16 ஆம் நூற்றாண்டு.

## *சண்டேஸ்வரர்*

இச்சிற்பம் திருச்சுற்று மாளிகையில், கருவறைக்கு வடதிசையில் அமைந்துள்ளது. இவ்வுருவம் செவ்வக வடிவமான உயர்ந்த இருக்கை மீது இடதுகால் மடித்து, வலது காலைத் தொங்கவிட்டுக் கொண்டு அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறது. வலது கையில் கடக ஹஸ்தத்தில் மழுவைப் பிடித்துள்ளது. இடதுகையை தன்னுடைய இடது தொடையின் மீது வைத்துள்ளது.

தலையை விரிந்த ஜடாமகுடம் அலங்கரிக்கிறது. காதுகளில் பத்ரகுண்டலம் அணி செய்கிறது. கழுத்தில் கண்டாபரணம், பதக்கம் கோத்த மணிவடமும், மண்முகப்புடைய முத்து வடமாலையும் அணி செய்கின்றன. மார்பில் புரிநூலும், மேல் வயிற்றில் மெல்லிய

உதரபந்தமும், கைகளில் தோள்வளையும் காப்பும், இடைக் கச்சை, கழல், தண்டை ஆகிய அணிகள் அலங்கரிக்கின்றன. இவ்வுருவம் பீடத்தின் மீது உயரம் 3 அடியும் அகலம் 1¾ அடியும் கொண்டுள்ளது. அதன் காலம் கி.பி.10–11 ஆம் நூற்றாண்டு.

## அஷ்டபுஜ துர்க்கை

எண்டோள் துர்க்கை, திருச்சுற்று மாளிகையில் கருவறையின் வடக்கு திசையில் தேவக்கோட்டத்தில் முன்புறம் அமைந்துள்ளது. 5 அடி உயரமுள்ள பீடத்தின் மீது எட்டு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. துர்க்கையின் வலது கைகளில் மேலிருந்து கீழாக முறையே சக்கரம், அம்பு, கத்தி ஆகிய ஆயுதங்களை ஏந்தி உள்ளார். ஒரு கரம் அபயமளிக்கிறது. இடது கைகளில் முறையே சங்கு, வில், கேடயம் ஆகிய ஆயுதங்கள் அமைந்துள்ளன. கீழ் இடக்கரம் மட்டும் தொடை மீது ஊரு ஹஸ்தத்தில் அமைந்துள்ளது. தலையில் வேலைப்பாடு மிக்க கரண்ட மகுடம், நெற்றிப்பட்டம், மேல் நெற்றியிலும், காதுகளில் மகர குண்டலங்களும், கண்டசரமும், மணி வடமும், கழுத்திலும் மண் முகப்புடைய தொங்கல் மார்பிலும் குஜபந்தம், தனங்களின் மீது சன்ன வீரம், மேல் வயிற்றில் உதர பந்தம், மேல் மார்பில் கேயூரம், மேற்கையிலும், காப்பு, கைவளை, முன் கையிலும், இடையைச் சுற்றிலும் அலை அலையாக இடைக்கச்சையும், இடையிலும் அழகிய ஆடைக்கட்டு இடையின் பக்கங்களிலும், ஒலிக்கும் தண்டை கால்களிலும் அணிசெய்ய அழகே உருவான அஷ்டபுஜ துர்க்கை எடுப்பாகப் படைக்கப்பட்டுள்ளது.

துர்க்கையின் பரந்த முகமும், விரிந்த நெற்றி கோடிட்ட புருவம், மலர்ந்த கண்கள், அருள்சுரக்கும் பார்வை, நீள்நாசி, சற்றுப் பிரிந்த இதழ்கள் யாவும் அழகாக உள்ளன. ஆலயங்களில் துர்க்கையின் திருவடியின் கீழ் காட்டெருமையின் தலையைக் காண்கிறோம். சிலம்பு காப்பிய வரிகளிலுள்ள விளக்கங்களை இது நினைவூட்டுகிறது. இவ்வுருவம் பீடத்தின் மீது உயரம் 3 அடியும் அகலம் 1 அடியும் நீளம் 2 அடியும், தோள் அகலம் 1¾ அடியும், கொண்டுள்ளது. இதன் காலம் கி.பி.10,11 – ஆம் நூற்றாண்டு.

## *நந்திகேஸ்வரர்*

கோயிலின் நுழைவு வாயிலில் வடக்கு திசையை நோக்கியவாறு திருமால் திருவுருவத்திற்கு முன் சிறிய வடிவிலான நந்தி தேவரின் திருவுருவம் மணிகண்டேஸ்வரரை நோக்கியவாறுள்ளது. இவ்வுருவம் சிறியதாக இருப்பினும் மிகவும் அழகாகவும் பொலிவுடனும் காணப்படுகிறது. இவருடைய இரு கரங்களும் கைக்கூப்பி வணங்கிய நிலையில் காணப்படுகிறது.

கோயிலைக் கடந்து வெளியே வரும் பொழுது கோயிலின் வடக்குத் திசையில் நவக்கிரக மண்டலத்தைக் காணலாம். இங்கு சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது, முதலிய ஒன்பது கோள்களும் உயர்ந்த மேடை மீது வழிபாட்டில் உள்ளன.

தமிழ் மக்கள் பண்டைநாள் முதல் கோள்கள் ஒன்பதின் அடிப்படைத் தத்துவத்தை நன்கு அறிந்திருத்தனர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் ஒன்பது கிரகங்களும் சமயச்சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தன. தேவாரம் பாடிய மூவரில் ஒருவரான ஞான சம்பந்தப் பெருமான் இக்கோள்களின் சிறப்பினை 'ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பு, இரண்டுமுடனே' என்று தம் திருநள்ளாறு பதிகத்தில் பாடிச்சென்றுள்ளார்.

நவக்கிரகங்களுள் சூரியன் முதன்மையானவன் சிவப்பு நிறமுடையவன், ஜோதி வடிவானவன். இரண்டு கைகளை உடையவன் செந்தாமரை மலரை இருகைகளில் தாங்கி நிற்பவன். ஏழு குதிரை பூட்டிய ஒரே சக்கரம் உடைய அழகிய தேரை உடையவன். தாமரை மலரை இருக்கையாகக் கொண்டவன். பாபநாசம் அருகில் 108 சிவ ஆலயம் லிங்கம் 35, 35, 38, 108. இங்குள்ள சூரியன் 6 அடி உயரம் உள்ளது. பல்லவர் காலத்தில் இறுதியிலும், சோழர் காலத்தில் ஆரம்பத்திலும் வடிக்கப் பெற்றிருக்கலாம்.

பத்மரக கற்கள் இழைக்கப் பெற்ற கிரீடமுடையவன். மனதைக் கவரும் தோற்றமுடையவன் என்றெல்லாம் சிற்ப நூல்கள் சூரியனின் அமைப்பினை விவரிக்கின்றன. நவக்கிரகங்களில்

தலைமையானவன் சூரியனே. நவக்கிரக மண்டலத்தில் சூரியனை நடுவில் வைத்து எட்டுத் திசைகளிலும் மற்றுமுள்ள எட்டு கிரகங்களை அமைப்பது வழக்கம். ஒரிஸ்ஸாவில் சூரியனுக்கு கோயில் உள்ளது.

கிழக்கில் சந்திரன், தெற்கில் வியாழன், மேற்கில் புதன், வடக்கில் சுக்கிரன், தென்கிழக்கில் செவ்வாய், தென்மேற்கில் சனி, வடமேற்கில் ராகு, வடகிழக்கில் கேது ஆகியவற்றை அமைத்துப் பூசிக்க வேண்டும் எனச் சில்பரத்னம் என்ற நூல் விரித்துக் கூறும்.

இரண்டாவது கோளான சந்திரன் மென்மையான ஆடையை உடையவன், இரண்டுகைகளுடன் அல்லி மலர்களை இருகரங்களில் ஏந்தி நிற்பவன்.

பூமியின் மகனாகிய அங்காரகன் ஆட்டை வாகனமாக உடையவன். புத்தகத்தையும், சக்தியையும் ஏந்தி நிற்பவன். இவன் செவ்வாய் என்று போற்றப்படுபவன்.

நான்காவது கோளான புதன் கோள்களில் சிறந்தவன் சிங்கத்தை வாகனமாக உடையவன். மஞ்சள் நிறமுடைய ஆடையை அணிந்தவன். இவனது கரங்களில் வாளும், கேடயமும் அல்லது கதாயுதம் காணப்படும். இவன் சந்திரனின் குமாரனாகக் கருதப்படுபவன்.

ஐந்தாவது கோளான வியாழபகவான் தேவகுரு என்றும், பிரகஸ்பதி என்றும் போற்றப்படுபவன். இவனது கரங்களில் அக்கமாலையும், தண்டமும், கமண்டலமும் காணப்படும்.

ஆறாவது கோளாகச் சுக்கிரன் கருதப்படுகிறான். வெள்ளி என அழைக்கப்படுபவரும் இவரே. அசுரர்களின் குருவானவர்.

ஏழாவது கோளான சனி பகவான் கறுப்பு நிறம் உள்ளவன். காகத்தை வாகனமாக கொண்டவன். இவனது கரங்களில் வில், சூலம், பாம்பு முதலியவை காணப்படும்.

எட்டாவது கோளான ராகு சிங்காசனத்தில் அமர்ந்தவன். இவனது கரங்களில் கத்தி, கேடயம், சூலம் காணப்படும். கூப்பிய கரங்களுடன் காணப்படுவான்.

ஒன்பதாவது கோளான கேது பல வடிவங்களை உடையவன். செம்பட்டை நிறத்தைக் கொண்டவன். கழுகினை வாகனமாகக் கொண்டவன். இவனது கரங்களில் கதாயுதம் காணப்படும். இவ்வொன்பது கோள்களில் பெரும்பாலான கோள்களின் ஒருகரம் வரதமுத்திரையில் அமைப்பது வழக்கம்.

## *சூரியன்*

சூரியன் உருவம் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. மேற்கைகள் இரண்டும் தாமரை மலரைக் கொண்டுள்ளன. கீழ்க்கைகள் இரண்டும் அபய-வரத முத்திரையில் அமைந்து அருள்பாலிக்கின்றன. சூரியனின் தலையைச் சுற்றிலும் ஒளிவட்டம் காணப்படுகின்றது. கிரீட மகுடம், குண்டலம், கண்டசரம், மலர்ப் பதக்கம், கோத்த மணிவடம், புரிநூல், தோள்வளை, காப்பு, உதரபந்தம், முழங்காலுக்குக் கீழ்வரை ஆடை ஆகியவை சூரியனை அலங்கரிக்கின்றன. நவக்கிரக மண்டலத்தில் நடுவே தோன்றும் சூரியன் கீழ்த்திசை நோக்கியுள்ளது. ஆடுதுறை அருகில் சூரியனார் கோயில் உள்ளது.

## *சந்திரன்*

சந்திரன் நவக்கிரக மண்டலத்தில் தென் கிழக்கு திசையில் கீழ்த்திசை நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. சந்திரனின் தலையைச் சுற்றிலும் ஒளி வட்டம் காணப்படுகிறது. கிரீட மகுடம், குண்டலம், கோத்த மணிவடம், கேயூரம், காப்பு, உதர பந்தம், இடைக்கச்சை யாவும் சந்திரனை அழகு செய்கின்றன. சந்திரனின் மேற்கைகள் இரண்டும் அல்லிமலரைத் தாங்கி நிற்கக் கீழ்க்கைகள் இரண்டும் அபய-ஊரு முத்திரையாக இருந்து அருள்பாலிக்கின்றன.

## *செவ்வாய் (அங்காரகன்)*

செவ்வாய் நான்குகைகளுடன் நேராக நின்ற கோலத்தில் தெற்குத் திசை நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. வலது மேற்கை திரிசூலத்தைப் பிடித்துள்ளது. இடக்கை நாகம் சுற்றிய உடுக்கையைக் கொண்டுள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கிறது. இடக்கை கதாயுதத்தின் மேல் அமைந்துள்ளது.

கிரீடமகுடம், மகரக் குழைகள், கண்டசரம், பதக்கம் கோத்த மணிவடம், கேயூரம், காப்பு, இடைக்கச்சை ஆகிய அணிகளும், ஆடையும் செவ்வாயின் உருவத்தை அலங்கரிக்கின்றன.

## *புதன்*

புதன் நவக்கிரக மண்டலத்தில் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ளது. நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் கீழ்த்திசை நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. புதனின் மேற்கைகள் இரண்டும் சக்தி (அம்பு), பாசம் ஆகிய ஆயுதங்களை ஏந்தியுள்ளன. கீழ் வலக்கை கதாயுதத்தின் மேல் அமைந்துள்ளது. இடக்கை அபயம் அளித்து அருள்பாலிக்கிறது.

கிரீட மகுடம், மகர குண்டலம், கண்டசரம், மலர்ப்பதக்கம் கோத்த மணிவடம், உதரபந்தம், சன்னவீரம் ஆகிய அணிகளும், இடுப்பில் இருந்து முழங்காலுக்குக் கீழ்வரை கீழாடையும் தரித்துள்ளது. இச்சிற்பம் மிகவும் பழமையானது.

## *வியாழன்(குரு)*

வியாழ பகவானின் உருவம் நவக்கிரக மண்டலத்தில் வடக்குத் திசையில் அமைந்துள்ளது. குரு நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் வடதிசை நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. வியாழனின் மேற்கைகள் இரண்டும் அக்கமாலையும், கெண்டியும் ஏந்தியுள்ளன. கீழ்க்கைகள் இரண்டும் அபய-வரத முத்திரையில் அமைந்து அருள் பாலிக்கின்றன. கிரீடமகுடம், மகரக் குழைகள், கண்டசரம், மலர்ப்பதக்கம் கோத்த மணிவடம், கேயூரம், காப்பு, உதரபந்தம், இடைக்கச்சை ஆகிய அணிகள் குருபகவானை அலங்கரிக்கின்றன. இவரது இடையில் இருந்து முழங்காலுக்குக் கீழ்வரை கச்சை கட்டப்பட்டுள்ளது. குருபகவான் கோயில் ஆலங்குடியில் உள்ளது.

## *வெள்ளி (சுக்கிரன்)*

சுக்கிரன் நவக்கிரகமண்டலத்தில் கீழ்த்திசையில் நான்கு கைகளுடன் நின்ற கோலத்துடன் காணப்படுகிறது. சுக்கிரனின் மேற்கைகள் இரண்டும் அக்கமாலையும், கெண்டியும் தாங்கி நிற்கின்றன. கீழ் வலக்கை கதாயுதத்தின் மேல் வைத்த நிலையில் காணப்படுகிறது.

இடக்கை வரதமுத்திரையில் அமைந்துள்ளது. கிரீட மகுடம் மகரக் குழைகள், கண்டசரம், மலர்ப்பதக்கம் கோத்த மணிவடம், புரிநூல், கேயூரம், காப்பு, உதரபந்தம், இடுப்பில் இருந்து முழங்காலுக்குக் கீழ்வரை ஆடையும் அலங்கரிக்க, சுக்கிரனின் உருவம் கீழ்த்திசை நோக்கிய வண்ணம் காணப்படுகிறது. இவர் மிகவும் முக்கியமானவர். இவர் நகர்ந்தால் மாற்றம் நாட்டில் ஏற்படும், எரிச்சகன், சுக்கிரன், தலைவன், அசுரகுரு, ஒற்றைக் கண்ணன். சுக்கிரனுக்கு தனிக்கோயில் தமிழ் நாட்டில் கஞ்சனூர்-கண்டியூர் வழியில் உள்ளது. திருவையாறு-கும்பகோணம் வழியிலும் உள்ளது.

## *சனிபகவான்*

சனிபகவான் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் மேற்குத் திசையில் அமைந்துள்ளது. சனியின் வலக்கை பாசத்தையும், இடக்கை வில்லையும் பற்றியுள்ளன. கீழ்வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கை தொடை மீது ஊரு முத்திரையில் காணப்படுகிறது. கிரீடமகுடம், மகரக்குழைகள், கழுத்தணி, கண்டசரம், சன்னவீரம் ஆகிய அணிகளைப் பெற்றுத் திகழ்கிறது. இடையில் இருந்து முழங்கால் வரை கீழாடை அலங்கரிக்கிறது. சூரியபுத்திரனான இவர் சூரியனின் வடக்கே காணப்படுகிறார்.

## *ராகு*

எட்டாவது கிரகமாகிய ராகு நவக்கிரக மண்டலத்தின் தென்மேற்குத் திசையில் காணப்படுகிறது. இரண்டு கைகளை அஞ்சலி முத்திரையில் கொண்டு, தென்திசை நோக்கிய வண்ணம் வணங்கி நிற்கிறது. ராகுவின் தலையை கிரீடமகுடம் அலங்கரிக்கிறது. தலை மீது பெருநாகம் ஒன்று கவிழ்ந்து நிழல் கொடுக்கிறது. நாகத்தின் நீண்ட வால் ராகுவின் முதுகை ஒட்டி கீழ்நோக்கிச் சொல்கிறது. மகரக்குழைகள் காதிலும், கண்டசரம், சரப்பளி கழுத்திலும், தோள்வளை மேற்கையிலும், காப்பு முன்கையிலும் இடைக்கச்சை இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரையிலும் ராகுவை அலங்கரிக்கின்றன.

## *கேது*

கேது நவக்கிரக மண்டலத்தின் வடமேற்குத்திசையில் காணப்படுகிறது. கேதுவின் மேலுடல் மானிட வடிவிலும், கீழுடல்

பாம்பின் வடிவிலும் அமைந்து அஞ்சலித்து நிற்கிறது. கேதுவின் வலது தோளில் தண்டுடன் கூடிய தாமரை மலர் சார்த்தப்பட்டுள்ளது. கிரீட மகுடம், தலையை அலங்கரிக்கிறது. காதுகளில் மகர குண்டலம் காணப்படுகிறது. கேதுவின் இவ்வுருவம் தென்திசை நோக்கிய வண்ணம் வணங்கி நிற்கிறது.

## *கிணறு*

இது கோயிலின் நடுவில் நந்தியின் பக்கத்தில் அமைந்துள்ளது. இந்த கிணறு வட்டமாக உள்ளது. 5 அடி சுற்றளவும், தரையின் மீது 3 அடி உயரம் செங்கற்களால் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இதன் ஆழம் சுமார் 40 அடி உள்ளது. தண்ணீர் தற்போது மேலே (15 அடியில்) உள்ளது. இக்கிணற்று நீர்தான் கோயில் சுத்தம் செய்யவும், மற்ற வேலைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இக்கிணற்றுக்கு வடக்கில் பால அறையும், தெற்கில் உக்ராணமும், கிழக்கில் ஸ்தல விருட்சத்தின் கோயிலும், மேற்கில் மண்டபமும் அமைந்துள்ளன.

## *நந்தி*

சிவபொருமானின் வாகனமான நந்தியை சுவாமி சன்னதியில் எதிரேயுள்ள முகமண்டபத்தில் முன்புறம் அமைப்பது பண்டைய வழக்கமாகும். இந்த நந்தியின் உருவம் நீள்சதுர பீடத்தின் மீது முன் கால்களை மடித்து, பின்காலின் இடையே வாலைச் சுருட்டிய நிலையில் இறைவனை நோக்கிய வண்ணம் படுத்துள்ளது. நீண்ட உடலாகும். வலுவான கால்களும், நிமிர்ந்த தலையும் நேரே இறைவனைப் பார்த்தவாறு அமைந்துள்ளது. பக்கங்களில் விரிந்த காதுகளும், கீழ்வாய்ப் பற்களுடன் திறந்தவாயும், பிறைவடிவான நாசியை நாவால் நீவும் நீண்டநாக்கும், பக்கங்களில் திறந்த கண்களும், செங்குத்தாக வளர்ந்த கூர்மையான கொம்புகளும், திரண்ட திமிலும், நீண்டவாலும், இரண்டாகப் பிளந்த கால் குளம்புகளும், குளம்புகளின் மேற்புறத்தின் அமைந்துள்ள திருகாணிக்குளம்புகளும் மிகக் கவனமாக வார்க்கப்பட்டுள்ளன.

நந்தியின் கொம்புகளின் முனையில் கொப்பியும், நெற்றியில் நீண்ட ஆரமும், வாயைச்சுற்றிலும் முகப்புக்கயிறும், கழுத்தில் ஒற்றை சதங்கை கோத்த கயிறும், மணிகோத்த சதங்கை வாரும், முதுகில்

விரிந்துள்ள விரிப்பும், இடையின் பின்புறம் இடைவாரும் அமைந்து நந்தியை அலங்கரிக்கின்றன. இவ்வுருவம் 6 அடி சதுர பீடத்தின் மீது உள்ளது. பீடத்தின் மீது உள்ள நந்தியின் உயரம் 3½ அடியும், நீளம் 5 அடியும், நந்தியின் பின்புறம் அகலம் 2 அடியும் கொண்டுள்ளது.

## *கொடிக்கம்பம்*

கொடிக்கம்பம் நந்திக்கும் பலிபீடத்திற்கும் நடுவில் அமைந்துள்ளது. நந்தியின் பீடம், கொடிக்கம்பம்பீடம், பலிபீடம் இவை மூன்றும் ஒரே அமைப்பு கொண்ட 20 அடி நீளமும் 6 அடி அகலமும், 5 அடி உயரமும் கொண்ட மேடையாக உள்ளது. இக்கொடிக்கம்பத்தின் கீழ்பகுதியில் நான்கு பக்கங்களிலும் அழகிய உருவம் பொறிக்கப்பட்டுள்ள சிற்பங்கள் காணப்படுகிறது. இக்கம்பம் 1 அடி விட்டம் கொண்டு 25 அடி உயரம் உள்ளது. அதில் பல விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. இடை இடையே மணிகளும் உள்ளது. கோயில் திருவிழாக்கள் கொடி ஏற்றிய பிறகு தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். மாசி மாதத்தில் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும்.

## *பலி பீடம்*

கோயிலில் உள்ள நந்திக்கு பின் கொடிக்கம்பம் அடுத்து காணப்படுகிறது. இப்பீடம் 5 அடி உயரத்தில் 3 அடி சதுரத்தின் பீடத்தில் 1 அடி விட்டத்தில் 3/4 உயரம் கொண்டுள்ளது. இதன் எளிய அதிட்டானத்தின் மீது, விரிந்த தாமரை கவிழ்ந்த நிலையில் விளங்குகிறது. பலி பீடத்தை உலோகத்தால் அமைக்கும் வழக்கம் நாயக்கர் காலத்தில் வழக்கிலிருந்தது. ஆனால் இங்குள்ள பலிபீடம் கருங்கற்களால் ஆனது. ஆகவே இப்பீடம் நாயக்கர் காலத்திற்கு முற்பட்டது எனக் கருதலாம். இதன் காலம் கி.பி.11,12-ஆம் நூற்றாண்டு.

## *மணி*

கோயிலின் உட்புறத்தில் வெண்கலத்தினால் ஆன மணி 15 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நாவில் நீளமான இரும்பு சங்கிலி உள்ளது. இந்த மணி முழுவதும் வெண்கலத்தினால் செய்யப்பட்டது. இதன் உயரம் 2 அடி உயரமும், 2½ விட்டமும்

வேலைப்பாடுகளுடன் காணப்படுகிறது. இந்த மணியின் ஒருபுறம் விளிம்பு சற்று விரிசல் (ஒடிந்து) விட்டதால் ஓசை சற்று குறைவாக ஒலிக்கிறது. இந்த மணியோசை அனைவரின் செவியையும் கவருகிறது. அது எல்லோருடைய கவனத்தையும் கோயிலுக்குக் கொண்டு வருகிறது.

## பால அறை

பால அறை நந்திக்கு வடக்கிலும், வாகன அறைக்கு மேற்கிலும் அதனை ஒட்டியவாறு அமைந்துள்ளது. இது பூஜை நடைபெறும் சமயத்தில் தேவைப்படும் பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

## வாகன மண்டபம் - கோயில் வாகனங்கள்

மணிகண்டேஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் ஆலய திருவிழாக்களின் போதும், அம்மன் பஞ்சமூர்த்தி புறப்பாட்டின் போதும் அவற்றிற்குரிய வாகனங்களுடன் வீதியில் புறப்பாடு செய்தல் வழக்கம். இக்கோயிலில் பெரிய வாகனங்கள் மொத்தம் 11 வாகன உருவங்கள் உள்ளன. இதில் கோயிலின் உள்ளே உள்ள திருச்சுற்று மாளிகையில் மயில் வாகனம், நாக வாகனம், பெரிய மற்றும் சிறிய ரிஷப வாகனம் உள்ளது. கருட, சிம்ம, பூத, அதிகார நந்தி, யானை, குதிரை, புருஷா மிருகம் மற்றும் அன்னம் ஆகிய எட்டு வாகனங்களும் வாகன மண்டபத்தில் மிகவும் பாதுகாப்பாகவும், சுத்தமாகவும் வைக்கப் பட்டுள்ளன. வாகனங்கள் அனைத்தும் தனித்தனியே அதற்குரிய மரப்பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தில் உள்ள 10 தூண்களில் ஆறில் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளன.

## மயில் வாகனம்

சுப்ரமணியரின் வாகனமான மயில் இங்கு அழகிய மர வேலைப்பாடுடன் அமைந்து காணப்படுகிறது. கூர்மையான அலகுடன், கழுத்தைச் செங்குத்தாக உயர்த்திப் பின்புறம் விரிந்த தோகையோடு காணப்படும் மயிலின் உச்சிக் கொண்டை எடுப்பாக உள்ளது. அதன் பக்க இறக்கைகள் மிகவும் மென்மையான வண்ணம் தீட்டப்பட்டுள்ளன. கரும்பச்சை நிறத்தில் வண்ணம் புனைந்து நிற்கும் இம்மயிலின் கழுத்தில் சிவப்புக் கற்கள் பதித்த பதக்கமாலை எழிலூட்டுகிறது. மயிலின் காலடியில் படத்துடன் கூடிய நீண்ட நாகம் காட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் மரப்பீடத்தின் மீது 4 அடியாக உள்ளது.

### நாக வாகனம்

மயில் வாகனத்தை அடுத்து இருப்பது நாக வாகனம். நாகம் நீண்டு பருத்து, தன்னுடைய உடலை நான்கு வட்டமாக வளைத்து, வாலைச் சுருட்டி, தலையை மிகவும் உயரமாக தூக்கிய வண்ணம் காட்சியளிக்கிறது. தன்னுடைய நாக்கை ‘V’ வடிவில் வெளியே நீட்டியவாறும், கண்கள் இரண்டும் (பளிங்குக்கல்) கண்ணாடிப் போல் பிரகாசமாக ஜொலிப்பதுவும் அழகாக உள்ளது. அதனுடைய உடல் அமைப்பு மிகவும் வழவழப்பான உயிருள்ள பாம்புத் தோல்போல் அழகிய வேலைப்பாடுடன் மரத்தில் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. இது மரச்சிற்ப வேலைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது. தன்னுடைய தலையை நன்கு விரித்து குடைபோல் தாங்கியவாறு காட்சியளிக்கிறது. இதன் உருவம் பீடத்தின் மீது 4 அடி உயரம் உள்ளது.

### ரிஷப வாகனம் (காளை )

திருமால்புரம் கோயிலில் உள்ள வாகனங்களில் ஒன்றான ரிஷப வாகனம், செறிவான வேலைப்பாடு கொண்டு, வண்ணம் தீட்டப்பட்டு, வனப்புடன் காணப்படுகிறது. இதன் குறுக்கொம்பும், பக்கங்களில் விரிந்த கண்ணும், நிமிர்ந்த கழுத்தும், உறுதியான கால்களும் காணத்தக்கவை. இக்காளையின் கூர்மையான கொப்பும், நீண்ட உடல்வாகும், சரிந்து நிற்கும் வாலும் அழகானவை. கொம்பு முனைகளில் கொப்பி அலங்கரிக்கப்பட்டு, கழுத்தில் உருண்டைச் சதங்கையும், மணிவாரும், கண்ணாடி பதித்த கழுத்து வாரும் ரிஷபத்தை அலங்கரிக்கின்றன. இதன் எடுப்பான தோற்றத்தில் உடலுறுப்புகள் யாவும் மிக்க கவனமாகச் செதுக்கப்பட்டு மிகவும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. கொப்பிகள், முகத்தில் கற்கள் பதித்த முகவாகும், மூக்குத்துளைகளில் மூக்குக்கயிறும், கழுத்தில் மணிவாரும், சதங்கையும், தொங்குமாலையும், கதம்ப மாலையும், உடலில் விரிப்பும், பின்னுடலில் இடைவாரும் கால்களில் காப்பும் இக்காளை வாகனத்திலுள்ள அழகிய வேலைப்பாடுகளாகும். மரப்பீடத்தின் மீது இதன் உயரம் 4 அடியாக உள்ளது.

### சிம்ம வாகனம்

சிம்மம் தன்னுடைய முன்னிரு கால்களை உயர்த்திக் கொண்டு கம்பீரமாகவும், ஆவேசமாகவும் காணப்படுகிறது. இதனுடைய கூரிய

நகங்களும், புஜங்களும் வலிமை கொண்டுள்ளதாக காட்சியளிக்கிறது. இதனுடைய தலைமுடி சிலிர்த்துக் கொண்டும், முகத்தில் உள்ள கண்கள் இரண்டும் கோலவிழி போல் பார்ப்பதற்கு பயம் ஏற்படக்கூடிய வகையில் அமைந்துள்ளது. அதனுடைய பின்னிரு கால்களும் சற்று உயர்த்தி நிறுத்தியவாறு உள்ளதைப் பார்க்கலாம். அதனுடைய தொடையும் வாலும் தூக்கியவாறு உள்ளது. இதன் மார்பின் கீழ் அசுரன் தன்னுடைய தொடையை நிலத்தில் பதித்து, வலது காலை பின்புறம் மடக்கியும், இடதுகாலை ஊன்றியும் அமைக்கப்பட்டுள்ளான். அவனுடைய வலதுகரத்தில் கூரிய கத்தியும், இடதுகரத்தில் கேடயமும் உள்ளன. கழுத்தை முத்துமாலை அலங்கரிக்கிறது. அவனுடைய படர்ந்த முகத்தில் வீரனின் கம்பீரமான மீசை மேல் நோக்கியவாறு உள்ளது. அவனுடைய தோள்புஜபலம் பெருந்தியவாறு தத்ரூபமாக காட்டப்பட்டுள்ளது. அவனுடைய காலில் சதங்கையும், தொடையில் மாலையும், இடுப்பில் இடைக்கச்சையும் மற்றும் முன்புறம் குசம் உள்ளன. சிம்மத்தின் மார்பின் மீது அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பூ வேலைப்பாடும், சிற்பங்கள் கண்ணைக் கவரும்படி உள்ளன. சிம்மத்தின் நடுமுதுகில் அம்மனுடைய ஆசனம் பொருத்தப்பட்டுள்ளது. இந்த வாகனம் முழுவதும் மரச்சிற்பத்தால் செய்யப்படடது. மரப்பீடத்தின் மீது 4 அடி உயரம் உள்ளது.

## *பூத வாகனம்*

பூத வாகனம் தன்னுடைய இடதுகாலை பின்புறம் மடித்து, வலதுகாலை முன்புறம் ஊன்றி எழுந்திருப்பது போல் நின்ற கோலத்தில் உள்ளது. தொடையும், கால்களும், தலையும் அலங்காரம் செய்யப் பட்டுள்ளன. பூதத்தின் நெற்றியில் விபூதி பூசப்பட்டும், கோல விழிகளுடன், தடித்த உதடுகள் மற்றும் கூரிய கோரைப்பற்களுடன் காட்சியளிக்கிறது. இதனுடைய வலிமையான தோள்கள் (புஜங்கள்) அப்படியே தூக்கிக் கொள்ளுமாறு காட்சியாக செதுக்கப்பட்டுள்ளன. கழுத்தில் முத்து மாலையும், காதுகளில் குண்டலங்களும் காலில் சதங்கையும் அணிந்துள்ளது. இதனுடைய இரண்டுகரங்களும் வரத முத்திரை கொண்டுள்ளன. இதனுடைய தோளில் அம்மனின் இருப்பிடமாக செதுக்கப்பட்ட பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பீடத்தின் உயரம் 4½ அடியாகும்.

## அதிகார நந்தி

இக்கோயிலின் அதிகார நந்தி சற்று மாறுபட்டு, காண்பவர்களைத் திகைப்பூட்டுகிறது. நந்திகளில் மிகவும் முக்கியமானதும் மற்றும் பெரியதுமான இதனுடைய இரண்டுகரங்களில் வலதுகரத்தில் அபய முத்திரையும் இடது கரம் தாங்கும் கரமாக உள்ளது. இதனுடைய தலையை உயர்ந்த கரண்டமகுடம் அலங்கரிக்கிறது. அதில் பல வண்ணம் தீட்டப்பட்டு அழகு செய்யப்பட்டுள்ளது. நெற்றியில் விபூதிபட்டையும், மகுடத்தில் பொட்டும், நெற்றியில் திலகமும் காணப்படுகின்றன. கோலவிழிகள், சிரித்த முகத்துடன் கூடிய வாய் சற்று பிளந்தவாறுள்ளது. கீழ்தாடையில் உள்ள பற்கள் வரிசையாக தெரிகின்றன. நாசியில் (மூக்கில்) இரண்டு துவாரங்கள் காணப்படுகின்றன. தடித்த கழுத்தை அட்டிகை அழகு செய்கிறது. இதனுடைய மார்பில் முத்து மாலையும், ரத்தின மாலையும், தோள் வளையும், கை வளையும், கழுத்தில் நீளமான மாலையும், இடுப்பில் இடைக்கச்சையும், தொடையில் மணியும், காலில் சதங்கையும் அணிகலன்களாக அணியப்பட்டு மிளிர்கின்றன. விரிந்த மார்பும், கட்டான அமைப்புடன், பலம் பொருந்திய கரங்களைக் கொண்டு, எடுப்பான தோற்றத்துடன் நிற்கிறது. இதன் தோளில் அம்மன் இருப்பிடமாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இது மரப்பீடத்திலிருந்து 4½ அடி உயரத்தில் உள்ளது.

## புருஷா மிருகம்

இந்த உருவம் தன்னுடைய முன்னிருகரங்களை உயர்த்தியவாறு வரதமுத்திரையிலும், பின்னிருகால்கள் பூமியில் ஊன்றியவாறு அமர்ந்த நிலையிலும் உள்ளது. புருஷா மிருகம் தலையை நீண்ட கரண்டமகுடம் அலங்கரிக்கிறது. நெற்றியில் விபூதியும், குங்குமப் பொட்டும், விரிந்த கோலவிழிகளுக்கு இடையில் அழகு செய்கிறது. எடுப்பான மூக்கு, பிதுங்கிய உதடுகள், இதனுடைய தாடி கீழ்நோக்கி சுமார் 2 அடி நீளத்திற்கு உள்ளது. காதுகள் படர்ந்து விரிந்து காணப்படுகிறது. கைவளை மற்றும் கால்களில் சதங்கையும் அணியப்பட்டுள்ளது. இதன் முதுகில் அம்மன் இருப்பிடமாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இது பீடத்தில் இருந்து 4 அடி உயரம் உள்ளது.

### *யானை வாகனம்*

யானை தன்னுடைய நான்கு கால்களில் நின்ற நிலையில் உள்ளது. இதனுடைய கால்கள் தூண் போன்று உள்ளது. இதனுடைய தலையை சற்றுத்தூக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது, துதிக்கை நீண்டு, தரையை தொடும் அளவில் உள்ளது. அதில் மாலையைப் பிடித்துள்ளது. இதனுடைய அழகிய கண்களுக்கு கீழே வாயிலிருந்து இரண்டு நீளமாக தந்தங்கள் யானையை அழகு செய்கின்றன. இதன் காதுகள் முறம் போன்று பரந்து விரிந்து காணப்படுகின்றன. கழுத்தில் வெண்கல மணி கட்டப்பட்டுள்ளது. இதன் சுவர் போன்ற நடுமுதுகின் மேல் பலவண்ணங்கள் தீட்டப்பட்டுள்ள விரிப்பும், அதற்கு மேல் சாமி இருப்பிடமாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நடு வயிற்றுவரை இரண்டு நீளமான வெண்கல மணி கட்டப்பட்டுள்ளது. மரப்பீடத்திலிருந்து யானையின் உயரம் 4½ அடி உள்ளது.

### *குதிரை வாகனம்*

குதிரை வாகனம் மற்ற வாகனங்களைப் போன்று இல்லாமல் சற்று வித்தியாசமாக காணப்படுகிறது. இது சுற்றும் குதிரை வகையைச் சார்ந்தது. இதன் முன்னிரண்டு காலை மேலே தூக்கி மடித்த நிலையில், விரைந்து பாய்ந்து செல்லும் புரவியைப் போல பாங்குடன் திகழ்கிறது. இதன் இயற்கையான முகம், கருப்புக்கண்ணாடி பதித்த கண்ணும், விடைத்த மூக்கும், கனைக்கும் வாயும், வரிசையான பற்களும், மிக நேர்த்தியாக அமைந்துள்ளன. குதிரையின் பிடரி கருப்பு வண்ணம் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கிறது. உச்சிக் கொண்டையை பல அணிகள் அலங்கரிக்கின்றன. வலுவான கால்களும், நீண்ட உடல்வாகும் கொண்ட குதிரையின் முதுகில் கண்ணாடிக்கற்கள் பதித்த பூவேலைப்பாடு மிக்க மேல் விரிப்பு வனப்பூட்டுகிறது. வெண்ணிற வண்ணம் தீட்டப்பட்ட குதிரையின் கழுத்தில் கட்டுமாலை, மணிச்சரம், சதங்கை, கழுத்து வார், கயிறு யாவும் அலங்கரிக்கின்றன. நீண்ட உடலைச் சுற்றியுள்ள இடைவார், கண்ணாடித்துண்டு பதிக்கப்பட்டுக் கவினுறக் காட்சியளிக்கிறது. குதிரையின் நடு முதுகில் அம்மன் அமரும் பீடம் மரத்தால் செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ளது. குதிரையின் மார்பில் அழகிய மணிகள் அடிவரை தொங்குகிறது. இது பீடத்தின் மேல் இருந்து 4½ அடி உயரம் உள்ளது.

## அன்ன வாகனம்

அன்னம் நின்ற நிலையில் உள்ளது. இதனுடைய இரண்டு கால்களும் தரையைப் பற்றியுள்ளது. கூர்மையான நகங்கள் நன்கு விரிந்து நீண்டுள்ளது. இதன் கால்களில் சதங்கை கட்டப்பட்டுள்ளன. இது பார்ப்பதற்கு குட்டையாக; உடல் பருத்து இருந்தாலும், கழுத்து மட்டும் உயர்ந்து காணப்படுகிறது. இதன் கம்பீரமான அமைப்பு, எடுப்பான தோற்றம், கூர்மையான அலகு, நேர்த்தியான கொண்டை, மற்றும் பிளந்த வாயுடனும் காணப்படுகிறது. பல வண்ணம் கோத்த மணிகள், மாலைகள் அன்னத்தை அலங்கரிக்கின்றன. இரண்டு இறகுகளும் அதன் பருத்த உடலை மறைத்துள்ளன. வால்பகுதி நீண்டும், பலவண்ணங்கள் கொண்டுமுள்ள, அன்னத்தின் நடு முதுகின் மேல் மரப்பீடம் இருப்பிடமாக பொருத்தப்பட்டுள்ளது. இது மரப்பீடத்தின் மீது 4 அடி உயரம் உள்ளது.

## கருட வாகனம்

வாகன மண்டபத்தில் தனிச்சிறப்பிடம் பெற்ற வாகனம் கருட வாகனம். இது தன்னுடைய வலது காலை பின்புறம் மடக்கியவாறும், இடது காலை தரையில் ஊன்றியவாறும், தன்னுடைய இரண்டு கரங்களையும் வரத முத்திரையில் கொண்டுள்ளது. கருடனுடைய தோளில் பறவையின் இறக்கை அமைந்துள்ளது. இறகுகள் நன்கு படர்ந்து விரிந்து காணப்படுகிறது. இதனுடைய தலையை கரண்டமகுடம் அணி செய்கிறது. நீண்டு அகலமான காதுகளில் நாகம் பதிந்துள்ளது. இதனுடைய பரந்த முகம் கம்பீரமான மீசை, எடுப்பான தோற்றம், தடித்த, பருத்த கழுத்தும், நெற்றில் பட்டை நாமம் போட்டு, கோலவிழிகள் மத்தியில் கிளி போன்ற மூக்கும், பிதுங்கிய உதடும் கொண்டுள்ளது. இதனுடைய கழுத்தில் மணிச்சரம், கண்டிகை, சரப்பளி, சவடி முதலிய அழகிய அணிகள் அலங்கரிக்கின்றன. கழுத்தணியின் குஞ்சம் தோளில் எழிலாகச் சரிந்துள்ளது. பரந்த விரிந்த மார்பில் கச்சையும், கழுத்தில் நாகமும், அது வலது தொடையிலிருந்து இடது முழங்கால் வரை நீண்டு மாலையாக உள்ளது. வயிற்றின் மேல்பாகத்தில் உயர்ந்த கற்கள் பதித்த உதரபந்தம் கட்டப்பட்டுள்ளது. இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகை முத்துக்கள் கோத்த அரைமணி, இடைவார், ஆடைக்கட்டு கால்களில் சதங்கை கோத்த பாதசரம் அணிசெய்கிறது. கணுக்காலில் நாகம் கட்டியவாறும் நாகத்தின் தலை வெளியே

நீண்டிருப்பதும் காணலாம். அடிவயிற்றிலிருந்து தொங்கும் ஆடை தரையைத் தொடுகிறது. இதனுடைய பரந்து விரிந்த தோளில் அம்மன் இருப்பிடமாக பீடம் அமைக்கப்பட்டுள்ளது. கருடனின் உயரம் 4 அடி உள்ளது.

## *துவாரபாலகர்*

துவாரபாலகர் மரச்சிற்பம் வாகன மண்டபத்தின் உள்ளே தனியாக இருக்கிறது. இது நீண்ட சதுரத்தூணில் காணப்படுகிறது. இது 1½ அடி அகலத்தில் 6 நீளத்தில் 2 அங்குல தடிப்பில் செய்யப்பட்டுள்ளது. துவாரபாலகர் சிற்பம் தனது வலது காலை பத்மபீடத்தின் மீது ஊன்றி, இடது காலை மடக்கியவாறு சற்று தூக்கி, நாகம் சுற்றிய கதாயுதத்தின் மீது உள்ளது. இதன் நான்கு கரங்களில், மேலிருகரங்களில் சூலமும், நீலோற்ப மலரும் ஏந்தியுள்ளது. கீழிருகரங்களில், வலக்கரம் கஜ ஹஸ்தத்திலும், இடக்கரம் சூசி ஹஸ்தத்திலும் உள்ளது. நீண்ட கரண்ட மகுடம் அணிந்து, கழுத்திலும், கைகளிலும் அணிகலன்கள் விளங்க, மணிகள் கோத்த நீண்ட மாலை முழங்கால் வரை தொங்க அமைந்துள்ளது. துவாரபாலகர் தலைக்கு மேல் சிம்மமுகம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பம் தற்போது வாகன அறையில் நிறுத்திய நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டு. இச்சிற்பத் தூண் அனேகமாக தேரில் இருந்திருக்கலாம்.

## *ஸ்தல விருட்சம் - வில்வ மரம்*

வில்வம் சிவனுடைய ஸ்தல விருட்சமாக விளங்குகிறது. இந்த மரம் சிவனுடைய லிங்கத்துடன் ஒரு சிறிய சன்னதியாக உள்ளது. இந்த சன்னதிக்கு 10 அடி நீளமும், 8 அடி அகலமும் சுற்றிலும் 4 அடி உயரமுள்ள தடுப்புச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இந்த மரம் 20 அடி உயரம் கொண்டு படர்ந்துள்ளது. இந்த மரம் பூத்துக்காய்ப்பதை 'ஏப்ரல் - மே' மாதங்களில் காணலாம். இந்த சன்னதியின் உள்ளே சிறிய பலிபீடம் கொண்டு லிங்கம் உள்ளது. நாகம் பொறிக்கப்பட்ட கற்சிலை உள்ளது. ஐந்து தலை நாகமும் கொண்டுள்ளது.

## *யாகசாலை*

யாகசாலை கருவறையின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இதற்கு எதிரில் ஸ்தலவிருட்ச மரம் உள்ளது. கிழக்கில் அம்மன்

சன்னதியும், மேற்கில் வாகன மண்டபமும் அமைந்துள்ளது. யாகசாலை பெரும்பாலும் பூட்டியே கிடக்கிறது. கோயிலில் பூஜை மற்றும் அபிஷேகங்கள் செய்யும் போதும் திருப்பணி செய்யும் போதும் இந்த யாகசாலை பயன்படுத்தப்படுகிறது. இதன் நீளம் 20 அடியும் அகலம் 15 அடியும் உயரம் 15 அடியும் கொண்டுள்ளது. பழமையான இம்மண்டபம் சேதமடைந்துள்ளது. பெரும்பாலும் உபயோகத்தில் இல்லை.

## *அஞ்சனாட்சி அம்மன் சன்னதி*

அம்மன் சன்னதி தனிக்கோயிலாக இரண்டாம் திருச்சுற்றில் உள்ளது. இது கருவறையின் வடகிழக்கு கோயில், தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இச்சன்னதியின் கருவறையில், அஞ்சனாட்சி அம்மன் திருவுருவம் உயர்ந்த பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில், நான்கு கைகளுடன், நேராக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. அம்மனின் மேல் வலக்கை குவிந்த தாமரை மொட்டினைப் பிடித்துள்ளது. கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்து அருள்பாலிக்கிறது. இடக்கை வரத முத்திரையில் அருள் வழங்கும் கையாக அமைந்து காணப்படுகிறது. அம்மனுடைய தலையை உயர்ந்த ஜடாமகுடம் அலங்கரிக்கிறது. நீள் செவிகளில் மகர குண்டலங்கள் அணி செய்கின்றன. கழுத்தில் பொட்டு மணியும், மங்கல நாணும், கண்டசரமும், சரப்பளியும் அழகு செய்கின்றன. மேல் வயிற்றில் சன்னவீரம் அலங்கரிக்கிறது. மேற்கைகளில் கேயூரம், முன் கைகளில் கைவளையும், காப்பும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை உடலை ஒட்டிச்செல்லுமாறு மடிப்புடைய ஆடை அழகு செய்கிறது. காலில் காப்பு அணி செய்கிறது. நீண்ட முகமும், கோடிட்ட புருவமும், நீண்டு மலர்ந்த கண்களும், குவிந்த திருவாயும், மெலிந்த உடல்வாகும், அருள்சுரக்கும் முகத்தோடும் அம்மன் பொலிவோடு காட்சி தருகிறாள்.

அம்மனின் எதிரே சிம்ம வாகனம் உரிய பீடத்தின் மீது நேரே உள்ளது. இது பீடத்தில் இருந்து 3½ அடி உயரத்தில், 3 அடி நீளம் கொண்டு உள்ளது. அதன் பின்புறம் 1½ அடி அகலம் கொண்டு மிகவும் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. அம்மனின் இருபுறங்களிலும் துவார பாலகிகள் உருவங்கள் நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இதன் உருவம் பீடத்தில் இருந்து 6 அடி உயரத்திற்கு 2 அடி அகலம் கொண்டுள்ளது. வலதுபுறம் உள்ள

துவாரபாலகியிடம் மேலிரண்டு கரங்களில், வலதுகரத்தில் சூலமும், இடதுகரத்தில் அக்கமாலையும், கீழ் இரண்டுகரங்களில், வலதுகரத்தில் தர்ஜனை முத்திரையும், இடதுகரத்தில் கதாயுதம் கொண்டும் உள்ளது. இடதுபுறம் உள்ள துவாரபாலகியிடம் மேல் வலதுகரத்தில் சூலம், இடதுகரத்தில் அக்கமாலை, கீழ் வலதுகரத்தில் கதாயுதம், இடதுகரத்தில் தர்ஜன் முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளது.

அம்மன் சன்னதியில் முன்மண்டப விதானத்தில் பாவுக்கல்லில் மீன் உருவம், பெண்கள் கைக்கூப்பிய உருவமொன்றும், பக்கத்தில் யானையும், மறுபக்கதில் பெண் ஒருத்தி நிற்கவும், நடுவில் லிங்கத்தின் உருவம் உள்ளது. இருபுறங்களில் தெற்கில் உள்ள சிற்பம் பாதி மிருக உருவம் யானையும், மற்ற உருவம் பாதி மிருகமும் கொண்டுள்ளது. இந்த சிற்பம் ஏதோ ஒரு நிகழ்ச்சி அல்லது புராணத்தைக் குறிக்கிறது.

## *வீர ஆஞ்சநேயர் சிற்பம்*

அம்மன் சன்னதியின் வெளித்தூணில் உள்ள கல்லில் வீர ஆஞ்சநேயர் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த சிற்பம் தன்னுடைய வலது காலை சற்று தாழ்த்தி, இடது காலை மடித்தவாறு நின்ற கோலத்தில் காட்சியாக செதுக்கப்பட்டுள்ளது. இது தன்னுடைய இரண்டு கரங்களில் வலது கரத்தில் கதாயுதத்தையும், இடது கரத்தை தன் இடது தொடையின் மீது வரத முத்திரையிலும் கொண்டுள்ளது. நீண்ட வால் அதனுடைய தலைக்கு மேல் வரை சென்று காட்சி அளிக்கிறது. இதனுடைய கூரிய முகமும் பிளந்த வாயும் கொண்டு வீரத்தோடு கம்பீரமாக காட்சி அளிக்கிறது. இதனுடைய தோளில் மாலையும், கழுத்தில் வடமாலையும் அணிந்துள்ளது. கைகளில் கைவளையும், இதன் இடுப்பில் இடைக்கச்சையும், தொடை மீது வனப்பூட்டும் முத்துத்தாமமும், கால்களில் சதங்கையும் அணிந்துள்ளது. இதன் உயரம் 1½ அடி அகலம் 1 அடி கொண்டுள்ளது. இதன் காலம் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டு. இத்தூண் மணிகண்டேஸ்வரர் ஆலயத்தில் முன் மண்டபத்தில் தாங்கி நிற்கும் தூண் ஆக உள்ளது. இதில் உருளையும், சதுரமான அமைப்பும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலே உள்ள கற்சிற்பம் 1 அடி அகலத்தில் 1½ அடி உயரத்திற்கு உள்ள இந்தச் சிற்பம் திருமால் தன்னுடைய தவம் நிறைவேறிய பிறகு சிவனிடம் இருவரங்கள் பெற்ற பிறகு அந்த மகிழ்ச்சி கடலில் மூழ்கி சிவபெருமானை கட்டி தழுவினார்

என்பதை உணர்த்தும் பொருட்டு இச்சிற்பம் அமைக்கபட்டுள்ளது. இதில் உள்ள இலிங்கம் மிகவும் சிறியதாகவும் எழில் மிக்க அமைப்பும் கொண்டு மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கபட்டுள்ளது. இதனை திருமால் தாழ்ந்து வணங்கி கட்டி அன்போடு தழுவுகிறார். புராணத்தை கூறும் வகையில் அந்த சிற்பம் அமைக்கபட்டுள்ளது. பக்தியின் சிறப்பை வெளிப்படுத்துகிறது என்பதை அறிய முடிகிறது. இதன் காலம் கி.பி. 16, 17 – ஆம் நூற்றாண்டு. அதே தூணில் திருமால் சிற்பத்திற்கு நேரே கீழே உள்ள மற்றொரு சிற்பத்தில் கிருஷ்ணன் குழல் வாசிப்பது போல் காட்சியாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் திருமால் வாசிக்க அதனை கேட்டு மயங்கிய சிவபெருமானின் இசை ஆர்வத்தைக் காணும் வகையில் அவருடைய நடனம் காணலாம். இச்சிற்பம் 1 அடி அகலத்தில் 1½ அடி உயரத்திற்கு செதுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டு.

மணிகண்டேஸ்வரர் ஆலயத்தின் உள்ளே செல்லும்போது வாயிற்படியில் இடதுபுறத்தில் கோபுரத்தின் அடித்தளத்தில் உள்ள கல்லில் பொறிக்கபட்ட இரண்டு அரிய சிற்பங்களை இங்கு காணலாம். மேலே உள்ள சிற்பம் 1½ அடி அளவு கொண்டுள்ள சதுரகல்லில் பொறிக்கப்பட்டுள்ள உருவம் 'பன்றி' ஆகும். இதன் நான்கு கால்களும் தரையில் ஊன்றியவாறு நின்ற கோலத்தில் காணப்படுகிறது. முன்னிரு கால்கள் சற்று விரிந்தும், பின்னிருகால்கள் சற்று வளைந்தும், ஓடுவதுபோன்ற அமைப்பில் உள்ளது. இதனுடைய அகன்ற தடித்த கூரிய வாயும், கோரை பற்களும் கொண்டுள்ளது. இதனுடைய காது மேல் நோக்கியவாறும், உருண்டையான கண்ணும் பெற்று பீடத்தின் மீது நின்ற கோலத்தில் உள்ளது. இதற்கு முன் கூரியவாள் ஒன்று கீழ் நோக்கியவாறும் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்புறம் நீளமாகவும் கூர்மையாகவும் உள்ளது. பின்புறம் கைப்பிடி போன்று அமைப்பும் கொண்டுள்ளது.

இந்தச் சின்னம் அனேகமாக விஜயநகரர் காலத்து சின்னமாக கருதலாம். இது வெற்றியின் சின்னமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதன் காலம் கி.பி.15,16-ஆம் நூற்றாண்டு.

இச்சிற்பத்திற்கு கீழே உள்ள மற்றொரு சிற்பம் புராணத்தை வெளிப்படுத்தும் வகையிலும், பக்தியின் சிறப்பும், பெருமையும் சிறந்து விளங்கியது என்பதற்கு அடையாளமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த

சிற்பம் சதுரக் கல்லில் 1½ அடி அளவில் மிகவும் சிறப்பாக செதுக்கப்பட்டுள்ளது கவனிக்க தக்கது. இதில் இலிங்கத்திற்கு பசு பால் சொரிவது காட்டப்பட்டுள்ளது. பசு தன்னுடைய நான்கு கால்களில் நின்ற கோலத்தில் கழுத்தை நன்றாக வளைத்து இலிங்கத்தை தன்னுடைய நாவினால் நாவுவதும் தன்னுடைய மடியிலிருந்து தானாகவே பால் சுரந்து லிங்கத்தின் திருமேனியில் விடுவதும் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இதனுடைய வாலை தன்னுடைய முதுகின் பின்புறமாக வளைத்து காட்டியவாறு உள்ளது. இதன் காலம் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டு.

## *மடப்பள்ளி*

கோயிலின் உள்ளே திருச்சுற்று பிரகாரத்தில், கருவறைக்கு தென்கிழக்கில் மடப்பள்ளி உள்ளது. இதில் கோயிலுக்கு தேவையான சமையல்பொருட்கள் மிகவும் பாதுகாப்பாக வைப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இதில் கோயிலில் உள்ள சாமிக்கு அமுது படைப்பதற்கும் தேவையான திருஅமுது செய்வதற்கும், விஷேச பூஜையின் போது பிரசாதம் செய்வதற்கும் இந்த அறை பயன் படுத்தப்படுகிறது. இதில் சமையல் அறை மற்றும் குடிநீர் தொட்டி, அருகில் உள்ள தீர்த்தகிணறும் தற்போது உபயோகத்தில் இல்லாமல் பாழடைந்து காணப்படுகின்றன.

## *பதினாறுகால் மண்டபம்*

இந்த மண்டபம் திருச்சுற்று பிரகாரத்தில் தெற்கில் உள்ளது. இதன் நேர் எதிரில் யாக சாலை உள்ளது. இந்த மண்டபத்தை நான்கு பத்திகளில் சித்திர மண்டபக் கால்கள் தாங்கி நிற்கின்றன. வரிசைக்கு 4 தூண்கள் வீதம் 4 வரிசைகளில் மொத்தம் 16 (கால்) தூண்கள் இம் மண்டபத்தை அலங்கரிக்கின்றன. இம்மண்டபத்தை தாங்கி நிற்கும் தூண்கள் மேலும், கீழும் சதுரமாக அமைந்து தாங்கி நிற்கிறது. தற்போது இந்த மண்டபத்தின் தூண்கள் சிதைந்து காணப்படுகிறது. இப்போது இதில் 4 தூண்கள் காணவில்லை. 2 தூண்கள் அரைத்தூண்களாக உள்ளன. இதன் அருகில் உக்ராண மண்டபம் அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில் கோயில் பொருட்களை வைத்து எடுப்பது வழக்கம். இதுவும் சிறிய அறையாக உள்ளது.

கோயிலைச் சுற்றி வந்தபிறகு அதன் விமானத்தில் மத்தியில் சிவனும், பார்வதியும் ரிஷப வாகனத்தில் அமர்ந்துள்ளனர். இதன் இருபக்கங்களில் வலதுபுறம் விநாயகர் மூசிக வாகனத்திலும் இடதுபுறத்தில் மயில் வாகனத்தில் முருகன் சிற்பம் அமைந்துள்ளது. நான்கு புறத்திலும் முனையிலும் காளையுடன் கூடிய போத்ராஜா உருவம் அமைக்கப்பட்டுள்ளது. தெற்குப் புறம் நடராஜர், அவர் பக்கத்தில் தட்சிணாமூர்த்தியின் திருவுருவம். மேற்கில் கிருஷ்ணன் நாகத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ள சிற்பம், வடக்கில் பிரம்மன் உருவம் உள்ளன. மேலும் வீர ஆஞ்சநேயர், திருமால் உருவம் ஆகியவை கோயிலின் விமானத்தை அலங்கரிக்கின்றன. கோயிலின் முன்புறம் சன்னதியின் எதிரில் உள்ள நந்தி, கொடிக்கம்பம், பலி பீடம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு தற்போது மேற்கூரைகள் வேயப்பட்டுள்ளன. இதன் நடுவில் அலங்கார மின்விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

கோயிலின் வெளியே வரும் போது கோபுரத்தின் கீழ் அடித்தளத்தில் வலது புறத்தில் விநாயகருக்கும், இடதுபுறத்தில் சுப்பிரமணியருக்கும் தனித்தனியே கோயில்கள் சிறியதாக அமைக்கப்பட்டுள்ளன.

## *விநாயகர் சன்னதி*

இச்சிலை கருங்கற்களால் ஆனது 4 அடி உயரம் கொண்டு 3 அடி அகலத்தில் மூசிக வாகனம் அமைக்கப்பட்டுள்ளது. இது நான்கு கரங்களுடன் காட்சி அளிக்கிறது. மேல் வலக்கை கடக முத்திரையில் அங்குசத்தைப் பற்றியும், இடக்கை பாசத்தையும், கீழ்வலக்கை ஒடிந்த தந்தத்தையும், இடக்கை மோதக உருண்டையையும் ஏந்தி உள்ளது. மானிட உடலும் யானை முகமும் கொண்ட விநாயகரின் துதிக்கை கீழ் வயிற்றை நோக்கிச் சரிந்து இடம்புரியாக வளைந்துள்ளது. விநாயகரின் தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. மகுடத்தின் பின்புறம் மலர் முகப்புடைய வட்டமான சிரச்சக்கரம் செதுக்கப்பட்டுள்ளது. மேல் நோக்கி நிமிர்ந்த யானை முகமும், பெருத்தமத்தகமும், நீண்டு ஒடுங்கிய துதிக்கையும், தோள்வரை சரிந்த காதும் நெற்றியும், முக்கண்ணும், தூக்கிய புருவமும், விரிந்த கண்களில் கூர்மையான பார்வையும் வலப்புறம் ஒடிந்த தந்தமும், இடப்புறம் கூர்மையான தந்தமும் பக்கங்களில்

மடிப்புடைய துதிக்கையும், அளவான மார்பும், சற்றுப் பெருத்த தொந்தியும் சதைப்பற்றுள்ள குட்டையான அங்கங்களும் கொண்ட நிலையில் இவ்வுருவம் காணப்படுகிறது.

## *சுப்பிரமணியர் சன்னதி*

வள்ளி, தெய்வானையோடு விளங்கும் சுப்பிரமணியரின் சிலை இங்கு மயில் வாகனத்தில் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றனது. இதனுடைய மேல் வலக்கை சக்திபடையும், இடக்கை வஜ்ரப்படையையும் ஏந்தி நிற்க, கீழ்க்கைகள் இரண்டும் அபய, வரத முத்திரையில் அமைந்து அருள்பாலிக்கின்றன. தலையில் கரண்ட மகுடமும், பின்புறம் வட்டமான சிரச்சக்கரமும் அலங்கரிக்கின்றன. சுப்பிரமணியரின் நெடிய உருவமைப்பு, திரட்சியான உடல் வாகு, உயர்ந்த கரண்ட மகுடம், நீள்வட்ட முகம், தூக்கிய புருவம் விரிந்த கண்கள், எடுப்பான மூக்கு, மலர்ந்த திருவாய், திரண்டதோள், விரிந்த மார்பு, அளவான அங்கங்கள், அணிகலன் நிறைந்து காணப்படுகிறது.

## *குளம்: சக்கர தீர்த்தம்*

கோயிலின் எதிரில் இக்குளம் செவ்வகவடிவில் அமைக்கப்பட்டுள்ளது. நீளம் 120 அடி நீளமும் அகலம் 100 அடியும் கொண்டு பெரிய கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் படிகள் நீளமாகவும் அகலமாகவும் கனமாகவும் உள்ளது. இதன் ஆழம் சுமார் 25 அடி முதல் 30 அடி வரை உள்ளது. இந்த சக்கர தீர்த்த குளத்தில் குளித்து விட்டு தான் பிறகு கோயிலுக்கு சென்று வழிபடுவது வழக்கம். ஆனால் இப்போது குளம் சுற்றிலும் பெரும் பகுதியை மறைத்துக் கொண்டுள்ளது. குளத்தில் தற்போது மழைபொழிந்ததால் ஓரளவிற்கு நீர் உள்ளது. குளம் முழுவதும் நீர் நிரம்பியது சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்புதான். இப்போது குளம் நான்கு புறங்களிலும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் புதுப்பிக்கபட்டுள்ளது. குளத்தின் வாயிற்படியில் கல் சிற்பம், பாம்புடன் கூடிய கொடிக்கம்பம் நிறுவப்பட்டுள்ளது. இக்குளத்தின் வடகிழக்கு மூலையில் விநாயகர் கோயில் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்தக் கோயிலுக்கு எதிரே "கோமுட்டி செட்டியின் மகன் துரைசாமி செட்டியார் அவர்கள் நட்டு வைத்த கால்" உள்ளது. இதில் நாகத்தின் சிற்பம் அமைக்கபட்டுள்ளது. இந்த தீர்த்தக்குளத்திற்கு நேர் எதிரில் சத்திரம்

உள்ளது. இது முன்பு திருமணத்தின் போது பயன்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது மண்டபம் சேதமடைந்து காணப்படுகிறது. இந்தக் குளத்திற்கு நீர் நிரம்புவதற்கு கோயிலில் உள்ள தண்ணீர் திருக்குளத்தை வந்து அடைய வழியும் உண்டு.

## தேர்

கோயிலின் எதிரில் தேர் உள்ளது. ஆலயத்தில் உள்ள தேர் இன்றும் உபயோகத்தில் உள்ளது. இது சுமார் 6 அடி சதுரத்தில், 15 அடி உயரம் கொண்டுள்ளது. இதன் நான்கு சக்கரங்களும் சுமார் 5½ உயரமும், 1¼ அடி அகலமும் கொண்டுள்ளது. இத்தேரின் கீழ்த்தட்டிலும், நடுத்தட்டிலும் மேல் தட்டிலும் உள்ள சிற்பங்கள் மிகவும் அழகாகவும், சிறப்பாகவும் கொண்டுள்ளது.

கீழ்த்தட்டில் வலமிருந்து இடமாக மயில் வாகனத்தில் முருகன், தட்சிணாமூர்த்தி, விநாயகர், பூதகணம், துவாரபாலகர், வீணை ஏந்திய பெண், காளிங்கநர்த்தனர், ரிஷபதேவர், வேணுகோபாலன், ஆண் பெண், இன்பக்களிப்பில் உள்ள சிற்பம், கோமாளி, பைரவர், கொடிப்பெண், அமர்ந்த அம்மன், யாழ் இசைக்கும் வனிதை, கதை ஏந்திய வீரன், சிம்ம வாகினி, பணிப்பெண், ஆடையற்ற அணங்கு, ஆண் குறியைப் பற்றி நிற்கும் காமுகன், பிட்சாடனர் ஆகிய சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. ஒவ்வொன்றும் 18 செ.மீ உயரமும் 10 செ.மீ அகலமும் 4 அங்குள்ள (கணமும்) தடிப்பும் கொண்டுள்ளது.

நடுத்தட்டில் திருமால்அவதாரம், விநாயகர், ஆறுமுகன், அழகிய பெண்களுடன் கூடும் ஆண்கள், ஆண்களிடம் போகம் துய்க்கும் பெண்கள், பள்ளியறையில் சிவன் உமையுடன் தோன்றும் காட்சி, இராமர் பட்டாபிஷேகம், மகாவிஷ்ணு, ஆறு தலைகளுடன் 12 கைகளுடன் இருக்கும் காட்சி, நாகம், பூதம், கஜலட்சுமி பூதகணங்கள் நடனம் ஆடுதல், மத்தளம் போடுதல், வீணை வாசிப்பது மற்றும் குதிரை மீதும், யானைமீதும் சவாரி செய்யும் போர் வீரன் சிற்பம், ஒற்றைக்கால் தவம் செய்தல் போன்ற அரிய சிற்பங்கள் மிகவும் தத்துரூபமாக செதுக்கபட்டுள்ளமை கலைத்திறன் பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியது. மேலே உள்ள தட்டில் மார்க்கண்டேயன், குதிரை பூட்டிய தேரில் வில்லும், அம்பும் ஏந்தி சம்ஹாரம் செய்யும் திரிபுராந்தகர், அவரை வணங்கும் அசுரன் ஆடையற்ற நிலையில் தோன்றும் மோகினி, திருமாலைச் சுமக்கும் கருடன், நாகத்தின் மீது

நிற்கும் கிருஷ்ணன், துர்க்கை, அன்னத்தின் மீதுள்ள இரதி, இராமன் இலக்குவன், சீதை, அம்மன், அனுமான் உருவம் பொறிக்கபட்டுள்ளது. வாலி, சுக்ரீவன் சண்டை போன்ற பல அரிய காட்சிகளை இந்த தேரின் மூன்று நிலைகளிலும் மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் செய்யப்பட்டது சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்தத் தேரின் எதிரில் மிகவும் பாழடைந்த (கல்யாண சத்திரம்) திருமண மண்டபம் உள்ளது. இதில் 50,60 – ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. ஆனால் தற்போது மண்டபத்தில் உள்ள சுவர், மரங்கள், அனைத்தும் சேதமடைந்துள்ளன. தற்போது உபயோகத்தில் இல்லாமல் ஆடு, மாடுகள் தங்கும் இடமாக மாறியுள்ளது. இது சுமார் 120 அடி நீளமும் 90 அடி அகலமும் கொண்டுள்ளது.

## திருமதில்

அருள்மிகு மணிகண்டேஸ்வரர் கோயில் மிகவும் சிறப்புற்று விளங்குகிறது. இதனை சுற்றிலும் ஒரு ஏக்கர் அளவிற்கு மிகவும் அகலமான (2½ அடி கொண்டதும்) உயரமான மதில்கள் (20 அடி உயரத்தில்) கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்த மதில் கோயிலின் அமைக்கப்பட்டு இருப்பதால் கோயில் பாதுகாப்பாகவும், சேதம் அடையாமல் இருக்கவும் உதவுகிறது. மதிலின் உள்ளே கோயிலில் உள்ள திருச்சுற்று பிரகாரத்தில் உள்ள நந்தவனம் மிகவும் பாதுகாப்பாகவும் அழகாகவும் உள்ளது. இந்த மதில் தற்போது சுத்தப்படுத்தப்பட்டு வெண்சுதையில் பூசப்பட்டுள்ளது. இருப்பினும் சுவர் மிகவும் பழமையானதால் அதில் எடுப்பான தோற்றம் அனைவரையும் கவர்கிறது.

# செப்புத் திருமேனிகள்

## *விநாயகர்*

இப்படிமம் சமபங்கத்தில் பத்ரபீடத்தின் மேலுள்ள, பத்ம பீடத்தில் நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் காட்சி அளிக்கிறது. மேல் வலக்கை கடகமுத்திரையில் அங்குசத்தையும், இடக்கை பாசக்கயிற்றைச் செங்குத்தாகப் பிடித்துள்ளன. பாசக் கயிற்றின் மேல் முகப்பைத் தாமரை மொட்டு அலங்கரிக்கின்றது. கீழ் வலக்கை ஒடிந்த தந்தத்தைப் பற்றியுள்ளது. இடக்கை மோதக உருண்டை ஏந்தி உள்ளது. மானிட உடலும், யானை முகமும் கொண்ட விநாயகரின் துதிக்கை கீழ் வயிற்றை நோக்கிச் சரிந்து இடம்புரியாக வளைந்துள்ளது. வனப்புடன் வளைந்த இடம்புரி துதிக்கையின் நடுவே மோதக உருண்டை ஒன்று காட்டப்பட்டுள்ளது.

விநாயகரின் தலையைக் கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. மகுடத்தின் பின்புறம் மலர் முகப்புடைய வட்டமான சிரச்சக்கரம் செருகப்பட்டுள்ளது. மகுடத்தின் முகப்பிலும் பக்கவாட்டிலும் பூரிமங்கள் தைக்கப்பட்டுள்ளது. விநாயகரின் பெருத்த மத்தகமும் வேலைப்பாடு மிக்கதாகத் திகழ்கிறது. யானை முகத்தானின் காதுகளை விரிந்து தோள்வரை சரிந்துள்ளன. மேல்நோக்கி நிமிர்ந்த யானை முகமும், பெருத்த மத்தகமும் நீண்டு ஒடுங்கிய துதிக்கையும், நெற்றியும், முக்கண்ணும், தூக்கிய புருவமும், விரிந்தகண்களில் கூர்மையான பார்வையும் அளவான மார்பும் சற்றுப்பெருத்த தொந்தியும், சதைப்பற்றுள்ள குட்டையான அங்கங்களும் இப்படிமத்தில் சிறப்பான இடத்தினை பெற்றுள்ளது. இதன்காலம் : கி.பி.16, 17–ஆம் நூற்றாண்டு.

## *சோமஸ்கந்தர்*

இப்படிமம் பத்திர பீடத்தின் மேலுள்ள பத்ம பீடத்தில் வலக்காலை தொங்க விட்டுக்கொண்டு இடதுகாலை மடித்துக் கொண்டு அமர்ந்த நிலையில் உள்ளது. தன்னுடைய நான்கு கரங்களில் மேல் வலது கரத்தில் மழுவும், இடதுகரத்தில் மானும், கீழ் வலது

கரத்தில் அபய முத்திரையும் (காக்கும் கை) இடதுகரத்தில் சிம்மகரணம் கொண்டுள்ளது. இதன் தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. காதுகளில் மகர, பத்ர குண்டலங்கள், செவிப்பூ காணப்படுகின்றது. இவருடைய இடப்பக்கத்தில் தேவி வலதுகாலை மடித்து, இடக்காலைச் சிறிது தொங்கவிட்ட நிலையில் அமர்ந்துள்ளார். வலக்கை மலர் தாங்கும் பாவனையில் கடக ஹஸ்தத்திலும், இடக்கை ஆகூய வரதத்திலும் அமைந்துள்ளது. இதன் நெற்றியை வட்டமான குங்குமம், தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. கழுத்தில் மாலையும் கையில் கைவளையும், கால்களில் சதங்கையும் அணிந்து சிரித்த முகத்துடன் காட்சி அளிக்கிறது. இத்திருமேனிகளின் காலம் கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டு.

## *தனி அம்மன்*

இப்படிமம் திரிபங்கத்தில் பத்ம பீடத்தின் மீது நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. இது தன்னுடைய இரண்டு கரங்களில் வலது கரத்தில் கடக ஹஸ்தத்திலும் இடது கரத்தில் லோலஹஸ்தத்திலும் காட்சி தந்து அருள்புரிகிறது. உமையின் தலையை உயர்ந்த கேசபந்தமும், பின்தலையைச் சிரச்சக்கரமும் அலங்கரிக்கிறது. நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப்பட்டம் வனப்பூட்டுகிறது. மேல்செவியில் செவிப்பூவும், நீள்செவியில் மகரக் குழைகள் அணிசெய்கின்றன. கழுத்தில் மெல்லிய கண்டசரமும், மணிவடமும், கண்டிகையும், சுவடியும் அழகு செய்கின்றன. அம்மனின் மேற்கைகளில் தோள்வளையும், முழங்கையில் கடகமும், முன் கைகளில் காப்பும், கைவளையும், விரல்களில் மோதிரமும், அணி செய்கின்றன. இடையைச் சுற்றிலும் இடைவாரும், இடையில் இருந்து தொடையை ஒட்டி வெளிப்படும் கீழாடை நான்கு மடிப்புகளுடன் அமைந்து முழுங்காலுக்குக் கீழ் தரை வரை நீண்டு செல்கிறது. கால்களில் தண்டையும், பாதங்களில் பாதசரமும் அணி செய்ய அழகே உருவாக தனியம்மனின் தோற்றம் காட்சியளிக்கிறது. உடலை ஒயிலாக ஒடித்தும், நேர்த்தியான உடற்கட்டு, அழகிய மேலுடல் வச்சிர இடை, வனப்பூட்டும் முன்னழகு யாவும் இச்சிலையில் நேரில் காணத்தக்கவை. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

## விஷ்ணு

இப்படிமம் சமபங்கத்தில் பத்ம பீடத்தின் மீது நின்ற கோலத்தில் காட்சித்தருகிறது. இதனுடைய நான்கு கரத்தில் மேல்வலக்கையில் சக்கரத்தையும், இடக்கை சங்கையும் ஏந்தி உள்ளன. கீழ் வலதுகரத்தில் அபய முத்திரை உள்ளன. தலையின் நீண்ட கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. காதில் மகர குண்டலங்கள் உள்ளன. தோளில் தோள்மாலை சரிந்துள்ளது, கழுத்தில் கண்டிகை கிரைவேகஹாரம், சரடு ஆகிய ஆபரணங்கள் அலங்கரிக்கின்றன. இடதுமார்பில் முத்தாலான பூணூல் அலங்கரிக்கிறது. மேல் வயிற்றில் உதர பந்தம் காணப்படுகிறது. முன் இரண்டு கையில் கைவளைகள் அணிசெய்கின்றன. இடையிலிருந்து கணுக்கால் வரை அழகிய பீதாம்பரம் வனப்பூட்டுகிறது. காலில் காப்பு, பாதசரம் என்னும் அணிகளும் உள்ளன. இவ்வுருவம் வட்டமான பீடத்தில் நீண்டமுகமும், மெலிந்த புருவமும், விரிந்த கண்களும், அகன்ற மூக்கும், மூடிய உதடுகளும் நெற்றியில் நாமம் கொண்டு அருள்பாலிக்கும் பார்வை பெற்று விளங்குகிறது. இத்திருமேனியின் காலம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டு.

## சந்திரசேகர அம்மன்

இப்படிமம் தாமரை இருக்கையின்மேல் நின்ற கோலத்தில் இரண்டுகரங்களுடன் காட்சி அளிக்கிறது. வலக்கை கடகமுத்திரையில் மலர் ஏந்தும் பாவனையில் உள்ளது. இடக்கை டோல முத்திரையில் தாழ்கையாக நீண்டுள்ளது. கரண்ட மகுடம் தலையிலும், வட்டமான சிரச்சக்கரம் பின் தலையிலும் அலங்கரிக்கின்றன. நெற்றியைச் சுற்றிலும் முத்துப்பட்டமும் அதன்மேல் தலையைச் சுற்றிலும் கண்ணிமாலையும் அழகு செய்கின்றன. நீள்செவியில் மகரக்குழையும், மேல் செவியில் செவிப்பூக்களும், கழுத்தில் பொட்டுமணி, முத்து வடம், முத்தாரம், சரப்பளி ஆகிய அணிகளும், தோளில் வாகுமாலையும், மேற்கையில் பூரிமம் தைத்த கேயூரமும், முழங்கையில் காப்பும், முன்கையில் கைவளையும், விரல்களில் மோதிரமும், மார்பில் நூலும் இடையைச் சுற்றிலும் மணிகள் கோத்த பொன்னணியும், மேகலையும், தொடை மீது குரங்குசெறியும், அரைவட்ட வடிவுடைய இடைவாரும், இடையின் பக்கங்களில் முழங்காலுக்குக் கீழ் தரைவரை சரிந்து வனப்பூட்டும் பாதங்களில் பாதசரமும் அம்மனின் அழகு கண்டு களிக்கத்தக்கவை. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

### *சந்திரசேகரர்*

இப்படிமம் வட்டமான பத்ம பீடத்தில் நேராக நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தன்னுடைய நான்குகரங்களில் மேல்வலக்கையில் மழுவும் இடக்கையில் மானும் பற்றியுள்ளது. கீழ்வலக்கை அபய, வரத முத்திரையில் காணப்படுகிறது. நீள் சடைமுடி தலையிலும், மலர் மாலை நெற்றிமேலும், முத்துப்பட்டம், நெற்றியிலும், சிரசக்கரம் பின்தலையிலும், தலைக்கோலமாக அலங்கரிக்கின்றன. வலது காதில் சிறிய மகரக் குழையும், இடதுகாதில் வட்டமான பெரிய குண்டலமும் அழகு செய்கின்றன. தோள்களின் மீது தோள்மாலை வீழ்ந்துள்ளது. கழுத்திலும் மார்பிலும் பெரிய முத்துவடம், மெல்லிய முத்தாரம், சரப்பளி, அரும்புச்சரம் ஆகிய அணிகள் அல்ங்கரிக்கின்றன. இடது தோளை முத்துப்பூணூல் அழகு செய்கிறது. நடுவயிற்றில் உதரக்கச்சையும், மேற்கையில் பூரிமம் முகப்புடைய கேயூரம் அலங்கரிக்கிறது. முழங்கையில் கடகமும், முன்கையில் மூன்று முத்துவளைகளும் அழகு செய்கின்றன. இடையின் முன்புறம் சிம்மமுகப்புடைய கச்சை அலங்கரிக்கிறது. மேலும் இடையைச் சுற்றிலும் அரைப்பட்டிகையும், இருகால்களின் இடையே உள்ள நீண்ட முத்துச் சரமும், பாதங்களில் பாதசரமும் இவ்வுருவை அலங்கரிக்கிறது. சதுரமான முகமும், அகன்ற நெற்றியும், நீண்ட கண்களும் எடுப்பான மூக்கும், சற்று பிரிந்த வாயும், விரிந்த மார்பும், நீண்ட உடல்வாகும் கொண்டு இப்படிமம் விளங்குகிறது. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

### *சுந்தரர்*

இப்படிமம் தாமரை இருக்கை மீது வலதுகாலை ஊன்றி, இடது காலைச் சற்று முன் வைத்து, இடுப்பை வலப்புறமாகச் சாய்த்து, இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் உள்ளது. வலக்கை அழகிய தாமரை மொட்டினைக் கடக முத்திரையில் பிடித்துள்ளது. இடக்கையால் கோலை ஊன்றி உள்ளது. வேலைப்பாடு மிக்க கிரீட மகுடம் தலையை அலங்கரிக்கிறது. நெற்றியைச் சுற்றிலும் இரத்தினப்பட்டம் அழகுசெய்கிறது. இடது தோளிலிருந்து கீழ் வயிற்றை நோக்கிப் புரிநூல் ஓடுகிறது. முன் கைகளில் காப்பும், இடையிலிருந்து முழங்கால் வரை வனப்பூட்டும் ஆடைக்கட்டும், கால்களில் கழலும் அலங்கரிக்க இளவரசனைப்போன்று தோற்றம் அளிக்கிறது. அரச மரியாதையுடன் காணப்படுகிறது. வட்டமான முகமும், கோடிட்ட

புருவமும் நெற்றியில் வட்டமான திலகமும், மலர்ந்த கண்களும் கூர்மையான மூக்கும், குவிந்த திருவாயும், திரண்ட தோளும், அகன்ற மார்பும் பெற்று இவ்வுருவம் சிறந்து விளங்குகிறது. இந்த திருமேனியின் காலம் கி.பி.16-17 ஆம் நூற்றாண்டு.

## *அப்பர்*

திருவாமூரில் தோன்றிய அப்பர் பெருமானை இங்கு வயது முதிர்ந்த சிவனடியாராகக் கூப்பிய கரங்களோடு தாமரை இருக்கையின்மேல் இருகரங்களுடன் நின்ற கோலத்தில் உள்ளது. இவரது வலது தோளில் உழவாரப்படை சார்த்தப்பட்டுள்ளது. இவரது மழுக்கப்பட்ட தலையைச் சுற்றிலும் உருத்திராட்சமணிகள் கோத்த வட்டமான மணிமாலை அலங்கரிக்கின்றது. மார்பில் உருத்திராட்ச மாலை அமைந்து, முன்கைகளில் காப்பும் அணிசெய்கிறது. இவரது இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை, நீண்ட எளிய ஆடையும் இடுப்பைச் சுற்றிலும் கட்டி மடித்த துண்டும் அணிந்து பக்திப் பெருக்கோடு எளிமையாகக் காட்சியளிக்கிறது. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

## *மாணிக்கவாசகர்*

பாண்டிய நாட்டில், திருவாதவூரில் தோன்றித் திருவாசகம் தந்த வாதவூராருக்கு இங்கு செப்புத்திருமேனி உரிய இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையின் மேல் இருகால்கள் ஊன்றி நின்றகோலத்தில் காணப்படுகிறது. இவரது வலக்கை அக்கமாலையையும் இடக்கையில் ஏடு ஏந்திய நிலையில் எளிமையாகக் காட்சி அளிக்கிறது. இவரது தலையைச் சுற்றிலும் சுருண்ட கேசங்கள் அழகு செய்கிறது. காதுகள் அணிகலன்கள் இன்றி எளிமையாகக் காணப்படுகிறது. கழுத்தைச்சுற்றிலும் மணிகோத்த உருத்திராட்சம் அணிசெய்கிறது. மார்பில் மணிகள் கோத்த நீண்டமாலை வனப்போடு காட்சியளிக்கிறது. கைகளில், காப்பு அழகு செய்கிறது. இடுப்பைச் சுற்றிலும் அரைஞாண் அணிந்து காலில் அணிகளின்றி எளிமையாகக் காணப்படுகிறது. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

## திருஞானசம்பந்தர்

இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் வலதுகாலை ஊன்றி, இடதுகாலைச் சற்று முன் வைத்து, இடுப்பைச்சற்று வலப்புறம் ஒடித்து, இரண்டுகைகளுடன் நின்ற கோலத்தில் காணப்படுகிறது. வலதுகை மேல் நோக்கி சூசி முத்திரை காட்டுகிறது. இடக்கை பொற்கிண்ணம் ஏந்தி உள்ளது. கழுத்திலும், மார்பிலும் மாலை அணிசெய்கிறது. கைகளில் கைவளையும், காலில் தண்டையும் அணிந்து காட்டப்பட்டுள்ளார். இத்திருமேனியின் காலம் கி.பி. 16-17 ஆம் நூற்றாண்டு.

## நடராசர்

இப்படிமம் சதுரமான உயர்ந்த பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் பக்கவாட்டில் திரும்பியபடி முயலகன் கவிழ்ந்து கிடக்கிறான். அவன் முதுகில் ஆடும் பெருமான் தன் வலது திருவடியைக் குறுக்காக வளைத்து ஊன்றி இடது திருவடியை மேலே தூக்கி முன்புறம் வீசிய நிலையில் நான்கு கைகளை விரித்து ஆடுகிறார். இவரது மேல் வலக்கை தமரு முத்திரையில் உடுக்கையைக் குறுக்காகப் பிடித்துள்ளது. இடக்கை அர்த்த சந்திர முத்திரையில் அமைத்து சுடர்விட்டு எரியும் தீ அனல் ஏந்தி நிற்கிறது. கீழ் இடக்கை மார்பின் பக்கவாட்டில் நீண்டு அபய முத்திரை காட்டி அருள்பாலிக்கிறது. அபய கரத்தின் பின்புறம் சீறி நிற்கும் நாகம் ஒன்று தன் வாலால் அக்கையைப் பிணைத்து நிற்கிறது. அக்காட்சி நாக வளையம் போன்று தோற்றம் அளிக்கிறது. கீழ் இடக்கை மார்புக்குக் குறுக்காக நீண்டு வேழ முத்திரை காட்டுகிறது. ஆடும் பெருமானின் பரந்த முகம் நிமிர்ந்த நிலையில் உயர்ந்த தலைக்கோலம் சடை மகுடமாக அமைந்து அழகு செய்கிறது. அதில் ஆடும் அரவம் வலப்புறமும் பிறை நிலா இடப்புறமாக அமைந்து அணிசெய்கிறது. மகுடத்தின் இருபுறமும் வேகத்தில் விரிந்தாடும் விரிசடைகள், ஒலிக்கும் பாத சதங்கை காலிலும் கிண்கிணி என்னும் ஒற்றை மணி வலது முழங்காலின் கீழும், எளிய தோலாடை இடுப்பிலும், அரைப்பட்டிகை இடையிலும், சரிந்து, தொங்கும் ஆடைக்கட்டு இடது தோளிடையிலும், மெல்லிய உதரபந்தம் மேல் வயிற்றிலும் புரிநூல், மார்பிலும், சவடி, கண்டிகை, மணிவடம் கழுத்திலும் மோதிரம் விரலிலும் வளைந்த வங்கிபுறங்கையிலும் மணிவளை முன்கையிலும், கடகவளை முழங்கையிலும், இலைக்கருக்கு முகப்புடைய தோள்வளை

மேற்கையிலும், மகரக்குழை வலது காதிலும் வட்டக் குழை இடது காதிலும் இரத்தினப்பட்டம் நெற்றியிலும், சிரச்சக்கரம் பின் தலையிலும், சடை மகுடம் தலையிலுமாக அமைந்து நடராசப் பெருமானை அழகு செய்கின்றன.

ஆடும் கூத்தனின் அழகிய திருவடியின் கீழ் இளம் குழந்தையைப் போல் கவிழ்ந்து தவழும் நிலையில் முயலகன் காட்டப்பட்டுள்ளான். அவனது இடக்கரம் ஆடும் நாகத்தை இறுகப் பிடித்துள்ளது. அவனது வலக்கரம் ஆடும் நாகத்தின் முன் சுட்டிய நிலையில் நாகமுத்திரை காட்டுகிறது. அவன் முகம் பக்கவாட்டில் திரும்பி, ஆடும் அண்ணலின் தூக்கிய திருவடியை உற்று நோக்குகிறது. அவனது தலையைச் சுற்றிலும் திரிசடைகள் வனப்பூட்ட, நெற்றியில் திலகம் தரித்து, காதில் வட்டக் குழை அணிந்து கழுத்தில் கண்டசரமும், சவடியும் பூண்டு காணப்படுகிறான். அவனது கரங்களில் காப்பும், தோள் வளையும், அலங்கரிக்கின்றன. இடுப்பில் ஆடை தரித்து உள்ளான். கால்களைத் தண்டை அலங்கரிக்கிறது. முயலகனின் பரந்த முகமும் உயர்த்திய புருவமும், வியந்து வெறித்துப் பார்க்கும் பார்வையும் கூர்மையான பெருத்த நாசியும் கடைவாய்ப் பற்களோடு கூடிய அகன்ற வாயும் சதைப் பற்றுள்ள குட்டையான அங்கங்களும் பருத்த உடலும் கவனிக்கத்தக்கது. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

## *சிவகாமி*

இப்படிமம் நடராசப் பெருமானின் இடதுபுறம் சதுரமான உயர்ந்த பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் அருகில் சிவகாமி அழகே உருவாக இருகைகளுடன் நின்ற கோலத்தில் தனிப்பீடத்தில் அமைந்துள்ளது. தாமரை இருக்கையில் இரு கால்களை ஊன்றி திரிபங்கியாகத் தோன்றும் அம்மனின் இடை வலப்புறம் ஒயிலாக வளைந்து நிற்கிறது. வலதுகை மலரைப்பிடிக்கும் பாவனையில் கடக முத்திரையில் அமைந்துள்ளது. சிவகாமியின் தலையை உயர்ந்த கேசபந்தமும், பின்புறம் சிரச்சக்கரமும் இரத்தினப்பட்டம் வனப்பூட்ட, காதுகளில் மகரக் குழைகள் அலங்கரிக்க, கழுத்தில் கண்டசரமும், கற்கள் பதித்த அட்டிகையும் அழகு செய்ய மார்பில் இரு தனங்களுக்கிடையே புரிநூல் ஓட, மேற்கையில் தோள்வளையும், முழங்கையில் கடகவளையும், முன் கையில் காப்பும், கைவளையும், புறங்கையில் வங்கியும் அணிசெய்ய இடையில் இருந்து

முழங்காலுக்குக் கீழ் வரை இடைக்கச்சை எழில் கூட்ட, இடையைச் சுற்றிலும் இடைமணி, இடைவார், பட்டிகை எளிய மேகலையும் அழகு செய்ய, தொடைமீது குரங்குச் செறி சரிந்து நிற்க, கால்களில் காப்புமாக, முடி முதல் அடி வரை அணிகலன்கள் தரித்துச் சிவகாமி அழகின் திருவுருவமாகக் காட்சியளிக்கிறது. மகுடம், கல் பதித்த அட்டிகையை ஒத்த கழுத்தணி, இடையின் முன்புறம் உள்ள சிம்மமுகக் கச்சையின் முகப்பு, காப்பு, கைவளை, கடகம், தோள்வளை முதலிய அணிகள் கீழ் உடலை அலங்கரிக்கும் இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

## *மாணிக்கவாசகர்*

இப்படிமம் நடராசரின் சன்னதியில் நடராசருக்கு வலது பக்கத்தில் சதுரமான உயர்ந்த பீடத்தின் மீது உள்ள தாமரை இருக்கையில் இரண்டு கால்களையும் ஊன்றி நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. இதனுடைய வலக்கையில் அக்கமாலைப்பற்றி அபய முத்திரை காட்டுகிறது. இடக்கையில் ஏந்தியுள்ள ஏடு எழுத்துக்கள் இன்றி எளிமையாகக் காட்சியளிக்கிறது. இதனுடைய மழுங்கிய தலையைச் சுற்றிலும் உருத்திராட்சமாலை அலங்கரிக்கிறது. இதன் தோள் வரை நீண்ட தொள்ளைக் காதுகளில் சிறிய வளையம் அணி செய்கிறது. கழுத்தில் கண்டசரமும், மார்பில் கற்கள் பதித்ததை யொத்த பொற்கரமும் அழகு செய்கின்றன. விரிந்த இடது மார்பிலிருந்து முப்புரிநூல் கீழ்நோக்கி ஒடுகிறது. மேற்கைகளில் கேயூரம் என்னும் பட்டையான தோள்வளை அலங்கரிக்க, முன்கைகளில் மணிகள் கோத்தகாப்பு வனப்பூட்டுகிறது. இடையிலிருந்து கீழ்த்தொடை வரை எளிமையான ஆடையும், இடையைச் சுற்றிலும் துண்டும் அணிந்து கெண்டைக்கால்களில் கால்காப்பும் தரித்துக் காட்சியளிக்கிறது. இத்திருமேனியின் காலம் கி.பி.16,17-ஆம் நூற்றாண்டு.

# வழிபாடும் விழாக்களும்

திருமாற்பேறு, மணிகண்டேஸ்வரர் கோயிலில் தினமும் நான்கு கால பூசை நடைபெறுகின்றது. மாசி மாதத்தில் பத்து நாட்களுக்கு பெருவிழா நடை பெறுகிறது. இதை தவிர கிருத்திகை, ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், கார்த்திகை தீபம், ஆனிதிருமஞ்சனம், ஆருத்ரா, கருடசேவை முதலிய சிறப்பு விழாக்களும் நடைபெறுகின்றன.

சித்திரை - சதய நட்சத்திரம் அப்பர் சுவாமி உற்சவம்.

வைகாசி - மூல நட்சத்திரம் ஞான சம்பந்தர் உற்சவம்.

ஆனி - மகம் நட்சத்திரம் மாணிக்கவாசகர் உற்சவம்.

ஆடி - சுவாதி நட்சத்திரம் சுந்திரமூர்த்தி உற்சவம்.

ஆவணி - திருமஞ்சனம் நடராசர் உற்சவம், மூல நட்சத்திரம் பிட்டுக்கு மண் சுமந்தது உற்சவம்.

புரட்டாசி - அம்மனுக்கு திருவிழா, நவராத்திரி விழா

ஐப்பசி - கந்தர் சஷ்டி

கார்த்திகை - கார்த்திகை தீபம், சங்கு அபிஷேகம்

மார்கழி - நடராசர் ஆருத்ரா உற்சவம்

தை - தை கிருத்திகை விழா

மாசி - சிறப்புத் திருவிழா பத்து நாட்கள் விழா

பங்குனி - பங்குனி உற்சவம்

இக்கோயிலின் திருவிழா மாசி மாதம் 10 நாட்கள் சிறப்பாக நடைபெறும். அந்தப் பத்து நாட்களில் அம்மனுக்குரிய வாகனங்களில் சிறப்பான வழிபாடும் பூசையும் செய்து வாகனங்களை அலங்கரித்து அம்மன் ஊர்வலம் நடைபெறும். விழாவின் தொடக்க நாளில் கோயிலில் கொடி ஏற்றிய பிறகு விழா பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

| | |
|---|---|
| ஒன்றாம் நாள் | : இரவு முதலில் சிம்ம வாகனம் ஊர்வலம் நடைபெறும். |
| இரண்டாம் நாள் | : காலையில் சூரிய பிரபையும் அன்று மாலையில் சந்திர பிரபையும் நடைபெறும். |
| மூன்றாம் நாள் | : கிருத்திகை உற்சவம் மயில்வாகனம் உலா வருதல் |
| நான்காம் நாள் | : காலையில் நாகவாகனத்திலும் இரவு ரிஷிப வாகனத்தில் உலா வருதல் |
| ஐந்தாம் நாள் | : காலையில் அதிகாரநந்தியும் இரவு புருஷாமிருகம் உலா வருதல் |
| ஆறாம் நாள் | : காலையில் நாயன்மார்கள் உற்சவமும் இரவு யானை வாகனம் உலா வருதல் |
| ஏழாம் நாள் | : காலை ரத உற்வசம் மாலையில் கோட்ட உற்சவமும் நடைபெறும். |
| எட்டாம் நாள் | : காலையில் பிச்சாண்டி உற்சவம் கல்யாணத்தில் பிச்சை எடுப்பவர் இரவு சுவாமி கல்யாணம் நடைபெறும். |
| ஒன்பதாம் நாள் | : குதிரை வாகனத்தில், மதியம் குளத்தூர் உற்சவம் நடைபெறும் |
| பத்தாம் நாள் | : சந்திரசேகரர் உற்சவம் தீர்த்தவாரி – நடராசர் உற்சவம் இரவு அவரோசனம் கேடயம், உற்சவம் நடைபெறும் |
| பதினோராம நாள் | : கந்தபிடி உற்சவம் அடுத்து மூன்று சப்பர உற்சவம் |
| பன்னிரெண்டாம் நாள் | : விடாயத்தி உற்சவம் நடைபெறும். |

இக்கோயிலில் உள்ள நகைகளில் பொன்னாலாகிய உருத்திராட்ச மாலையும், அம்பாள் பொன்காசு மாலையும் அரிய நகைகளாகும். இக்கோயிலுக்கு நன்செய் நிலமும், புன்செய் நிலமும், தோட்டமும் உள்ளன.

நகரத்தார் திருப்பணியில் 26.4.1937–ல் கும்பாபிஷேகம் நடத்தப் பெற்ற இத்திருக்கோயிலில் தற்போது திருப்பணிகள் நடைபெறுகின்றன. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களின் பொன் விழாத் திட்டத்தின் கீழ் இக்கோயிலில் உள்ள சுவாமி அம்மாள் விமானங்கள் திருப்பணி செய்யப்பட்டு அவர்களின் ஆதரவில் விபவ ஆண்டு ஆவணி மாதம் 22-ம் நாள் (7-9-1989) அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

# பிறகோயில்கள்

## *கோனார் கோயில்*

இக்கோயில் திருமாற்பேறு மணிகண்டேஸ்வரர் ஆலயத்திற்கு கிழக்கில் 1 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் தற்சமயம் வழிபாட்டில் இல்லாமல் உள்ளது. இக்கோயிலை சுற்றிலும் முட்கம்பி வேலி போடப்பட்டுள்ளது. இக்கோயிலின் உள்ளே இலிங்கம் மட்டும் உள்ளது. இதற்கு எதிரில் நந்தியும் அதற்கு பின்புறம் ஒரே அளவு கொண்ட உருளை போன்று சிற்பங்கள் எதுவும் இல்லாமல் மூன்று கல்தூண்கள் தனித்தனியே நிற்கிறது. இந்த தூண்களைப் பார்க்கும் பொழுதும் கவனிக்கும் போதும் பல்லவர் காலத்திய கலைப்பாணியில் இருக்கிறது. எனவே இந்தத் தூண் பல்லவர் காலத்தை சார்ந்ததாக கருதலாம்.

புனித அஸ்தியைப் புதைத்தவிடத்தில் அதீத கிருகமும், அதன் நினைவாக இலிங்கப் பிரதிஷ்டை செய்த கோயிலும், அமைப்பது பண்டை மரபு என்பது இக்கல்வெட்டால் மட்டுமன்றிப் பல்லவ மன்னன் கம்பவர்மனின் எட்டாம் ஆண்டில் கங்க மன்னனான பிருதிவிபதி இறக்கவே, அவனுடைய மகன் இராசாதித்த மகாதேவன் தன் தந்தையைப் பள்ளிப்படுத்தவிடத்து ஆலயமும் அதீத கிருகமும் சோழபுரத்தில் எடுப்பித்தான் என்ற செய்தியாலும் வலியுறுகிறது.

ஆதித்தேசுவரம் இருதளக் கற்றளி, கருவறையும், அர்த்த மண்டபமும், கொண்ட இக்கோயிலின் கருவறையில் உருண்டை வடிவமான இலிங்கம் காணப்படுகிறது. இக்கோயிலைச்சுற்றித் தேவ கோஷ்டங்கள் இருக்கின்றன. இதன் இரண்டாம் தளத்தின் வெளிப்புறத்தைச் சாலைகளும், கூடங்களும் அணி செய்கின்றன. இதன் சதுர வடிவமான கிரீவமும் சிகரமும் உருண்டை வடிவமான ஸ்தூபியும் தற்போது புதுப்பிக்கப்பட்டன. கிரீவத்தின் நான்கு திசையிலும் உள்ள கோஷ்டங்களில் சிலைகள் உள்ளன. கிரீவத்தின் அடித்தளத்தில் நான்கு மூலைகளிலும் ரிஷபங்கள் காணப்படுகின்றன. தன் தந்தையின் பள்ளிப்படையாகப் பராந்தகன் கட்டிய இக் கோதண்ட ராமேசுவரம் சரித்திரச் சிறப்புடையது.

## *மாரியம்மன் கோயில்*

இக்கோயில் மணிகண்டேஸ்வரர் கோயிலுக்கு தெற்கிலும், பெருமாள் கோயிலுக்கு மேற்கிலும், யாதவர் தெருவின் முனையில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இந்தக் கோயில் மிகவும் பழமையானது. அம்மனின் சன்னதியில் கருவறையில் அம்மன் உருவம் பீடத்தின் மீது 3 அடி உயரத்தில் உள்ளது. அமர்ந்த நிலையில் உள்ள அம்மனிடத்தில் நான்கு கரங்களில் மேல் வலது கரத்தில் சூலம், இடதுகரத்தில் டமரும், கீழ் இரண்டுகரத்தில் கீழ் வலது கரத்தில் கத்தியும் கீழ் இடது கரத்தில் வரத முத்திரையிலும் காணப்படுகிறது. சன்னதிக்கு எதிரில் பலி பீடம், சிறிய கோயிலில் சிரசும், நாகம் சுற்றிய கொடிகல்லும் அமைந்துள்ளது. தற்போது கோயிலின் முன்பு இரும்பு கம்பியால் செய்யப்பட்ட கதவு போடப்பட்டது, சுற்றிலும் செங்கற்களால் 4 அடி உயரத்திற்கு சுவர் எழுப்பப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு பூசைகளும் அபிஷேகமும் நடைபெறுகிறது. மக்கள் அம்மன் அருள்பெற்று வருகின்றனர்.

## *பொன்னி அம்மன் கோயில்*

இக்கோயில் மணிகண்டேஸ்வரர் கோயிலுக்கு வடக்கில், நடுத்தெருவில் வீற்றிருக்கும் விநாயகர் கோயிலுக்கு பக்கத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் ஊரின் முக்கிய இடத்தை வகிக்கிறது. இது ஊரின் கிராமதேவதை என்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் உள்ளே அம்மன் பீடத்தில் சிம்ம வாகனத்தில் அமர்ந்த நிலையில் நான்குகரத்துடன் வீற்றிருக்கிறது. மேல் இருகைகளில் வலது கரத்தில் சூலமும், இடதுகரத்தில் டமரும், கீழ் இருகைகளில் வலது அபயமும், இடதுகரத்தில் வரத முத்திரையிலும் காணப்படுகிறது. அம்மனின் எதிரே பலிபீடம் உள்ளது. இதற்கு முன்புறம் சிம்மமும் பீடத்தின் மீது உள்ளது. கோயிலின் நுழைவு வாயிலில் அம்மனின் வலதுபுறத்தில் வீரன் ஒருவன் தன் தலையை பலி இடுவதாக அமைக்கப்பட்ட உருவம் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இந்த கோயிலில் காலையிலும் மாலையிலும் பூசை நடைபெறுகிறது. இந்தக் கோயிலின் விஷேசமான திருவிழா தைமாதம் ஊரணி விழாவாக கொண்டாடப்படுகிறது.

## நவகண்டம்

இந்தச் சிற்பம் வீரன் ஒருவன் பீடத்தின் மீது நின்ற கோலத்தில் உள்ளான். தன்னுடைய இரண்டு கரத்தில் வலது கரத்தை இடையில் செருகி உள்ள கத்தியைப் பற்றியவாறும், இடது கரத்தில் உள்ள நீளமான கத்தியை தன் கழுத்தின் மேல் வைத்து வெட்டுவது போல் காட்சியாக உள்ளது. இதனுடைய தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. வட்டமான நீள்முகத்தில் வெற்றித்திலகமும், தடித்த உதடுகளுக்கு மேல் கம்பீரமான மீசையுடன் காணப்படுகிறது. கழுத்தில் மாலையும், கைகளில் கைவளையும், தோள்களில் தோள்வளையும், இடுப்பில் இடைக்கச்சையும், காலில் காப்பும் அணிந்து காட்சி அளிக்கிறது. இந்த சிற்பம் 2 அடி அகலத்தில் 3½ அடி உயரத்தில் 1 அடிகனத்தில் 2½ அடி சதுர பீடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் இடது புறத்தில் விநாயகர் சிற்பம் உள்ளது.

இந்தக் கோயிலின் திருவிழா ஒவ்வொரு வருடமும் தை மாதம் கடைசி வாரம் செவ்வாய் கிழமையில் ஊரணி திருவிழாவாக நடைபெறுகிறது.

## பொன்னி அம்மன் திருவிழா

பொன்னி அம்மனின் திருவிழா ஆண்டுதோறும் தை மாதத்தில் கடைசி செவ்வாய் கிழமையில் மிகவும் சிறப்பாக் கொண்டாடப்படுகிறது. திருவிழா நடைபெறும் அன்று, காலையில் பொங்கல் கூடையுடன் பொதுமக்கள் ஊர்வலத்துடன் சென்று எல்லையில் உள்ள பொன்னி அம்மன் கோயிலுக்கு (இது 2 கி.மீ தூரத்தில் உள்ளது) பொங்கல் வைத்து, அங்கு கரகம் ஜோடித்து பிறகு எலுமிச்சை, பூசணிகாய் பலிகொடுத்து, கரகத்தை குறிப்பிட்ட நபர்மட்டும் எடுத்துக் கொண்டு ஊரில் உள்ள நடுத்தெருவின் வழியே சென்று பொன்னி அம்மனின் ஆலயத்தில் வந்து சேரும். பிறகு உடனே மாலையில் மீண்டும் பொங்கல் வைத்து அலங்காரம் செய்து அபிஷேகம் முடிந்த பிறகு அம்மன் உலா வருதல் சிம்மவாகனத்தில் வெகுவிமரிசையாகவும், சிறப்பாகவும், வானவேடிக்கையுடன், புறப்பட்டு ஊர் முழுவதும் சுற்றி வந்த பிறகு அன்று இரவு நிலைக்கு வந்து சேரும். இரவு மண்டபத்தின் முன்பு நளாயினி புராண வரலாறு ஆண், பெண் பாகம் பற்றிய நாடகம் நடைபெறும். அந்த நாடகத்தின் இடையில் குறவர் வரும் காட்சியில்

செங்குந்தர் வருவார். அவர் உறவினர் என்பதை பற்றி கூறுவர். இரவு நாடகம் முடிந்தபிறகு மறுநாள் காலையில் மீண்டும் அம்மன் ஊர்வலம் வந்த பிறகு கீழே இறக்கி அதற்கு அபிஷேகம் செய்து ஊர் மக்கள் சார்பாக திருவிழாவில் பங்குபெற்ற முக்கிய பிரமுகர்களுக்கு ஊர்மரியாதை செய்யப்படும். இறுதியில் மீண்டும் அம்மன் பழைய நிலையை அடையும். ஊரில் அந்தச் சமயத்தில் நத்தன் குடக்கை என்ற பெரிய விழா நடைபெறும். 30 ஆண்டுகளுக்கு முன்பு இந்த விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. இப்பொழுதும் திருவிழா நடைபெறுகிறது.

## *திரௌபதி அம்மன் கோயில்*

இக்கோயில் பொன்னி அம்மன் கோயிலுக்கு வடமேற்கில் அமைந்துள்ளது. சன்னதியின் முன்பு உள்ள நான்கு கற்தூண்கள் கோயிலை தாங்கி நிற்கிறது. இந்தத் தூண்களில் சிற்பம் எதுவும் இல்லாமல் உள்ளது. சன்னதியில் முன்னால் விதானத்தில் பாவுக்கல்லில் உள்ள சிற்பம் மீன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கருவறையில் உள்ள அம்மன் உயர்ந்த பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளது. அம்மன் எதிரே போத்தராஜா உள்ளது. இதற்கு பின்னால் கொடிக்கம்பம் உள்ளது. கொடிக் கம்பத்திற்கு பின்னால் பலி பீடம் உள்ளது. அர்த்தமண்டபத்தில் முத்தால் ராவுத்தர் கருவறையின் தெற்கில் அமைக்கபட்டுள்ளது. கருவறைக்கு எதிரில் போத்தராஜா என்ற உருவம் தன்னுடைய வலதுகாலை மடக்கி, இடதுகாலை முட்டி ஊன்றி, தொடையின் மீது தன் இடது கையால் அவருடைய தந்தையின் தலையைவெட்டி உறுதியாக பிடித்துக் கொண்டுள்ளது. கூரிய வாளை தன்னுடைய வலது கரத்தில் பற்றிவுள்ளது. 3 அடி பீடத்தில் 1½ அடி உயரத்தில் 2 அடி அகலம் கொண்டு அமைக்கபட்டுள்ளது. 2 அடி உயரத்தில் போத்தராஜா உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கருவறையின் தெற்கில் அர்த்த மண்டபத்தில் உள்ள மரச் சிற்பங்களில் தர்மராஜா நடுவில் அமைந்துள்ளது. இதன் வலது புறத்தில் அர்ச்சுனன் உருவமும், இடதுபுறத்தில் திரௌபதி அம்மன் உருவமும் அமைக்கப்பட்டுள்ளது. தர்மராஜா தன்னுடைய இரண்டு கரங்களில் அபய முத்திரையும், வரத (முத்திரையும் கொண்டுள்ளது. அர்ச்சுனன் வலதுகரத்தில் வில்லும், இடதுகரத்தில் அம்பு கொண்டுள்ளார். திரௌபதி அம்மன் கைகளில் அபய, வரத முத்திரையில் காட்சியளிக்கிறது.

சகாதேவன் வலதுகாலை நீட்டி, இடதுகாலை மடக்கி அமர்ந்த கோலத்தில் வலது கரத்தில் கத்தி(பிச்சுவா)யும், இடதுகரத்தில் வரதமுத்திரையும் காட்டியுள்ளது. இவருடைய தலையை கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. கைவளை காலில் சதங்கை, இடுப்பில், ஆடையும் அணிந்து காணப்படுகிறது. இவரை அடுத்து இருப்பது நகுலன் உருவம் இது பீடத்தின் மீது நின்ற கோலத்தில் இரண்டு கரங்களில் வலதுகரத்தில் கத்தியும், இடது கரத்தில் கேடயம், கொண்டு கழுத்தில் முத்துமாலையும் மற்ற அணிகலன்களும் காணப்படுகிறது. கைகளில் கைவளையம் காலில் சதங்கை, தோளில் தோள்வளையும், இடுப்பில் உதரபந்தம் ஆகியவை அணிசெய்கிறது. மேலும் கிருஷ்ணனிடம் வலதுபுறத்தில் ராதாவும், இடதுபுறத்தில் ருக்மணியும் காணப்படுகின்றனர். கோயிலின் நான்கு முனைகளில் கருட உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயிலாக உள்ளது. தற்போது கோயில் திருப்பணிகள் செய்யப்பட்டு புதுபிக்கப்பட்டுள்ளது. கொடிக்கம்பம் '25' அடி உயரம் உள்ளது.

## *அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில்*

கோயில் ஊரின் வெளியே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. தருமராஜா கோயிலுக்கு வடக்கே அமைந்துள்ளது. மிகவும் பழமையான கோயில். கருவறையில் அம்மன் செவ்வக பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் வலதுகாலை தொங்கவிட்டு. இடது காலை மடித்தும் நான்குகரத்துடன் காட்சியளிக்கிறது. மேல் வலதுகரத்தில் சூலமும், இடதுகரத்தில் தாமரை மொட்டினையும், கீழ் வலது கரத்தில் அபய முத்திரையும், கீழ் இடக்கையில் வரத முத்திரையும் கொண்டு காட்சி அளிக்கிறது. சன்னதியின் எதிரே பீடத்தில் சிம்மத்தின் உருவம் உள்ளது. இதனை அடுத்து பலிபீடம் அமைந்துள்ளது. சன்னதியின் பக்கதில் வேம்பு மரம் உள்ளது. கோயிலின் தெற்கில் குளம் உள்ளது. தற்போது அதில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. பார்ப்பதற்கு குட்டை போன்று உள்ளது. இந்த அம்மன் கோயிலின் வலதுபுறம் விநாயகரும், இடதுபுறம் முருகரும் அமைக்கப்பட்டுள்ளது. அங்காளபரமேஸ்வரி அம்மனுக்கு மாசி மாதத்தில் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. மாசி மாதத்தில் அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கு அமாவாசையில் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. அன்று இரவு சுடலையில் பொம்மையை செய்து வைப்பார்கள். காலையில் பிரம்மாண்ட சிலையை செய்து

பூசை செய்து மதியம் உழவர் வீட்டிலிருந்து ஒரு கொப்பரை செய்து அங்கிருந்து கோயிலுக்கு எடுத்துச்சென்று வைப்பார்கள். மாலை. 2.00 மணிக்கு அம்மன் ஊர்வலம் வருதல் 6.00 வரை நடைபெறும். 7.00 மணிக்கு கொப்பரை கோயிலிருந்து புறப்பட்டு வந்து மீண்டும் சாமியிடம் வந்து தீப ஆராதனை செய்து கொண்டு மீண்டும் சுடலைக்கு போக வேண்டும். அங்குக் கொப்பரையை நிறுத்தி அங்குள்ள மாவு விளக்கை குழந்தை இல்லாத (மகப்பேறு) பெண்களுக்கு கொடுப்பார்கள். பிறகு சாமி மீண்டும் கொப்பரை உடன் வரும். வந்த பிறகு கோயிலில் அபிஷேகம் செய்துவைப்பார்கள். பொங்கல் வைத்து படைப்பார்கள், பிரார்த்தனை செய்வார்கள், பிறகு அந்த பொங்கலை எல்லோரும் உண்டு மகிழ்வார்கள்.

## *கமல விநாயகர் கோயில்*

இக்கோயில் பள்ளத்தெருவில் அமைந்துள்ளது. இக்கோயில் உள்ள விநாயகர் உயர்ந்த செவ்வக பீடத்தின் மீது வலதுகாலை கீழே தொங்கவிட்டுக் கொண்டு, இடது காலை மடித்து அமர்ந்த நிலையில் உள்ளது. இதனுடைய நான்குகரத்தில் மேல் இருகைகளில் வலதுகரத்தில் அங்குசமும், இடக்கையில் பாசம் கீழ் இரண்டு கரங்களில் வலது அபய முத்திரையும், இடது கையில் மோதக உருண்டையும் ஏந்தியுள்ளன. ஆனைமுகத்தானின் துதிக்கை மேல் வயிற்றை அடைந்து இடம்புரியாக வளைந்து காணப்படுகிறது. கரண்ட மகுடம் தலையை அலங்கரிக்க பெருத்த வயிற்றைச் சுற்றிலும் பட்டையான உதரக் கச்சையும், இடையில் ஆடையும் கைகளில் காப்பும், காலில் தண்டையும் அணிந்து விநாயகப் பெருமான் வனப்போடு வீற்றிருக்கிறார். அவர் பீடத்தின் முன்புறம் அவரது மூஷிக வாகனம் உள்ளது. கருவறைக்கு மேலே வெற்றிடமாகவும், வாயிற்படியின் மேலே விநாயகர் கோயிலும், அதன் வலது புறத்தில் 'லஷ்மி'' தாமரைபீடத்தில் வலதுகாலை கீழே தொங்கவிட்டுக் கொண்டு, இடது காலை மடித்து நான்கு கரத்தோடு அமர்ந்த கோலத்தில் அமைந்துள்ளது. மேல் இருகரங்களில் தாமரை மொட்டும், கீழ் இரண்டு கரங்களில் வலதுகரத்தில் அபயமும் இடது கரத்தில் வரத முத்திரையிலும் காட்சி அளிக்கிறது. இதன் இடதுபுறத்தில் தாமரைபீடத்தில் வலதுகாலை மடித்து, இடதுகாலை கீழே தொங்கவிட்ட நிலையில், அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் வீற்றிருக்கிறது. மேல் வலதுகரத்தில் அக்கமாலையும் இடகரத்தில் வீணையின் மறுமுனையும், கீழ் வலதுகரத்தில் வீனையின் ஒரு முனையும், இடது

கரத்தில் ஏட்டினையும் பெற்று விளங்குகிறது. மேலும் கோயிலின் நான்கு முனையிலும் நந்திகள் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. முன்னிருகால்களை மடித்து, பின்னிருகால்களை மடித்து, தலையை நிமிர்த்தி காணப்படுகிறது. இதன் கூரிய சிறிய கொம்புகளும், திமிலும். கழுத்தில் பட்டையான மணிகள் கோத்து காணப்படுகிறது. முதுகின் மேல் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய ஆடை வனப்பூட்டுகிறது. இந்தக் கோயிலில் விநாயகர் சதுர்த்தி திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது.

## *செல்வ விநாயகர் கோயில்*

இக்கோயில் நடுத்தெருவின் கிழக்கேயும், பஜார் வீதி நேர் எதிரிலும் அமைந்துள்ளது. இது மிகவும் பழமையான கோயில். இங்குள்ள விநாயகர் வலதுகாலை கீழே தொங்கவிட்டு, இடது காலை மடித்து அமர்ந்த நிலையில் உள்ளது. இதன் நான்கு கரங்களில் மேலிருகரங்களில் அங்குசமும், பாசமும், கீழிருகைகளில் அபயமும், மோதகமும் பெற்றுள்ளது. மூஷிக வாகனம் பீடத்தில் அமைந்துள்ளது.

## ***அலையடி விநாயகர் கோயில்***

இக்கோயில் சாணார் வீதியில் அமைந்துள்ளது. இது மழைவெள்ளத்தில் அலையிலிருந்துக்கொண்டு காட்சி அளிப்பவர் இதனால் இது அலையடி விநாயகர் என அழைக்கப்படுகிறது. இந்தக் கோயில் பழைய மண்டபத்தில் அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில் உள்ள எட்டு கல்தூண்கள் கோயிலை தாங்கிய நிலையில் உள்ளது. கோயிலில் கருவறையில் இருந்த விநாயகர் சிலை தற்போது யாதவர் தெருவில் உள்ள பெருமாள் கோயிலில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. கோயில் தற்போது பழுதடைந்து, சிதைந்துள்ளது. பெருமாள் கோயிலில் உள்ள விநாயகர் இடம்புரி விநாயகர். இதன் நான்கு கரங்களில் மேலிருகரங்களில் அங்குசமும், பாசமும், கீழிருகரங்களில் அபயமும், மோதகமும் பெற்றுள்ளது. இதன் பீடத்தில் மூஷிக வாகனமும் இருக்கிறது. முன்பு அலையடி விநாயகர் கோயிலில் களவு போய்விட்ட காரணத்தினால் தற்போது சிலை மட்டும் இக்கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் வேறு எந்த சிலைகளும், சிற்பங்களும் காணப்படவில்லை.

## *கெங்கை அம்மன் கோயில்*

இக்கோயில் அலையடி விநாயகர் கோயிலுக்கு தெற்கில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட கோயில். இக்கோயிலில் கருவறையில் அம்மன் சிம்ம வாகனத்தில் அமர்ந்த கோலத்தில் இடது காலை மடித்து வலதுகாலை கீழே தொங்க விட்ட நிலையில் உள்ளது. அம்மனின் நான்கு கரத்தில் மேலிருகரங்களில் சூலமும், கத்தியும், கீழிருகரங்களில் அபயமும், வரதமும், கொண்டு காட்சியளிக்கிறது. கருவறையின் முன்பு சிம்மம் தன்னுடைய முன்னிருகால்களை நீட்டி, பின்னிருகால்களை மடித்தும் அமர்ந்த கோலத்தில் உள்ளது. இதன் பின்புறம் பலிபீடம் அமைத்துள்ளது. இக்கோயில் ஊர் பொது மக்களின் சார்பாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## *ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயில்*

இக்கோயில் யாதவர் தெருவில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இக்கோயிலை கட்டியவர் இராகு செட்டியார் அவர்கள். இது கட்டி சுமார் '70-80' ஆண்டுகள் ஆகின்றன. இது ஊர் பொதுமக்களின் முயற்சியால் கட்டப்பட்டது. இக்கோயில் கல்வெட்டு செய்தி எதுவும் காணப்படவில்லை. கோயிலின் கருவறையில் திருமால் நின்ற கோலத்தில் பீடத்தின் மீது உள்ளது. இதனுடைய மேலிருகைகளில் சக்கரத்தையும், சங்கையும் பற்றி உள்ளன. கீழ் வலதுகரத்தில் அபயமுத்திரையும், இடதுகரத்தில் கதாயுதமும் கொண்டு காட்சி அளிக்கிறது. கிரீட மகுடம், மகர குண்டலம், பூணூல், மணிவடம், சரப்பளி, கேயூரம், கைவளை, பீதாம்பரம், தண்டை, பாதசரம் ஆகிய அணிகள் திருமாலை அலங்கரிக்கின்றன. திருமால் பக்கத்தில் அலமேலு உருவம் நின்ற கோலத்தில் உள்ளது. திருமாலின் முன்பு பீடத்தில் பக்த ஆஞ்சநேயர் இருகரங்களை கூப்பி வணங்கிய கோலத்தில் உள்ளது. இதற்கு பின்புறம் பலிபீடம் உள்ளது. உயரம் 1 அடியும், பீடத்திற்குமேல் உள்ள பக்த ஆஞ்சநேயரின் உருவம் உயரம் 2 அடியும் அகலம் 1¼ அடியும் கொண்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள நான்கு தூண்களிலும் சிற்பம் எதுவும் காணப்படவில்லை. இக்கோயிலில் வலதுபுறத்தில் 'திருமாலுக்குரிய' கருட வாகனம் தனியே மரச்சிற்பத்தில் 1 அடி பீடத்தின் மீது 3 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அருகில் ஆஞ்சநேயருக்கு தனியே சிற்பம் உள்ளது. பெருமாள் கோயிலின் கோபுரத்தின்

முகப்பில் கிருஷ்ணர், பாம்பின் மீது நின்ற கோலத்தில் தெற்கு நோக்கியவாறு, மேலே நாமம் போட்டுள்ளது. கோபுரத்தைத் தோள் கொடுத்து தாங்கிய நிலையில் கன்னியின் சிற்பம் உள்ளது. மேலே வலதுபுறத்தில் ஆஞ்சநேயரும், இடதுபுறத்தில் விநாயகரும் உள்ளது. நான்கு புறத்திலும் கருடன் கைக்கூப்பிய கோலத்தில் அமர்ந்துள்ளது. இக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி, கிருஷ்ண ஜெயந்தி, தீபாவளி போன்ற விழா நாட்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## *சாவான் கல் சிற்பம்*

ஒட்டக்கூத்தரிடம் செங்குந்த சமுதாயத்தை சார்ந்தவர்கள் கவிதை பாடும்படி வேண்டினர். அவர் மறுத்து விட்டார். பின்பு வற்புறுத்தினர் அதற்கு அவர் ஒரு நிபந்தனை விதித்தார். அந்த நிபந்தனை என்னவென்றால், மேடையின் மேல் ஏறி நின்று பாடுவது மேடை அமைக்கவேண்டுமானால் ஒவ்வொரு குடும்பத்தில் தாயிக்கு தலைமகன் ஆக இருப்பவர்களின் தலையை வெட்டி எடுத்துவர வேண்டும். அவ்வாறு 1000 குடும்பத்தில் உள்ளவர்களின் தலையை கொண்டு அடுக்கி அதன் மீது தான் பாட்டு பாடுவேன் என்றார். அதன்படியே குடும்பத்தில் உள்ள தலைமகனின் 1000 தலைகள் வெட்டி கொண்டு வந்து மேடை அமைத்தனர். அதன் பிறகு கூத்தர் மேடை மீது ஏறி பாட்டு (கவிதை) பாடினார். அவருடைய ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு தலையும். அதனுடைய பிரேதத்துடன் சேர்ந்து ஓட்டிக்கொண்டது. ஆனால் கடைசியில் அவருடைய பாடலுக்கு ஒரு தலைமட்டும் அவ்வாறு சென்று ஒட்டிக்கொள்ளவில்லை. தலைதனியே நின்றுவிட்டது. காரணம் இந்த தலை ஒரு தேவதாசியின் குடும்பத்தில் பிறந்த தலைமகனின் தலை என்றும் அது தக்கோலத்தை சேர்ந்தது என்றும் அதை விலைகொடுத்து வாங்கி வந்தனர் என்று தெரிவித்தார். 1000 தலையில் 999 பேர் தலைகள் ஒவ்வொரு பாட்டு முடியும் போது சேர்ந்துக்கொண்டது. கடைசி தலை மட்டும் 1000வது பாட்டு பாடிய பிறகும் ஒன்று சேரவில்லை. பொதுமக்கள் அவரை வேண்டிய பிறகு அவர் கூறியது. இது நம்முடைய செங்குந்தர் சமுதாயத்தை சேர்ந்தது அல்ல என்பது உண்மை. இது தேவதாசியிடம் பெற்ற தலை என்பதால் தக்கோலம் தனிநாடாக கிடப்பது என்று சாபம் இட்டார். இதற்கு அஞ்சி தக்கோல மக்கள் கூத்தரிடம் மீண்டும் சென்று முறையிட்டனர். ஐந்து ஊர் பாயகட்டு என்று 1. பேரம்பாக்கம், 2. பிச்சவாக்கம், 3. களம்பாக்கம், 4. நரசிங்கபுரம், 5. தக்கோலம்

என்று கூறி அவர்களிடம் உறவு வைத்துக்கொள்வினை செய்வீர்களாக என பதில் தெரிவித்தார். அந்த வகையில் இந்த ஊரில் இருந்து தலையை கொடுத்தவர்கள் இந்த மூன்று பேருடைய தலை தான் என்பது அதற்காக அவர்களுக்கு இங்கு கல்நட்டு வழிபாடு செய்கின்றனர். இங்கு ஒவ்வொரு வருடமும் தைமாதம் 8–ஆம் தேதி (மயிலேறு நாள்) அன்று இங்கு பூசணிக்காய், எலுமிச்சை, தேங்காய், பலி கொடுத்து பூசை செய்கின்றனர்.

நேர்காணல் : திருமாற்பேறு ஊரைச் சேர்ந்த திரு. டி.வி. ஜானகிராமன் முதலியார், வயது 61. இவருக்கு விளக்கம் கூறியவர் இவருடைய தகப்பனார் லேட் திரு. டி. எ. வடமலை முதலியார் வயது 90. (செவிவழி செய்தி)

## கல்வெட்டுச் செய்திகள்

இவ்வூரில் 1906 ஆம் ஆண்டில் இந்திய அரசு தொல்லியல் அளவீட்டுத்துறை 83 கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது. இவ்வாண்டு கல்வெட்டு அறிக்கையில் இக்கல்வெட்டுகளில் செய்திகள் ஆங்கிலத்தில் எண் 265 முதல் எண் 344 வரை வெளியிடப்பட்டுள்ளது. இதன் எண்களில் 'A' என்று கூடுதலாக எண்ணப்பட்டுள்ளன. இந்த ஆங்கிலக் குறிப்புகள் வி. இரங்காச்சாரியரின் INSCRIPTIONS OF TOPOGRAPHICAL OF MADRAS PRESIDENCY என்ற நூலில் வெளியிடப்பட்டுள்ளன. மீண்டும் T.V. மகாலிங்கம் அவர்களது TOPOGTRAPHICAL INSCRIPTIONS OF TAMILNADU AND KERALA என்ற நூலிலும் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் இவர் அந்தக் கல்வெட்டு ஆங்கிலக் குறிப்புகளை மன்னர்கள் வாரியாக வரிசைப்படுத்தி வெளியிட்டுள்ளார்.

இந்த 83 கல்வெட்டுகளில் 57 கல்வெட்டுக்கான வாசகங்கள் முறையே தென்னிந்திய கல்வெட்டு தொகுதி – III ல் 5 ம், தொகுதி XIII – இல் 9 ஆம் தொகுதி XIX ல் 6 – ம் தொகுதி XXII இல் 37-ம் ஆக 57 கல்வெட்டுகளின் வாசகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் 38 கல்வெட்டுகள் திருமாற்பேறில் உள்ள மணிகண்டேஸ்வரர் கோயிலில் படியெடுக்கப்பட்டவை. 45 கல்வெட்டுகள் இன்று கோனார் கோயில் என்று அழைக்கப்படுகின்ற, இந்திய தொல்லியல் அளவிட்டுத்துறை பாதுகாப்பில் உள்ள கோனார் கோயில் ஈஸ்வரன் கோயிலில் படியெடுக்கப்பட்ட போது, அக்கோயில் பெயர் ஏதும் இல்லாமல் இடிந்த நிலையில் காணப்பட்டது. எனவே சிதைந்த கோயிலில் படியெடுக்கப்பட்டவை என்று குறிக்கப்பட்டுள்ளன.

மணிகண்டேஸ்வரர் கோயிலின் கருவறை முதல் திருச்சுற்று, மதில் ஆகியவற்றின் அக்கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பிற்காலத் திருப்பணியின் போது கோயில் முற்றிலுமாக புதுப்பிக்கப்பட்டதால் ஒரு கல்வெட்டுகூட இன்று எஞ்சவில்லை. திருமால் கோயில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள். அக்கோயில் கருவறை மற்றும் அர்த்த மண்டபம் திருச்சுற்று

ஆகியவற்றில் வெட்டப்பட்டன. அவை இன்றும் பெரும் பகுதி எஞ்சியுள்ளன. படி எடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் அனைத்தும் சோழர் காலத்தை சேர்ந்தவை. மதுரை கொண்ட பரகேசரி, மதுரையும், ஈழமும் கொண்ட பரகேசரி, பரகேசரி வர்மன் என்று அழைக்கபடும் முதலாம் பரந்தக சோழனின் 907 – 955 ஆட்சிகால கல்வெட்டுகள், 13 ஆகும். பார்த்திவேந்திரவர்மன் என்று குறிக்கப்படும், ஆதித்த கரிகால சோழனின் கல்வெட்டுகள் 3 ஆகும். மதுரைகொண்ட இராஜகேசரி ஆகிய சுந்தர சோழனின் கல்வெட்டுகள் இரண்டு ஆகும். பரகேசரி உத்தமசோழன் கல்வெட்டுகள் 4 ஆகும். மன்னர் அறியப் படாத கல்வெட்டுகள் 3 ஆகும். மன்னர் பெயர் அறியப்படாத இராஜகேசரிவர்மன் கல்வெட்டுகள் 3 ஆகும். இராஜகேசரிவர்மன் கல்வெட்டு 3 ஆகும். இராஜகேசரிவர்மன் என்ற இராஜஇராஜனின் கல்வெட்டுகள் 23 ஆகும். இவற்றில் சில மும்முடிசோழன் என்றும், காந்தளூர் சாலைக்களம் அறுத்தருளி என்றும், இராஜராஜ ராஜகேசரிவர்மன் என்றும் காணப்படுகின்றன. பரகேசரி வர்மரான, இராஜகேசரிவர்மனின் கல்வெட்டு 9 ஆகும். இராஜாதிராஜன் கல்வெட்டு 2, முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டுகள் 5, விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்று, இரண்டாம் இராஜராஜன் கல்வெட்டுகள் 5, வீர இராஜேந்திரன் எனப்படும் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு 3, மன்னர் பெயர் அறியப்படாத சோழர் கால கல்வெட்டு ஒன்று, இக்கல்வெட்டுகளை தொகுத்து பார்க்கும் போது சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் மிகுதியும் இவ்வூரில் உள்ளன. இக்கல்வெட்டுகள் பெரும்பாலும் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டவை. ஒரு சில கல்வெட்டுகள், சமஸ்கிருத மொழியில், கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டும் காணப்படுகின்றன.

இவ்வாய்வின் போது மணிகண்டேஸ்வரர் கோயில் கோபுரத்தில் விஜயநகர காலத்திய கல்வெட்டு ஒன்று புதியதாக படிக்கப்பட்டது. கோபுரத்திற்கு அருகில் அமைந்துள்ள படிக்கட்டில் ஒரு துண்டு கல்வெட்டும், கோபுரத்திற்கு வெளியே கிடைக்கும் முப்பட்டை குமுதக்கல்லில் ஒரு கல்வெட்டும் படித்து எழுதப்பட்டன. மேற்சொன்னபடி சோழர்கால கல்வெட்டுகளைத்தவிர கூடுதலாக கிடைக்கும் ஒரு விஜய நகர கல்வெட்டு கோபுரத்தில் கிடைத்த கல்வெட்டாகும்.

# நாடும் ஊரும்

திருமாற்பேறு கல்வெட்டுகளில் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து தாமல் கோட்டத்து வல்ல நாட்டு திருமாற்பேறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. திருமால் கோயில் உள்ள ஊர் பண்டு கோவிந்தபாடி என்று அழைக்கப்பட்டது. இதுவும் தாமற் கோட்டத்து வல்ல நாட்டு ஸ்ரீ கோவிந்தபாடி என்று திருமாற்பேறு நாட்டுக் குறிப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்பது இராஜராஜசோழன் காலத்தில் தொண்டை மண்டலத்துக்கு வைக்கப்பட்ட பெயராகும். எனவே இராஜராஜன் சோழன் காலத்திற்கு முற்பட்ட இந்த ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பிரிவு சொல்லப்படவில்லை. தாமற் கோட்டத்து வல்ல நாட்டு திருமாற்பேறு என்று மட்டும் சொல்லப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு ஸ்தலமாக இது விளங்கியதால் தொண்டை மண்டலம், சோழ மண்டலம், மலை மண்டலம் என்று பல பகுதிகளிலிருந்தும், பக்தர்களும், அரசு அதிகாரிகளும், பிறரும் இக்கோயிலுக்கு வந்து கொடைகள் கொடுத்துள்ளனர். எனவே இன்னும் பல ஊர்களும், நாட்டுப்பிரிவுகளும், திருமாற் கல்வெட்டுகளால் அறிய கிடைக்கின்றன. கல்வெட்டுகளில் குறிக்கப்படும் தாமற் கோட்டம் எனப்படும் தாமல், திருமாற்பேறு ஊரில் இருந்து சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் இன்றும் உள்ளது. இந்த தாமல் நாட்டை சேர்ந்த ஊர்களாக கீழ்கண்ட ஊர்கள் திருமாற்பேறு கல்வெட்டுகளில் காணக்கிடைக்கிறது.

## *தாமற் கோட்டம்*

1. தாமற்கோட்டத்து தாமற்நாட்டுப் பட்டாளம் ஆகிய சதுர்வேதி மங்கலம் - 266/22
2. தாமற்கோட்டத்து தாமற் நாட்டு பந்தியான உலோகமாதேவிபுரம் - 271/22

3. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து தாமற் கோட்டத்து, தாமற்நாட்டு நித்த வினோத நல்லூர் - 287/22

4. தாமற் கோட்டத்து வல்ல நாட்டு செருகூர்.

5. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து தாமற் கோட்டத்து வல்ல நாட்டு புல்வளை - 292/22.

6. தாமற் கோட்டத்து வல்ல நாட்டு திருகாமக்கோட்ட புரத்து நெல்வாயில் -269/22.

## மணவிற் கோட்டம்

ஜெயங்கொண்ட சோழ மண்டலம் மனைவிற் கோட்டம் இதனில் குறிக்கப்படும் ஊர்கள் :

1. மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு சிற்றியாற்றூர் – 271/22

2. மணவிற் கோட்டத்து பளுவூர் நாட்டு திருவாலங்காட்டு கூற்றத்து பிரிதிவிமாதேவி சதுர்வேதி மங்கலம் - 282/22

3. மணவிற் கோட்டத்து பழுவூர் நாட்டு பழுவன் 282/22

4. மணவிற் கோட்டத்து தன்கூற்று தக்கோலத்து திருப்பாலூர் - 284/22

5. மணவிற் கோட்டத்து மணவிற்நாட்டு, சீற்றியாற்றூர் சங்கம் பாடி - 286/22

6. மணவிற் கோட்டத்து மணவில்நாட்டு 288/22

## பிற கோட்டங்கள்

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் குறிக்கப்படும் பிற நாடுகளும் ஊர்களும் பின்வருமாறு :

1. காளியூர் கோட்டத்து காயிரம் பேடு நாட்டு சமங்கணி–270/22

2. நடுவில்மனை பெருவில்மனை திருநெடும்பிறை 273/22

3. மேன்மேலை மேலூர் கூற்றத்து நித்த வினோத நல்லூர் - 290/22

4. வெண்குன்ற கூற்றத்து மருத நாட்டு மறுகாடு 291A/22

5. பெரும்பாணபாடி நெடிநாட்டு மலைத் தாங்கி - 296/22

6. ஊற்றுக் காட்டுக் கோட்டத்து வேலநாட்டு பெங்க வேற்கமான சோழ குல திலக சதுர் வேதிமங்கலம் 299/22

## சோழ நாட்டில் குறிக்கப்படும் ஊர்கள்

1. இராஜ நாராயண வளநாட்டு திருவலுந்தூர் நாட்டு எலுமூர் 274/22
2. சோழ மண்டலத்து விருத ராஜ வளநாட்டு மலைநாட்டு நாகம் பாடி - 287/22

இவைத் தவிர பிற ஊர்களும் நாடுகளும்.

செம்பூர் கோட்டத்து வடகரை - 269/22

சிறுரூர் நாட்டு பனைப்பாக்கம் - 276/22

வடகரை மதுராந்த வளநாட்டு விரைக்கூற்றத்து பட்டிக்குடி 290/22

கோநாட்டு கொடும்பாளூர் 306/1906

இருங்கோளப்பாடி நாட்டு பிடவூர் நாட்டு குளக்குடி 312/1906

## கல்வெட்டில் இறைவன் பெயர்கள்

திருமால்புரம் கல்வெட்டுகளில் இவ்வூர் சிவன் கோயில் இறைவன் திருமாற்பேற்று மகாதேவன், திருமாற் பேறுடையார், ஆளுடையார் திருமாற்பேறுடையார், திருமாற்பேற்று ஆழ்வார், உடையார் திருமாற்பேறுஉடையார், என்று பலவாறாக குறிப்பிடப்பட்டு இருந்தாலும், முன் ஒட்டுப் பின்ஒட்டு சொற்களை மட்டுமே மாறுபட்டு வருகின்றன. மேலும் திருமாற்பேறு உடையார் கோயிலினுள் சேதிராயர் என்பவர் எழுந்தருளிவித்த உத்தம சோளீஸ்வரர் கோயில் ஒன்று இருந்திருக்கிறது. முதலாம் இராஜராஜன் காலத்திலிருந்து மேலும் ஒரு கோயில் அவிமுக்தீஸ்வரமுடையார் பெயரில் இங்கு இருந்து வந்துள்ளது. விக்கிரம சோழன் கல்வெட்டு ஒன்று திருவேகம்புடையார் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட கொடை ஒன்றினை குறிப்பிடுகிறது. வேகம்புடையார் கோயில் திருமாற்பேற்றில் தான் இருந்ததாக என்பதை அறிய இயலாது. கல்வெட்டு வாசகம் சிதைந்துள்ளது. இராஜராஜன் காலத்து கல்வெட்டு ஒன்று காமக் கோட்டம் (283/22) பொதுவாக காமக் கோட்டம் என்பது அம்மனுக்கு என்று எடுக்கப்பட்ட கோயிலைக் குறிப்பதாகும். எனவே திருமாற்பேற்றின் மறுபெயிற்று பேற்று போய் அம்மன் கோயில் ஒன்று இருந்திருக்க வேண்டும். ஆனால் இன்றுள்ள

அம்மன் கோயில் இராஜராஜன் காலத்தியது அல்ல. இதே போலே மேற்சொன்ன உத்தம சோளீஸ்வரர் உடையார் கோயில், அவிமுக்தீஸ்வரர் கோயில் ஆகியவை எங்குள்ளன என்பது தெரியவில்லை.

## *கல்வெட்டில் காணப்படும் மன்னர்கள்*

1. பராந்தகன் சோழன்
2. பார்த்திவேந்திரவர்மன் ஆதித்தன்
3. சுந்தரசோழன்
4. உத்தமசோழன்
5. இராஜ இராஜசோழன்
6. முதலாம் இராஜேந்திரன்
7. இராஜாதிராஜன்
8. முதலாம் குலோத்துங்கசோழன்
9. விக்கிரமசோழன்
10. இரண்டாம் இராஜராஜன்
11. வீரஇராஜேந்திரன்

# சோழர் கால அரசியல் வரலாறு

## *முதற்பராந்தக சோழன் கி.பி. 907-953*

ஆதித்த சோழன் கி.பி. 907-ல் இறந்தவுடன் அவன் புதல்வனாகிய முதற்பராந்தக சோழன் சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றான். இவன் பெரிய வீரனாகவும் இருந்து நாற்பத்தாறு ஆண்டுகள் ஆட்சியில் இருந்துள்ளான். இவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இவனை "மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்றும், இவனது ஆட்சியின் 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இவனை மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன் என்றும் கூறுகின்றன. இவனது ஆட்சியின் போது நடைபெற்ற கொடை, நிலம் விற்பனை போன்ற செய்திகள் கொண்ட திருமாற்பேறு கல்வெட்டுகள் 12 ஆகும். இவனது நீடிய ஆட்சியில் எத்துணையோ பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருத்தல் வேண்டும். எனினும் இவன் காலத்துக் கல்வெட்டுக்களின் துணை கொண்டு அறியக்கிடப்பன மிகச் சிலவேயாகும்.

பராந்தகனுக்கு நான்கு புதல்வர்கள் அவர்கள் : 1. இராசாதித்தன், 2. கண்டராதித்தன், 3. அரிஞ்சயன், 4. உத்தம சீலி என்பவர்கள், இருமகளிர்கள், 1. வீரமாதேவி, 2. அனுபமா என்ற புதல்வியர் இருவரும் ஆகும்.

## *ஆதித்த கரிகால சோழன் - (பார்த்திவேந்திரவர்மன்)*

இவன் சுந்தர சோழனின் புதல்வனாவன். இவன் இளைஞனாயிருந்த போதிலும் பெரும் வீரத்தோடு போர் புரிந்து வீரபாண்டியனைக் கொன்று வெற்றிமாலை சூடினான். அதுபற்றியே அவ்வரசிளங்குமரன் "வீரபாண்டியனைத் தலைகொண்ட கோப்பரகேசரி வர்மன் என்ற சிறப்புப் பெயர் பெற்றுள்ளான். சுந்தர சோழனது ஆட்சியில் சிறந்து விளங்கிய ஆதித்த கரிகாலன், அவரது இறுதிகாலத்தில் தன் முதல் மகனும் பெருவீரனுமாகிய கரிகாலனை கி.பி. 969 ஆம் ஆண்டில் சோழநாட்டில் சில வஞ்சகர்களால் கொல்லப்பட்டான். சிதம்பரம் தாலுகாவை சேர்ந்த காட்டுமன்னார்

கோயிலுக்கணித்தாகவுள்ள உடையார்குடியில் காணப்படும் கல்வெட்டொன்று அவ்வரச குமாரனை கொன்றவர்கள் சோமன், ரவிதாசனான பஞ்சவன், பிரமாதிராஜன், பரமேசுவரனான இரு முடிச்சோழன் பிரமாதிராஜன், மலையனூரானான ரேவதாசக் கிரமவித்தன் என்போர். அக்கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது. உத்தம சோழன் ஆட்சியில் ஆதித்த கரிகாலனைக் கொன்றவர்கட்குத் தண்டனை விதிக்கப்படாமல் இராசராசன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலே விதிக்கப்பட்டிருந்ததால் அக்கொலை நிகழ்ச்சியில் உத்தம சோழனுக்கும் தொடர்பு இருந்திருத்தல் சந்தேகத்திற்குரியது. அதனையாராய்ந்து முடிவு காண்பதும் ஈண்டு இன்றியமையாததேயாம். இவருடைய ஆட்சிக்கால கல்வெட்டு மூன்று கிடைத்துள்ளன.

## *சுந்தரசோழன் கி.பி.957 - 970*

அரிஞ்சயன் இறந்த பின்னர் அவர் மகன் இரண்டாம் பராந்தகசோழன் கி.பி. 957 - ல் சோழ சக்கரவர்த்தியாக முடி சூட்டப் பெற்றான். இவன் மதுரை கொண்ட கோ இராசகேசரிவர்மன் எனவும், பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீ சுந்தரசோழ தேவர் எனவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கொடும்பாளூரில் காணப்படும் கல்வெட்டொன்றில் இவன் மதுராந்தகன் சுந்தரசோழன் என்றும் குறிக்கப் பெற்றுள்ளான். இவன் பல வெற்றிகளைக் கொண்டவன், பல கோயில்களை எடுப்பித்தவன். உலகபுரம் என்ற ஊரில் சுந்தர சோழப்பெரும் பள்ளி என்னும் புத்தகோயில் ஒன்றும் பிரமதேசம் என்ற (வ.ஆ) ஊரில் சுந்தரசோழப் பேரேரி, திருமெய்யனின் சுந்தர சோழபுரம் என்னும் நகரம் ஒன்றும் இருந்தது என்பதை கல்வெட்டுக்களால் அறியலாம். இவன் கி.பி. 969-ல் தன் முதல் மகனாகிய ஆதித்த கரிகாலனை இழந்தமையால் ஆற்றொனாத் துன்பத்தில் ஆழ்ந்து அவ்வாண்டிலேயே காஞ்சிமா நகரிலிருந்த பொன்மாளிகையில் உயிர் துறந்தான். அது பற்றியே இவ்வேந்தன் பொன்மாளிகைத் துஞ்சின தேவர் என்று சில கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளான். இவருடைய கல்வெட்டுகள் இரண்டு சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

## *உத்தம சோழன் கி.பி.970- 985*

இவன் முதல் கண்டராதித்த சோழனுடைய புதல்வன். உத்தமசோழன் ஆட்சிக்காலத்துக் கல்வெட்டுக்கள் செங்கற்பட்டு,

காஞ்சிபுரம், திருமால்புரம், திருமுனைப்பாடி ஆகிய இடங்களில் காணகிடக்கின்றன. இவன் தாய் செம்பியன் மாதேவியும், இவன் தேவிமார்களும், அரசியல் அதிகாரிகளும் புரிந்த அறச்செயல்களையெல்லாம் கூறுவனவாயுள்ளன. அவற்றால் அக்காலத்து ஆட்சிமுறை, மக்கள் நிலை, வழக்கவொழுக்கங்கள், பொருளாதார நிலை முதலானவற்றை நன்கறியலாம். இவருடைய ஆட்சியாண்டு கல்வெட்டுகள் நான்கு அதில் திருமாற்பேறு சிவாலயத்திற்குரிய நிலங்களுக்குப் புரவு வரியாக ஆயிரம் கலம் நெல் ஆண்டுதோறும் அளந்து வந்த புதுப்பாக்கத்து சபையார் இரவு வரியாக 187 கலம் நெல்லும் இருப்பத்தாறு கழஞ்சு அரைமஞ்சாடிப்பொன்னும் கொடுத்து வந்தார்கள் என்று உத்தம சோழனின் பதினான்காம் ஆட்சியாண்டில் வரையப் பெற்ற கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இவன் தன் அரசியல் அதிகாரிகளுள் ஒருவனாகிய அம்பலவன் பழுவூர் நக்கனுக்கு விக்கிரம சோழமாராயன் என்னும் பட்டம் அளித்திருந்ததால் இவ்வேந்தனுக்கு விக்கிரம சோழன் என்ற மற்றொரு பெயரும் இருத்திருத்தல் வேண்டும். இவனை மதுராந்தகன் என்றும் அக்காலத்தில் வழங்கியுள்ளார்கள். இவன் கி.பி. 985-ல் இறந்தான்.

## *முதல் இராசராச சோழன் கி.பி.985 - 1014*

இரண்டாம் பராந்தக சோழனான சுந்தரசோழனின் புதல்வன் ஆவன். இவன் எடுப்பித்த தஞ்சை இராசராசேச்சுரத்திலும் இவன் பட்டத்தரசி திருவையாற்றில் கட்டு வித்த உலோகமாதேவீச்சுரம். இவனுடைய கட்டிடக்கலைக்கும் வெற்றிக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இவனுடைய பக்திக்கு அடையாளமாக பல கற்றளி கோயிலாக மாற்றி அமைத்தான். இவனுடைய பெற்றோர்கள் இவனுக்கு இட்டுவழங்கிய பெயர் அருண்மொழிவர்மன் என்பது. இவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டுமுதல் இவனுக்கு இராசராசன் என்னும் பெயரே வழங்கி வந்தது என்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. இவனுடைய ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் 23 கல்வெட்டுக்களில் இவனது சிறப்பு வெற்றி, கொடை, மற்றும் கட்டிடக்கலையின் சிறப்பு அறிய மெய்க்கீர்த்திகள் கொண்ட கல்வெட்டும் காணப்படுகிறது. இதனை கொண்டு இராசராசனின் பெருமையையும் அறியலாம். இவருடைய கல்வெட்டு திருவல்லம், திருவையேச்சுரம் என்னும் கோயிலை எடுப்பித்தான் என்று கூறுகின்றது. மேலும் (வ.ஆ) பஞ்ச பாண்டவர் மலையில் காணப்படும் கல்வெட்டு வீரசோழன்

இலாடப்பேரரையன் என்ற குறுநில மன்னனாயிருந்து கொண்டு ஆட்சி புரிந்து வந்தான் என்று உணர்த்துகிறது. இவன் தன்னுடைய ஆட்சியின் நினைவாக ஏற்படுத்திய தஞ்சை பெரிய கோயில் இன்றும் வியந்து பார்க்கக் கூடிய திறமையோடு கட்டிவித்தான் என்பது பெருமைக்கும், பாராட்டிற்கும் உரியது.

## *முதல் இராஜேந்திர சோழன் கி.பி.1012 - 1044*

இவன் கங்கையும் - கடாரமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் என்று கல்வெட்டுக்கள் புகழ்ந்து கூறுகின்றன. இவன் தந்தை இவனுக்கு மதுராந்தகன் என்று பெயரிட்டிருந்தான் என்பது கல்வெட்டுக்களால் அறியலாம். இவருடைய கல்வெட்டுகள் ஏழு இங்கு கிடைக்கிறது. தன் ஆட்சியின் ஏழாம் ஆண்டாகிய கி.பி – 1018-ல் தன் முதற் புதல்வன் இராசாதிராசனுக்கு இளவரசுப் பட்டஞ்சூட்டினான். இவன் தந்தையை காட்டிலும் சிறப்பான வெற்றி காண்டான் இவனது மெய்க்கீர்த்தி "திருமன்னிவளர" என்பதிலிருந்து இவனுடைய வெற்றிச்சிறப்பு, கடல் கடந்து சென்ற கடல்போரின் சிறப்பு, கட்டிட சிறப்பு, மற்றும் கொடை சிறப்பு பற்றியும் அறியலாம். தன்வெற்றியின் நினைவாக கங்கையை வெற்றிக்கொண்டு அங்கிருந்து தண்ணீர் கொண்டு வந்து புதிய ஏரி ஒன்றை வெட்டி அதில் கங்கை நீரை விட்டு அதற்கு சோழகங்கம் என்று பெயரிட்டான். அதன் அருகில் தலைநகரை உருவாக்கி "கங்கை கொண்ட சோழபுரம்" என்று அதற்கு பெயரிட்டார். இவன் தன் தந்தையை போன்று எல்லாத்துறையிலும் சிறந்து விளங்கினான் என்பதற்காகவே 'சிவன்' கோயிலையும் எழுப்பித்தான். இவன்தன் இராச்சியத்தை சுற்றிப்பார்ப்பதற்குச் சென்றிருந்த போது தொண்டை மண்டலத்தில் உள்ள பிரமதேசம் எனும் ஊரில் இறந்தான்.

## *முதல் இராசாதிராச சோழன் கி.பி.1018 - 1054*

இவன் முதல் இராசேந்திர சோழனுடைய மூத்த புதல்வன். இவன் ஆட்சிகாலத்தில் கோயிலுக்கு பல நிலங்களை கொடையாக வழங்கியுள்ளான் என்று கல்வெட்டுக்களினால் அறியலாம். திருமால்புரத்தில் இவருடைய ஆட்சிகாலத்து கல்வெட்டுகள் மட்டும் இரண்டு உள்ளன. கல்வெட்டுக்களில் இவனுக்கு மூன்று வகையான மெய்க்கீர்த்திகள் காணப்படுகின்றன. 1. திங்களேர் பெறவளர், 2. திங்களேர் தரு என்றும் திருக்கொடியொடு தியாகக்கொடி என்றும்

உள்ளன. இவனும் தன்னுடைய தந்தையான இராசேந்திரன் மற்றும் நாட்டனாரான இராஜராஜனை போன்று பல போரில் வெற்றி கண்டு ஆட்சியை சிறப்பாக ஆட்சி நடத்தினான் என்றும் இறுதியில் போர்களத்தில் யானை மீதிருந்து உயிர் துறந்தமைப் பற்றிக் கல்யாணபுரமுங் கொல்லாபுரமும் எறிந்து யானை மேற்றுஞ்சின உடையார் விஜயராசேந்திர தேவர் என்று சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருத்தல் அறியலாம். இவனது வாழ்க்கையே வீரம் நிரம்பிய ஒரு தனி வாழ்க்கை எனலாம்.

## *முதலாம் குலோத்துங்க சோழன் கி.பி. 1070 - 1120*

இவன் கீழைச் சாளுக்கிய மன்னனாகிய இராசராச நரேந்திரன் புதல்வன். இவன் தாய் கங்கை கொண்ட சோழன் புதல்வியாகிய அம்மங்கை தேவியர்ராவார். இவன் பூசநாளில் பிறந்தவன் என்பது குண்டூர் ஜில்லா பாபட்லாவிலுள்ள திருமால் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களினால் உணரலாம். இவனது ஆட்சிகாலம் 50 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்தமையால் இவனுடைய கல்வெட்டுக்கள் அதிகம் கிடைக்கின்றன. திருமால்புரத்தில் இவருடைய ஆட்சியின் கல்வெட்டுகள் ஐந்து உள்ளன. மேலும் தொண்டை மண்டலம், மைசூர் ஆகிய பகுதிகளிலும் இவனுடைய கல்வெட்டுகள் நிறைய கிடைக்கின்றன. இவனது மெய்க்கீர்த்திகளில் ஸ்வதி.... தொடங்கி இறுதியில் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு என்று பெரும்பாலான கல்வெட்டுக்களில் காணலாம். இவனுடைய வெற்றி மற்றும் வெளிநாட்டுத் தொடபுர்களைப்பற்றியும் அவனது மெய்க்கீர்த்திகள் தெரிவிக்கின்றன. இவன் ஆட்சிகாலத்தில் சுங்கத் தவிர்த்தமையை கண்டு மக்கள் எல்லோரும் வாழ்த்தி "சுங்கந் தவிர்த் திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## *விக்கிரம சோழன் கி.பி. 1118 - 1136*

இவன் முதலாம் குலோத்துங்க சோழனின் புதல்வன் ஆவார். இளமையிலேயே நாட்டில் அரசப் பிரதிநிதியாயிருந்து அதனை ஆட்சி புரிந்தவன். 1118-ல் சோழ நாட்டில் இளவரசுப் பட்டம் பெற்றுத் தன்தந்தைக்கு உதவி புரிந்தவன். இவரது மெய்க்கீர்த்திகள் இரண்டு

பெரியது 'பூமாலை மிடைந்து பொன் மாலை திகழ்' என்றும் 'பூமாது புணரப் புவிமாது வளர' என்றும் சிறியது மெய்க்கீர்த்திகள் உண்டு இதில் இவருடைய புகழ், வெற்றியையும் குறிப்பிடுகிறது. இவருடைய அவைக்களப்புலவராக ஒட்டக்கூத்தர் இருந்தது பெருமைக்குரியது. இவருடைய ஆட்சிக்காலக் கல்வெட்டு ஒன்று மட்டும் உள்ளது.

## *இரண்டாம் இராஜராஜன் கி.பி.1146 - 1163*

இரண்டாம் குலோத்துங்கசோழன் கி.பி. 1150 ல் இறந்த பிறகு அவன் புதல்வனாகிய இரண்டாம் இராசராசசோழன் ஆட்சியில் அமர்ந்தார். இவன் பரகேசரி பட்டம் புனைந்துக் கொண்டான். இவனது வெற்றிச்சிறப்பும், ஆட்சிசிறப்பும் மெய்க்கீர்த்தியில் காணப்படுகிறது. இவனுடைய கல்வெட்டுகள் தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் 18, 19 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. மேலும் இவன் இறந்த ஆண்டு 1163 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இறந்திருக்க வேண்டும் என அறியலாம். இவருடைய கல்வெட்டுகள் ஐந்து உள்ளன.

## *வீர இராசேந்திரா சோழன் கி.பி.1063 - 1070*

இவன் கங்கை கொண்ட சோழனுடைய புதல்வர்களுள் ஒருவன். இவனைப்பற்றிய மெய்க்கீர்த்திகள் இரண்டு இவன் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. அவற்றுள் "திருவளர்த்திரன்புயத்து" எனவும், வீரமே துணையாகவும் தியாகமே அணியாகவும் என்று தொடங்குகிறது. இவ்விரண்டு மெய்க்கீர்த்திகளில் இவனுடைய வெற்றி, ஆட்சி முறை மற்றும் போர்கள் பற்றியும் அறிய முடிகிறது. அதில் இவனுடைய ஐந்தாம் ஆட்சிக்கால கல்வெட்டில் ஈழநாட்டு மன்னன் விசயபாகுவுடன் புரிந்தபோர். இவனுடைய ஏழாம் ஆட்சிக்கால கல்வெட்டு தன் கழலடைந்த "மன்னர்க்குக் கடாரம் எறிந்து கொடுத்தருளி" னான் என்று கூறுகிறது. இவருடைய ஆட்சிக்காலத்திய மூன்று கல்வெட்டுக்கள் இவ்வூரில் காணலாம். இவனுக்கு மதுராந்தகன், கங்கை கொண்ட சோழ என்னும் இரண்டு புதல்வர் இருந்தனர் என்பது இவன் கல்வெட்டுக்களால் புலப்படுகிறது. அவர்களுள் மதுராந்தகனுக்குச் சோழேந்திரன் என்ற பட்டம் வழங்கி அவன் தொண்டை மண்டலத்தில் அரசப் பிரதிநியாய் இருந்து ஆட்சி புரிந்து வருமாறு இவன் முடி சூட்டினான். மற்றொரு புதல்வனாகிய கங்கை கொண்டசோழனுக்குச் சோழ பாண்டியன் என்னும் பட்டம் வழங்கி அவனைப் பாண்டிய மண்டலத்தில் அரசப் பிரதிநிதியாயிருந்து அரசாண்டு வருமாறு முடிசூட்டினான் இவனே பிற்காலத்தில் சோழ பாண்டியன் என அழைக்கப்படலானான்.

# வேந்தரும் வேளாண்களும்

திருமாற்பேறு கல்வெட்டில் மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன் விளக்குக்காக 15 கழஞ்சு பொன்னும், சோதி விளக்கும் இறைவனுக்கு பால்அபிஷேகம் செய்வதற்காக பசுக்களும், சங்கிராந்தி காலங்களில் 108 கலசமாக நெய்யும், பாலும் கொடையாக கொடுத்து ஏற்பாடுகள் செய்ததை திருமாற்பேறு கல்வெட்டுகள் (268, 280, 285, 292 /1906) குறிப்பிடுகின்றன. இவன் பொதுவாக முதலாம் இராஜராஜன் கால கல்வெட்டுகளில் காண்கின்றான். இவனைப்பற்றி குறிப்பிடும் திரு.K.A. நீலகண்ட சாஸ்திரியார், இவன் ராஜராஜன் காலத்தில் விளங்கிய ஒரு சிறந்த அதிகாரி என்றும் மதுராந்தகன் எனப்படும் உத்தமசோழனின் மகன் ஆகலாம் என்றும் குறிப்பிடுகின்றார். ஏனெனில் மதுராந்தகன் என்ற உத்தம சோழனின் தந்தையின் பெயர் கண்டராதித்தன் என்பதாகும். இவன் தந்தை பெயரான மதுராந்தகன் என்பதும் பாட்டன் பெயராக கண்டராதித்தன் என்ற பெயரையும் ஒரு சேர வைத்து மதுராந்தகன் கண்டராதித்தன் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்று சொல்லலாம். கொடும்பாளூரைச் சேர்ந்த இருக்குவேளிர் சோழர்களுக்கு சிறந்த படைத்தளபதிகளாகவும், மணத்தொடர்பு கொண்ட வேளிர்களாகவும் விளங்கி இருக்கிறார்கள். இவர்கள் ஆண்ட பகுதி "கோ நாடு" எனப்படும். திருமாற்பேறு கல்வெட்டு ஒன்றில் 'கோ' நாட்டுக் கொடும்பாளூர் வீர சோழ இளங்கோ வேளாண் மகன் ஆதிச்சபிடாரன் என்பவன் கோவிந்தபாடியில் இருந்த மடம் ஒன்றுக்கு கொடைகள் கொடுத்திருக்கின்றான். (306/1906) இப்படி புதுக்கோட்டை பகுதியிலிருந்து காஞ்சிபுரம் பகுதி வரை சோழர் கால சிற்றரசர்கள் எளிதாக கோயிலுக்கு சென்று வணங்கவும், உரிமைகளும் பெற்றுசிறப்புடன் இருந்தார்கள் என்பது புலப்படுகிறது.

மற்றொரு கல்வெட்டில் (294/1906) மும்முடி சோழ தேவியார் பஞ்சவன்மாதேவியார் என்பவர் நந்தா விளக்குகளைக் கொடை கொடுத்த செய்திகள் அறிய கிடைக்கின்றன. மும்முடிச்சோழன் என்பவன் முதல் இராஜராஜன் ஆகும். எனவே அவனது அரசி இக்கல்வெட்டில் குறிக்கப்படும் பஞ்சவன்மாதேவி எனலாம்.

வீரபாண்டியன் தலைக் கொண்ட பார்த்திவேந்திராதிபதி கல்வெட்டில் நந்திவர்மன் காடுபட்டிகள் உடைய மகள் அல்லது மனைவி விஜ்ஜவை மகாதேவி குறிக்கப்படுகிறார். இவள் பல்லவ அரசி அல்லது மனைவி (அ) மகள் என்ற உறவை குறிக்கும் கல்வெட்டு சிதைந்துள்ளது.

மற்றொரு கல்வெட்டில் அரிகுல கேசரியின் பெருந்தன அதிகாரி பல்லவரையன் 10 காசுகள் கொடுத்து இறையிலி நிலம் வழங்கிய செய்திகள் காணப்படுகிறது. முதலாம் பராந்தகன் சோழனின் மக்களில் ஒருவன் அரிகுல கேசரி என்ற பெயரில் உடையவன். எனவே இந்த அதிகாரி பராந்தகன் மகன் அரிகுலகேசரி பொருள் தரும் அதிகாரி எனலாம்.

பராந்தகன் காலத்து மற்றொரு கல்வெட்டு (301/1906) உத்தமசீலி என்பவரை குறிப்பிடுகிறது. முதலாம் பராந்தகனின் மற்றொரு மகன் உத்தமசீலியாகும். எனவே பராந்தக சோழன் காலத்தில் அவனது குடும்பத்தினர்கள், மற்றும் அதிகாரிகள் திருமாற்பேற்றுடன் நேரிடையான தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை அறிகிறோம்.

முதலாம் இராஜேந்திரன் காலத்தில் (297/1906) சிறுதனத்து பெரிந்தண்ட நாயகன் ஒருவன் கொடை கொடுத்த செய்தி காணப்படுகிறது. தண்ட நாயகன் என்பவன் படைத்(தளபதி) தலைவன். இவன் இக்கல்வெட்டில் சிறுதனத்தில் பெருதனம் என்பது இரண்டு வகையில் குறிப்பிடப்பட்டுள்ளது நோக்கத் தக்கது. பார்த்திவேந்திராபதி கல்வெட்டில் ஆனையால் ஒருவன் பிராமணர்கள் உண்பதற்காக கொடைகள் கொடுத்த செய்தி காணப்படுகிறது. பானை ஆள் என்பவன் மன்னனுடைய யானைப் பாகனாகவோ அல்லது யானைப்படையில் குறிப்பிடத்தக்கவனாகவோ இருக்கலாம்.

மற்றொரு கல்வெட்டில் (376/1906) அரசு முதலிகளில் ஒருவன் நந்தா விளக்கு கொடையாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. இராஜராஜன் காலத்திய கல்வெட்டு ஒன்றில் (283/1906) திருமயானத்து மடமுடைய திண்டிபிடார் என்பவரும், மூவேந்த வேளாண் என்ற பட்டம் உடைய அதிகாரிகள் சிலரும் இக்கோயிலில் உள்ள அக்னீஸ்வரமுடையார் கோயிலில் நிலங்களையும் அதன்

வருவாய்களையும் சீர்படுத்திய செய்திகள் காணப்படுகிறது. எனவே கோயில் வருமானங்களில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்ய அதிகாரிகளும், மடத்தலைவர்களும் இங்கு கூடியிருக்கிறார்கள் என்ற செய்தி நமக்கு கிடைக்கிறது.

# கொடைகள்

## *விளக்குக் கொடைகள்*

திருமாற்பேறு கல்வெட்டுக்களில் விளக்கு எரிப்பதற்காக கொடுக்கப்பட்ட கொடைகளைப் பற்றிய செய்திகள் நிறைய உள்ளன. பொதுவாக ஒரு குறிப்பைத்தவிர பிற குறிப்புகளில் விளக்கு மட்டும் கொடையாக கொடுத்த செய்திகள் இல்லை. விளக்குகளுக்கு ஆவின் நெய், எண்ணெய் போன்றவற்றிக்கு விளக்குகள் அதிகமாக நந்தா விளக்குகள் ஆகும். இரு கல்வெட்டுகளில் சோதி விளக்கு குறிக்கப்பட்டுள்ளது. ஒரு கல்வெட்டில் திருவிளக்கு என்று மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டில் ஈழவிளக்கு என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்குகளுக்கு கொடுக்கப்பட்ட ஆடு, பசு போன்றவைகள் திருஉண்ணாழிகை இடையர் திருநந்தா விளக்கு இடையர் எனப்படும் இடையர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பொன், நிலம் போன்றவை ஊர்களாலும், சபையினராலும் தனிநபர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. நந்தா விளக்குகளுக்கான ஆடுகள் கொடுக்கப்பட்டதை பார்க்கும் போது கோவிந்தபாடி திருமாலுக்கு ஒரு விளக்குக்கு ஒரு ஆடு, தனி நபரால் கொடுக்கப்பட்டுள்ளது. இராஜேந்திர சோழனின் அரசி கோவிந்தபாடி இறைவனுக்கு ஒரு நந்தா விளக்குக்காக 120 ஆடுகள் கொடுத்துள்ளார். மேலும் சில கல்வெட்டுகளில் 90 மற்றும் 96 ஆடுகள் நந்தா விளக்குக்காக கொடுக்கப்பட்டுள்ளன. நந்தா விளக்குக்காக பசு கொடுப்பதை பார்க்கும் போது 1 விளக்கிற்குக்கான 30 பசுவும், ஒரு கல்வெட்டிலும் (274/1906). சம்புவராயர் குறிக்கப்படும் கல்வெட்டில் 2 விளக்குக்காக 64 பசுக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பொன் கொடுக்கப்பட்டதை பார்க்கும் பொழுது மதுராந்தகன் கண்டராதித்தன் 285/1906 ஒரு நந்தா விளக்கிற்கும் ஒரு சோதி விளக்குமாக 15 கழஞ்சு பொன் கொடுத்துள்ளான். இதனை சபையர் ஏற்றுள்ளனர். அந்த பொன்னுக்காக எண்ணெய் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர் வல்லவனார் மகன் சபையாரிடம் 25 கழஞ்சு பொன் கொடுத்து அந்தக் கழஞ்சு பொன்னின் பொலிசையான வட்டியினைக் கொண்டு 2

விளக்குகள் எரிக்க வழி செய்துள்ளார். இதே போல் காடுபட்டியின் மகன் 25 கழஞ்சு பொன் கொடுத்து இரண்டு நந்தா விளக்குகள் எரிக்கச் செய்துள்ளார் (266/1906). மற்றொரு கல்வெட்டில் 12 கழஞ்சுகள் கொடுக்கப்பட்டு ஈழ விளக்கு ஒன்று எரிக்க தினமும் ஒரு உழக்கு எண்ணெய் கொடுக்க ஊரர் ஏற்றுள்ளனர். இந்தக் கொடை ஒருதனிநபர் கொடை ஆகும். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (271/1906) ஒரு விளக்குக்கு 6 காசுகள் வீதம் 10 விளக்குகள் எரிக்க 60 காசுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதைப் பெற்றுக்கொண்ட உலோக மாதேவிபுரத்து நகரத்தார் மாதம் தோறும் இந்த 60 காசுகளுக்கான வட்டிக்கு 75 நாள் எண்ணெய் அளிக்க சம்மதித்துள்ளனர். இப்படி எரிக்கப்பட்ட விளக்குகளுக்கு நெய். அல்லது எண்ணெய் வாங்கிவர செல்லும் ஊழியர்களுக்கு அந்த அந்த ஊரினரும், சபையினரும் சோறு கொடுக்க கடமைப்பட்டிருந்தனர் என்பதை இரண்டு கல்வெட்டுகள் (285, 296/1906) காட்டுகின்றன.

மதுராந்தகன் கண்டராதித்தன் (292/1906) ஒரு சோதி விளக்குக்காக கொடுத்த பணத்தைக் கொண்டு ஒரு நிலம் வாங்கப்பட்டு தனி நபரான கம்படிகாப்போன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் இவ்விளக்கு எரிக்க விளக்கின் வருவாயைப் பயன்படுத்த சம்மதித்துள்ளார். இராஜராஜசோழனின் அரசியான பஞ்சவன் மாதேவியும் (295/1906) இரண்டு நந்தா விளக்குக்காக நிலம் கொடுத்துள்ளார். ஒரே ஒரு கல்வெட்டில் (312/1906) கோவிந்தபாடி இறைவனுக்கு ஒரு வெள்ளாளன் ஒரு திருவிளக்கு மட்டும் கொடையாகக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. அக்கல்வெட்டில் அவன் விளக்கு எரிப்பதற்காக ஏற்படுத்திய வருவாய் ஏதும் குறிக்கப்பட வில்லை. எனவே விளக்கு மட்டும் கொடையாக அளிக்கப்பட்டது என்பதைக் காணலாம்.

## *நந்தவனம் கொடை*

விக்கிரம சோழன் கல்வெட்டு ஒன்று 272/1908) திருமாற்பேறில் இருந்த திருமாற்பேறுடையார் கோயில் உத்தம சோளீஸ்வரமுடையார் கோயில், அவிமுத்திஸ்வரமுடையார் கோயில் ஆகியவற்றிக்கு 6000 குழி நிலத்தில் 3000 குழி நிலமும் திருமாற்பேறுடையார் கோயிலுக்கும் ஒதுக்கப்பட்டன. இந்நிலங்களில் பாக்குமரங்கள் நிறைந்த நந்தவனமும், பூக்கள் நிறைந்த நந்தவனமும் ஏற்படுத்தப்பட்டன.

இவற்றிலிருந்து பெறப்பட்ட பூக்கள் தெய்வங்களுக்கு திருப்பள்ளி தானமாக பயன்படுத்தப்பட்டது.

## அமுது படிக்கான கொடைகள்

கோவிந்தபாடி திருமால் கோயிலும், திருமாற்பேறு உடையார் கோயிலும் அமுது படிக்காக கொடைகள் கொடுக்கப்பட்ட செய்திகள் நமக்கு தெரியவருகின்றன. பரகேசரி வர்மனுடைய கல்வெட்டு ஒன்று ஆதித்தியன் மீனவன் மூவேந்த வேளாணுடைய மனைவி கோயில் கண்ணப்பிராட்டி என்பவள் கோவிந்தபாடி இறைவனுக்கு அர்த்தஜாமத்தின் போது திருஅமுது படைக்க நிலம் கொடுத்துள்ளதைச் சொல்லுகிறது (320/1906). அமுது படியாக பழவரிசி, நெய், கறி அமுது, அடைக்காய் அமுது, வெற்றிலை முதலியவை படைக்கப்பட்டு இருக்கின்றன. இதற்காக இவன் 1,462 குழி நிலத்தை ஒரு பிராமண பெண்ணிடம் விலைக்குப் பெற்று கொடுத்துள்ளார். இதே கோவிந்தபாடியிலுள்ள இறைவனுக்கு மணவாளப்பெருமாள் என்ற தெய்வத்திற்கு, உச்சிகாலத்தின் போது அமுது படி(321/1906) படைப்பதற்காகவும், படைக்கப்பட்ட அந்த அமுதினை மடத்தில் பணி ஆற்றுகின்ற பிள்ளைகளுக்கு உணவாக கொடுப்பதற்காகவும், ஒரு பிராமணர் கொடைகள் கொடுத்துள்ளார்.

திருமாற்பேறு இறைவனுக்கு மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவர் திங்கள், சங்கராந்தி தோறும் 108 கலசம் தேன், நெய், பால், தயிர் (280/1906) ஆகியவை வைத்து நீராட்ட கொடைகள் கொடுத்துள்ளார். அதற்காக பொரி, கடுகு, எள்ளு, உளுந்து கரும்புச்சாறு, இளநீர், சுண்ணாம்பு, சீதாரி, பயிறுவகைகள் முதலியவைகளும் ஏற்பாடு செய்துள்ளார் (268/1906).

## பாலாட கொடை

மதுராந்தகன் கண்டராதித்தன் திருமாற்பேறு இறைவனுக்கு சிறுகாலைச் சந்தியிலும், ஞாயிறு சந்தியிலும், பாலாடுவதற்காக பசுக்கள் 20 கொடுத்துள்ளான். இந்த பசுக்கள் சேங்கன்று ஈன்றால், நாகுக்கு பசு மாறிக் கொள்ளவும் என்ற குறிப்பு இக்கல்வெட்டில் காணப்படுகிறது. எனவே சேங்கன்று என்பது எருது என்றும் அது பால் கொடுக்காது, என்பதால் அதற்காக பசுவை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும்,

குறிக்கப்படும் குறிப்பு பண்டைய காலத்தில் அறங்கள் எப்படி நிலையாக நடத்தப்பட வேண்டும் என்பதற்கு நல்ல சான்றாக அமைகிறது. நாகு என்று குறிக்கப்படுவது பெண்பாலாக இருக்க வேண்டும்.

## *இறையிலி நிலங்கள் கொடை*

சேதிராயன் திருமாற்பேறு கோயிலில் எழுந்தருளிவித்த உத்தம சோளீஸ்வரமுடையர் கோயிலுக்கு வழிபாட்டு செலவுகளுக்காக வதியூர் என்ற இடத்தில் 90 வேலி நிலம் தேவதான நிலமாக (277/1906) இறையிலியாக கொடுத்துள்ளான். இவன் அரசனிடம் முறையிட்டு, ஆணைபெற்று, இந்நிலத்தை இறையிலியாக கொடுத்துள்ளான். அரிகுலகேசரி என்ற பராந்தகனின் மகனுடைய அதிகாரியான பல்லவரையன் என்பவன் 10 காசுகள் கொடுத்து, ஒரு மாவுக்கு சற்று கூடுதலான நிலத்தை இறையிலியாக செய்து கொடுத்துள்ளான். இறையிலி செய்து கொடுத்தவர்கள் உத்தமசீலி சதுர்வேதி மங்கலத்து சபையினர் ஆவர். 1. மேற்சொன்ன கல்வெட்டில் அரசு ஆணை பெற்று இறையிலி இருக்க, இக்கல்வெட்டில் அரசு அதிகாரியாக இருந்த போதிலும், அரசு ஆணை பெறாது காசு கொடுத்து இறையிலி செய்து கொடுத்திருப்பது, பிராமணர்கள் சபைக்கு இருந்த நில உரிமையை எடுத்துக்காட்டுகிறது.

உத்தம சோழனுடைய காலத்தியதாக கருதக்கூடிய கல்வெட்டு புரவு, இரவு, பொன் ஆகியவை திருமாற்பேற்று இறைவனுக்கு கொடுக்கப்பட்ட செய்தியை மிக விரிவாகக் குறிப்படுகின்றது. மிக நீண்டக் கல்வெட்டில் உத்தமசோழன் காஞ்சிபுரத்தில் பொன் மாளிகையில் இருந்து ஆணை வழங்கியதாகச் சொல்லப்படுகிறது. தொண்டைமாணாற்றூர் துஞ்சிய உடையார் ஆகிய ஆதித்த சோழனின் 21–வது ஆண்டில் வழங்கப்பட்ட ஆணை, மீண்டும் பராந்தக சோழனின் 36-வது ஆண்டில் வழங்கப்பட்டு, தற்போது உத்தம சோழன் காலத்தில் மேலும் ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றது. புரவாக (நிலவருவாய்) 3,000 காடி நெல்லும், இரவுவாக (வாடகை வரி) 561 காடி நெல்லும், பொன்னாக 26 கழஞ்சும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்வெட்டில் மேற்சொன்ன கொடை சங்கரபாடி கிழான் கொடுத்தது என்றும் அவருடைய காணி உரிமை நிலத்தை, புதுப்பாக்கத்து சபையினர் அநியாயமாக கைப்பற்றி வரி சுமத்துகிறார்கள், என்று திருமாற்பேறு கோயில் தேவகன்மிகளும்,

சிவ பிராமணர்களும் முறையிட்டனர். எனவே அரசன் இக்கோயிலைக் சேர்ந்தவர்களையும், புதுப்பாக்கத்து சபையினர் ஆகியோர் எல்லோரையும் கூட்டி வைத்து பேசி முடிவு செய்து மேற்சொன்னபடி இரவு, புரவு, பொன் ஆகியவை கொடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இக்கல்வெட்டு, இக்காலகட்டத்தில் கோயிலில் இருக்கும் பிராமணர்களுக்கும் பிராமணசபையினருக்கும் இடையே வரிவருவாய் குறித்து எழுந்த பிணக்குகளைக்காட்டுகிறது (286/1906).

## *கோயில் பொன் கொடுத்து வட்டிக்கு நெல் பெறுதல்*

முதலாம் இராஜராஜன் சோழன் கல்வெட்டுகள் இரண்டு கோயில் தன்னிடம் உள்ள தங்கத்தை ஊருக்கும், பிராமணர்கள் சபைக்கும் கொடுத்து, அந்தப் பொன்னின் வட்டி மூலம் நெல் பெறுவதற்கு செய்த ஏற்பாடுகளைக் காட்டுகின்றன (281, 282/ 1906). இராஜராஜனின் 12-வது ஆட்சி ஆண்டில் திருமாற்பேறு கோயில் பிரதிவிமாதேவி சபையிடம் 60 கழஞ்சு பொன் கொடுத்தது. இந்தப் பொன்னுக்குப் பெறப்படும் பொலிசையான வட்டிக்கு 225 காடி நெல், ஆண்டுதோறும் பெற்றுக்கொண்டுள்ளது. இப்படிக்கொடுக்கப்படும் நெல் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் கோயிலுக்குக் கொண்டு வந்து அளக்கப்பட வேண்டும் என்றும், அந்த நெல்லில் உள்ள புழுதி செத்தல் முதலியவை நீக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், கொண்டு வரும் பொழுது ஏற்படும் சுங்கம் போன்றவைகளை சபையாரே செலுத்த வேண்டும் என்றும், செலுத்தியதன் பின் தரவு என்ற ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நெல்லுக்கு ஏற்படும் 'கோ' குற்றம் குடி 'குற்றம்' ஏரிக்குற்றம் ஆகியவை எதுவும் சொல்லக் கூடாது என்றும் தெளிவாக விதிகள் சொல்லப்பட்டுள்ளது.

மற்றொரு கல்வெட்டு பழுகூர் ஊரார் 60 கழஞ்சு பொன் பெற்று பொலிசையாக 225 காடி நெல் செலுத்துவதை மேற்சொன்ன விவரங்கள் குறிப்பிடுகிறது. இதனில் நெல், பாழ், பதர், வால் புழுதி ஆகியவை நீக்கப்பட வேண்டும் என்றும், பாக்கூலி வாடகைக் கூலி, ஊராரே ஏற்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

## *பரிகலன்களும் ஆபரணங்களும்*

திருமாற்பேறு கல்வெட்டுகள் மூன்றில் பொன், வெள்ளி, செம்புதாரா ஆகியவற்றில் செய்து கொடுக்கப்பட்ட பரிகலன்கள் மற்றும் ஆபரணங்கள் பற்றிய செய்திகள் (265/272,275/1906) கிடைக்கின்றன.

மும்முடி சோழ தேவன் என்கிற இராஜராஜன் இரண்டு கழஞ்சு, ஏழு மஞ்சடி, ஒரு குன்றுமணி, எடையில் ஒரு பொற்பூ செய்து இவ்வூர் இறைவனை நேரில் வந்து வணங்கி இருக்கின்றான். இப்பொற்பூவை காரைப்பாக்கமுடையான் அருள்மொழி மூவேந்த வேளாண் கொடுத்து கல்வெட்டு வைத்துள்ளான்.

அரையன் பொன்னம்பலம் கூத்தனுடை கன்ணகதரையன் என்பவன் பல ஆபரணங்களுக்காக கொடுத்த தங்கம், பல மாற்றுகளில் இருந்தது. இந்தத் தங்கம் 137 கழஞ்சு கொண்டு இறைவனுக்கு ஒரு பரிகலனும், கனமும் செய்து கொடுக்கப்பட்டன. 460 கழஞ்சு வெள்ளியால் அட்டனை ஒன்றும், காக்கால் இரண்டினால் இந்த தனை ஒன்று செய்து கொடுக்கப்பட்டன. 180 பலம் செம்பினால் ஒரு கழுழியும் முகவை சொம்பும் செய்து கொடுக்கப்பட்டன. வெண்கலம் 122 பலம் எடையில் '4½' சான், (2½) உயரத்தில் 3 விளக்குகள் செய்து கொடுக்கப்பட்டன (272/1906) கரிக்கால் சங்குகள் தரவாகவும் செய்து கொடுக்கப்பட்டது. சம்புவராயருடைய அதிகாரிகளில் அரையன் நீரணிந்தான் என்பவன் திருமாற்பேறு இறைவனுக்கு 5 கழஞ்சு எடையில் பொற்பூ ஒன்றும், காரை ஒன்றும் செய்து கொடுத்துள்ளான். 48 கழஞ்சு எடையில் ஒரு வெள்ளி வட்டிலையும், 222 பலம் எடையில் 2 திருக்குத்து விளக்குகளையும் செய்து கொடுத்துள்ளான்.

## *கல்வெட்டுகளில் காணப்படும் மடங்கள்*

திருமாற்பேறில் இறைவன் திருவீதியில் மடங்கள் இருந்ததை இரண்டு கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றது (270, 287/1906). குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டில் கோயில் காணி ஒருவருடைய நிலம் பேணப்படாமல் பாழாய் கிடந்தது. அந்த நிலத்தை திருமாற்பேற்றில் இருந்த மடத்துக்கு மடப்புறமாக கொடுத்தான். அதற்காக அந்த நிலம் மீண்டும் பயிர் நிலமாக திருத்தப்பட்டது. முதலாம் குலோத்துங்கனின் மற்றொரு கல்வெட்டு திருமாற்பேறு மடை விளாகத்தில் ஒரு தபசி அன்பர்க்கு அரசாண்டான் என்பவன் ஒரு மடம் அமைத்திருந்தான். அந்த மடம் அரசன் ஆலயமடம் என்று பெயரிடப்பட்டு இருந்தது. தாமற்கோட்டத்தில் இருந்த நித்த வினோத நல்லூர் என்ற ஊரை சேர்ந்த பலரும் அந்த மடத்துக்கு மடப்புற இறையிலியாக நிலங்கள் கொடுத்துள்ளனர். அந்த நிலம் 16 சாண் (8அடி) கோலால் 1,700 குழி அளவு இருந்தது. இப்படி இறை

நீக்கிக் கொடுக்கப்பட்டதால் பல வரிகளும் சொல்லப்பட்டு அவற்றை ஊராரே செலுத்துவதாக 20 நற்காசுகள் பெற்றுக் கொண்ட செய்திகளும் அறிய வருகிறது.

## கல்வெட்டுகளில் குறிக்கப்படும் வணிகர்கள்

வணிகர்கள் உள்ள ஊர்கள் பொதுவாக நகரம் என்று அழைக்கப்பட்டன. சில சமயங்களில் அவர்களது குடியிருப்புகள் பெருத்தெரு என்று அழைக்கப்பட்டன. திருமாற்பேறு கல்வெட்டில் ஒரு நகரம் 'பந்தி' என்று அழைக்கப்படுகிறது. பந்தி என்ற சொல் பொதுவாக வரிசையாக நிறுத்தப்படும் குதிரைகள், குதிரை பந்தி என்றும், வரிசையாக அமர்ந்து உணவு உண்ணும் பந்தி என்றும் பொருள்படும். இங்கு பந்தி என்று வணிகக் குடியிருப்பு குறிக்கப்படுவது அவர்கள் வரிசையாக குடியிருந்ததை சொல்லுகிறது எனலாம். இக்கல்வெட்டில் தாமற் கோட்டத்து, தாமற்நாட்டு பந்தியான உலோக மாதேவிபுரத்து நகரத்தார் குறிக்கப்பட்டுள்ளனர் (271/1906). இவரும் காலிங்கராயன் பத்து விளக்குக்காக கொடுத்த 60 காசு இந்த நகரத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு விளக்குகளுக்கு அக்காசின் வட்டி கொண்டு எண்ணெய் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதனில் அவர் சந்திராதித்தவரை இந்த எண்ணெய்யை கொடுக்க வேண்டும், என்று சொல்லுமிடத்தில் "நகரம் தவறினும் ஏறின நகரத்திலிருந்து எண்ணைய் இறுக்க கடவோம்" என்று அவர்கள் உறுதி கூறுகின்றனர். எனவே இந்த நகர வணிகர்கள் வணிக ஏற்ற, இறக்கங்கள் காரணமாக நகர் விட்டு, நகர் செல்கின்ற வழக்கு இருந்திருக்கிறது என்று நமக்கு தெரிகிறது. இந்தக் கல்வெட்டுக்களில் நகரத்துக்காக கையெழுத்து இட்டவர்களில் சுண்ண வாணியன், ஆதித்தன் செல்வன் என்பவனும் ஒருவன். எனவே இவன் சுண்ணாம்பு வியாபாரம் செய்து இருக்கிறான் என்பதை நாம் இதன் மூலம் அறிந்துக் கொள்கிறோம்.

## கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் வரிகள்

பொதுவாக அரசுக்கும் கொடுக்கப்பட வேண்டிய வரிகள், இரவு, புரவு என்ற பெயர்களில் இருந்தன. இவை நெல்லும், பொன்னாகவும் கொடுக்கப்பட்டன. முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டுக்களில் (287/1906) மடத்துக்கு ஊரினர் வரிகள் நீக்கி கொடுத்த செய்திகளை சொல்லும் போது, பெருவரி, கில்வரி, இல் அந்தராயம், எச்சோறு, கூற்றாசி வெட்டி, முட்டையால் தறி இறை, தட்டார் பாட்டம் உள்ளிட்ட திருவாய் செல்லில் போன்ற குடிமை என்று வரிகளை குறிப்பிடுகின்றார்.

# திருமால்புரம் கோயில் நிலங்கள்

முதலாம் இராஜராஜ சோழனின் நான்காவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு (283/1906) திருமாற்பேறு கோயில் நிலங்களின் பெயர்களை சொல்லுகிறது. அவை சென்னற்பள்ளம் நிலம், சிங்கடிகுறை, கொற்றைத்தை விளாகம், புலிச் செறு, நெல் வாயில் படப்பைச் செறு, புலியூர் வாணியன் செறு, குளத்தூர்க் கீழ் கனிநிலம் என்று திருமாற்பேறு கோயிலின் நிலங்களைக் குறிப்பிட்டு அவற்றின் அளவுகளையும் சொல்லுகிறது.

## கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் அளவுகள்

திருமாற்பேறு கல்வெட்டுக்களில் பொன், வெள்ளி, தரா செம்பு, வெண்கலம் போன்ற உலோகங்களை குறிக்கும் போது நிறுத்தல் அளவுகளும், நெய், பால், எண்ணெய், நெல், தானியங்கள், கரும்புச் சாறு, போன்றவற்றை குறிக்கும்போது முகத்தல் அளவுகளும் நிலம், குத்துவிளக்கின் உயரம் போன்றவற்றைக் குறிக்கும் போது நீட்டல் அளவுகளும் சொல்லப்படுகின்றன. பொன், வெள்ளி ஆகிய உலோகங்கள் கழஞ்சு, மஞ்சாடி, குன்றி ஆகிய எடைகளால் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பொன், பொன்னின் அளவு எடையில் மட்டும் அல்லாது அதன் மாற்றிலும் வேறுபடக்கூடியது. எனவே மாற்றுப்பார்க்கும் உரைக்கல்லாக, 'தன்ம' கட்டளைக் கல் என்ற துணைக்கல் பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றது (266/1906).

முகத்தல் அளவுகளில் விளக்கு, நாழி, கால், காடி ஆகியவை கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. நாழி, கால் முதலியவை இடத்திற்கு இடம் மாறுபடக் கூடியவை. ஆதலால் கல்வெட்டுகளில் பலரும் அறிந்த ஒரு மரக்காலை (அல்லது) நாழியை பெயர் சொல்லிக்குறிப்பிட்டு ஒக்கும் ஒன்று குறிப்பிட்டு சொல்லப்படுகிறது. "நாராசத்தோடு ஒக்கும் காலால்" (281/1906) "திருநாரணத்தோடு ஒக்கும் உழக்கு" (285/1906) "எம்மூர் அகத்து நின்றான் காலோடு ஒக்கும் நாழி" என்பவற்றை எடுத்துக்காட்டாக சொல்லலாம்.

நிலங்கள் பெரும்பாலும் 'குழி' என்ற அளவால் சொல்லப்படுகின்றன. 'குழி' என்பது ஒரு குறிப்பிட்ட கோலைக் கொண்டு அளக்கப்படும் ஒரு சதுரமாகும். இப்படி அளக்கப்படும் கோல்கள் ஊருக்கு ஊர் வேறுபட்டிருந்தன. அவ்வூர் கோல்களின் அளவு தெரிவதற்காக அவ்வூர் கோயில்களில் இக்கோல்களின் நீளத்தை வெட்டிவைப்பது உண்டு. இப்படி தமிழகத்தில் பல கல்வெட்டுகள் கோள்களின் நீளத்தைக் காட்டுமாறு கிடைக்கின்றன. திருமாற்பேறில் அப்படி கோலின் அளவு கல்லில் வெட்டப்படவில்லை. எனினும் இரண்டு, மூன்று கல்வெட்டுகளில் கோலின் பொது நீளம் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லப்படும் நீளக் கோலின் பெயர் 16 சாண் கோல் என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. சிற்றியாற்றூர்க்கென்று ஒரு தனிப்பட்டக் கோல் இருந்துள்ளது. அது கல்வெட்டுகளில் சிற்றியாற்றூர் கோல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 16 சாண் கோலால் 500 குழி நிலம் அளக்கப் பட்டதை ஒரு கல்வெட்டு (284/1906) காட்டுகிறது. நிலத்தின் பரப்பு பெரும்பகுதி கல்வெட்டுகளில் 'குழி' என்றே எண்ணிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது. 1000 குழி (270/1906) 225 குழி (283/1906) என்று சொல்லப்படுபவற்றை எடுத்துக் காட்டாகக் கூறலாம். ஒரு கல்வெட்டில் மட்டும் வேலி அளவு சொல்லப்பட்டிருக்கிறது. (277/1906) நிலத்தின் தொகுதிகள் அல்லது துண்டுகள் 'தடி' என்றும் பாடகம் என்று அழைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கல்வெட்டு பாடகம் இரண்டரையால் குழி 1000 (270/1906) என்றும், மற்றொரு கல்வெட்டு மூன்று தடியால் இவ்வூர் கோலால் 225 குழி (283/1906) என்றும், சொல்லப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டாக குறிப்பிடலாம்.

# நீர்ப்பாசன அமைப்பு

நிலக்கொடைகள் இறையிலி நிலங்கள் பற்றிச் சொல்லும் கல்வெட்டுகளில் பல நீர்பாசன அமைப்புகள் நமக்கு தெரிய வருகின்றன. இவை கால், வாய்க்கால், கண்ணாறு, வதி, தூம்பு, குமிழி, கிணறு, குளம், ஏரி என்பவையாகும். கால் மற்றும் வாய்க்கால்களுக்கு, மட்டும் பெயர்கள் இட்டு அழைத்துள்ளனர். விமலாதித்த வாய்க்கால், குமிழக்கால் (292/1906) பள்ளிவெட்டார் வாய்க்கால், (294/1906) ஸ்ரீகற்ப வாய்க்கால், (270/1906) கீழ் நோக்கிப் பாய்ந்த வாய்க்கால், (270/1906), பாப்பான் கால் (287/1906) ஆகியவை. அவ்வாறு பெயர் பெற்ற கால்களும், வாய்க்கால்களும் இருந்தன. நிலங்களில் பாயும் அதிகப்படியான நீர் வடிகால்களில் இறங்கி இந்த வடிகால்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மீண்டும் ஒருவாய்க்காலாக உருவெடுக்கும். இப்படி பட்ட வடிகால்கள் முன்பு 'வதி' என்று சொல்லப்பட்டன. ஸ்ரீ காமுகவதி, கோதண்டராமவதி, ராஜகேசரிவதி, ராஜநாராயணவதி (270/1906) ஆகிய வதிகள் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். கண்ணாறுகள் என்பவை வாய்க்காலிருந்து பிரிந்து நிலங்களின் வரப்பு ஓரமாக ஓடும் சிறு கால்கள் ஆகும். இவை ஐந்தாம் கண்ணாறு, ஆறாம் கண்ணாறு என்று எண்களின் மூலம் எண்ணப்பட்டு அழைக்கப்பட்டன ராஜகேசரி (320/1906) கல்வெட்டு.

ஊர்களின் பேரிலும் கால்கள் அழைக்கப்பட்டன. இருகூர் கால், (298/1906) எங்களூர் கோயில் குமிழி தூம்பு (297/1906) அடையாற்றுக்கால் (287/1906) கலிங்கத்தரையின் பேரில் ஒரு குளம் இருந்ததைப்பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது (272/1906). நீர் பாய வேண்டிய விதிமுறைகளும் சில கல்வெட்டுக்களில் சொல்லப்படுகின்றன. ஏரி நீரும், ஆற்றுக்காலும், நீர்க்கு ஈந்தபடி நீர் பாய்ச்சிக் கொள்ளப் பெறுவதாகும் (272/1906). நீர் பாயுமிடத்து நீர் நீளவோபாதி, கால்ஊந்துநீர் கொள்ளவும், பெருந்தூம்பு, நடுவில் தூம்பு, மில்தலைநீர், கடைநீர் பெறவும் (287/1906) என்ற கல்வெட்டு சொற்றொடர்களை நாம் எடுத்துக்காட்டாக சொல்லலாம்.

# மூவேந்த வேளாண்

சோழர் காலத்தில் பிராமணர்கள் பிரம்மாதிராயன் என்ற பட்டத்துடன் சிறப்பிக்கப்பட்டது, போல வேளாண் குடிமக்கள் மூவேந்த வேளாண் என்ற பட்டத்துடன் சிறப்பிக்கப்பட்டன. இப்படிச் சிறப்பிக்கப்பட்ட இவர்கள் சோழ அரசில் பல்வேறு பொறுப்புக்களை வகித்தனர். திருமாற்பேறு கல்வெட்டில் குறிக்கப்படும் மூவேந்த வேளாண்கள் பின்வருமாறு :

1. காரைப்பாக்க முடையானான அருமொழி மூவேந்தவேளாண்- 265/1906.
2. திருமந்திர ஓலை இராஜ நாராயண மூவேந்த வேளாண் - 277/ 1906.
3. அதிகாரிகள் வில்லவன் மூவேந்த வேளாண் - 283/1906.
4. இராஜ மார்த்தாண்ட மூவேந்த வேளாண் - 283/1906.
5. சாத்தநான பரகேசரி மூவேந்த வேளாண் - 286/1906.
6. நக்கந் கச்சணான சோழ மூவேந்த வேளாண் - 286/1906.
7. ஓலை நாயகன் சோழ மூவேந்த வேளாண் - 286/1906.
8. நங்கரும மாராய் என்ற பரகேசரி மூவேந்த வேளாண் - 286/ 1906.
9. சிகாமணி மூவேந்த வேளாண் - 287/1906.
10. தியாகா பரண மூவேந்த வேளாண் - 287/1906.
11. செல்வநாத நிருபராஜ மூவேந்த வேளாண் 287/1906.
12. விக்கிரம சிங்க மூவேந்த வேளாண் - 287/1906.
13. தாமற் கோட்ட மூவேந்த வேளாண் - 290/1906.
14. விறை நாட்டு மூவேந்த வேளாண் - 290/1906.

15. திருவெண் காட்டியன்னந் மூவேந்த பிட(வூர்) வேளாண் (312/1906).
16. கருணகரன தென்னவன் மூவேந்தி வேளாண்
17. விராபரண மூவேந்தி வேளாண் - (142/1906).
18. மினவன் மூவேந்த வேளாண் . . (142/1906).

# குற்றங்கள் தண்டனைகள்

## *அரசியல்*

அரசுக்கு வரி செலுத்தாமல் ஏமாற்றுவது. பொது நிறுவனங்களின் சொத்துக்களை முறையற்ற முறையில் அனுபவிப்பது. லஞ்சம் வாங்குதல், கோயில்களின் செல்வங்கள் மற்றும் அற நிறுவனங்களில் உள்ள பணத்தைக் கையாடல் போன்ற முறைகேடான செயல்கள் இக்காலத்தில் மட்டுமின்றி தொன்றுதொட்டே வழக்கில் இருந்து வந்துள்ளது. இவற்றை அவ்வப்போது அரசும், குடிமக்களே இதுபற்றி அரசுக்கு தெரிவித்தும் குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டித்த முறைகள் போன்றவை ஏராளமாகச் சோழர்கால வரலாற்றுக் குறிப்புகளில் காணக்கிடக்கின்றன.

சோழர்களின் ஆட்சிக்காலத்தில் அரசுத்துறை மிகச்சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டது. பல்வேறு வகையான அதிகாரிகள், ஊர்கள், நகரங்கள், சபைகள், கோயில்கள் ஆகிய அமைப்புகளை நிர்வாகம் செய்து சட்டம், ஒழுங்கு, தர்மநெறி முறைகள் ஆகியவற்றை நிலைநாட்டினர். இருப்பினும் ஆங்காங்கே ஊழல்களும், முறைகேடுகளும் நிகழ்ந்துள்ளன என்பது கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தி.

1. அரசின் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் கணக்கு காட்டாமல் இருத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து பிறர் சொத்துக்களை அபகரித்தல், கையூட்டு பெறுதல், அரசுக்கு வரி செலுத்தாமல் நிலங்களை அனுபவித்தல், தம் கடமை செய்யாமல் ஏமாற்றுதல்.

2. கோயில் அலுவலர்கள் கோயில் வழிபாட்டுக்கென வைத்த நிவந்தங்களை சரிவர செய்யாமல் தாமே அனுபவித்தல்.

3. கோயில் செல்வங்களைத் திருடுதல், அதை ஒழுக்கக்கேடான காரியங்களுக்குப் பயன்படுத்துதல் போன்ற வகைகளில் பிரிக்கலாம்.

### *காலங்கள்*

இத்தகைய முறைகேடுகளைப் பற்றிய செய்திகள் நமக்கு முதற் பராந்தகசோழன், உத்தமசோழன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், அதிராசேந்திரன், மூன்றாம் இராசராச சோழன் ஆகியோர் காலங்களில் கிடைக்கின்றன.

### *யார் யார்?*

இத்தகைய குற்றங்களைப் புரிந்தோர்கள் யாவர் என நோக்கும்போதும், கிடைக்கின்ற கல்வெட்டுகளில் அதிக அளவு முறைகேடுகளைப் புரிந்தவர்களாக உள்ளனர்.

1. நிறைந்த உரிமைகளும், அதிகாரங்களும் தன்னாட்சி அந்தஸ்தும் பெற்ற தேவதான, பிரம்மதேயசதுர்வேதி மங்கலங்களை நிர்வகிக்கும் பிராமணர்கள்.

2. கோயில் வழிபாடுகளை நடத்தி சமயத்தை வளர்க்கும் சிவ பிராமணர்கள், தேவகன்மிகள் போன்ற அலுவலர்களாகவே உள்ளனர்.

### ஊழல்களைத் தடுக்க விதிமுறைகள் செய்தமை
### வரி ஏய்ப்புச் செய்தமை

அரசுக்கு சேர வேணடிய வரியைச் செலுத்தாமல் வரி ஏய்ப்புச் செய்தல், வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், திருமால்புரம் என்னும் ஊரில் சோழனுடையதாகக் கருதப்படும் 4வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு இத்தகைய வரி ஏய்ப்புச் செய்த முறைகேட்டைச் சொல்கிறது. ஏறக்குறைய நூறுவரிக்கு மேல் உள்ள இக்கல்வெட்டு மிகத்தெளிவான முறையில் இவ்வரி ஏய்ப்பு நடந்த விதங்களைக் கூறுகிறது.

இதன்படி இந்த வரி ஏய்ப்பு முதலாம் ஆதித்த சோழனின் 22-ஆவது ஆண்டிலிருந்து (கி.பி.893) முதல் உத்தமசோழனின் 4 ஆவது ஆண்டு வரை (கி.பி. 974) ஏறக்குறைய 82 ஆண்டுகள் நடந்துள்ளது. அதாவது திருமாற்புரத்து கோயில் வழிபாட்டுக்காகப் புரவு நெல் 3,000 காடியும், இறை நெல் 561 காடியும், பொன்னாக 200 கழஞ்சும், இறையிலியாக தரப்பட வேண்டிய சிற்றியாற்றூர் என்ற ஊர் கொடையாக அளிக்கப்பட்டது. இந்த ஊர் நிலங்களில் சங்கப்பாடி

கிழான் என்பவனின் நிலம் மட்டும் நீக்கிவிட்டு பிற நிலங்கள் கொடையாக அளிக்கப்பட்டன.

இந்த ஊரை ஏற்று மேற்சொன்ன அளவு இறை செலுத்தும் பொறுப்பைப் பிரம்மதேயம் புதுப்பாக்கத்துச் சபையார் ஏற்றுக்கொண்டனர். இது தொண்டைமானாற்றூர் துஞ்சினத்தேவரின் (முதல் ஆதித்த சோழன்) 21 ஆவது ஆண்டில் சாசனமும் செய்யப்பட்டது. ஆனால் இதுபற்றிய விவரம் வரியிலிடப்படாமல் அரசாங்க வருவாய் கணக்குப்புத்தகத்தில் எழுதப்படவில்லை. ஆனால் இப்படி அரசுக்கணக்கில் எழுதப்படாமல் இருந்த விபரம் பராந்தகசோழனின் 4-வது ஆண்டில் தான் கண்டறியப்பட்டது. பிறகு அரசின் கணக்கில் சேர்க்கப்பட்டது. இதன் பிறகும் புதுப்பாக்கத்துச் சபையார் கோயிலுக்குச் சேர வேண்டிய பொன்னையும், நெல்லையும் கொடுக்காமல் இவ்வரசனின் 36-ஆவது ஆண்டுவரையும் (32 ஆண்டுகள்) ஏமாற்றி வந்தனர். இதனால் கோபமடைந்த அரசன் தற்போது சபையாரிடமிருந்து சங்கபாடி கிழான் முதலிய நிலங்களை தற்போது கோயிலுக்கே கொடுத்து அதன் நேரடி நிர்வாகத்தில் விடுகின்றான்.

ஆனால் இப்படி முன்னர் நீக்கிய சங்கப்பாடி கிழான் நிலத்தைக் கோயிலுக்கு வரியிலிட்டு குடுத்தப்பின்னரும் அந்த நிலத்தை புதுப்பாக்கத்துச் சபையார் வன்முறையில் அடாதமுறையில் கைப்பற்றி அனுபவித்துக் கொண்டதுடன் கோயிலுக்குச் சேர வேண்டிய இறையையும் கட்டாமல் விடுகின்றனர்.

இந்த வரி ஏய்ப்பை எதிர்த்துக் கேட்ட கோயில் அதிகாரிகளையும் அவர்கள் துன்புறுத்தியதாகத் தெரிகிறது. சபையார்களின் அட்டகாசம் எல்லை மீறியபோது இத்தகவல்கள் அரசனிடம் முறையிடப்படுகிறது.

"இப்பரிசு குடுத்த இச்சங்கப்பாடி கிழான் காணியைப் புதுப்பாக்கத்து ஸபையார் பற்றியாண்டு (வரை) தெவர்க்கு இறையிறா தொழிகின்றார்களென்று தெவ கன்மிகளும் உண்ணாழிகை யுடையாரும் பன் மாயெஸ்வரரும் வந்து அனியாயம் அடுகின்றார்கள் என்று நமக்குச் சொல்ல. . . "

இதன் பிறகு அரசன் கோயில் அதிகாரிகளையும், சபையார்களையும் அழைத்து நேரில் விசாரணை செய்தபோது ஊழல்

வெளிப்படுகிறது. சபையார் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். தண்டிக்கப்பட்ட பிறகும் அரசன் மீண்டும் இந்நிலங்களை இச்சபையாரே பெற்று கோயிலுக்குத் தேவதான இறை செலுத்தும் சலுகையை வழங்குகிறான். இதனை,

"திருமால் பெற்றுத் தெவகன்மிகள் உண்ணாழிகை உடையார்களையும் பன்மாகெஸ்வரர்களையும் புதுப்பாக்கத்துச் சபையாரையும் அழைத்து நாம் ஆராய்ந்து இடத்து புதுப்பாக்கத்து ஸபையார் சிற்றியாற்றூர் சங்கப்பாடி கிழான் காணியால் தெவர்க்கு இறையிறு தெய் தெவதானங்களை அனுபவித்து வருகின்றமைய் இசைந்தமையில் புதுப்பாக்கத்து சபையாரைத் தண்டங் கொண்டு இச்சங்கப்பாடி கிழான் காணி மூவாயிரக்காடியும் திருமால் பெற்று உடையாற்கு புதுப்பாக்கத்து சபையாரெய் இறுப்பதாக இவர்களுக்கெய் யாண்டு 14 முதல் தெவதான பிரம்மதெயமாய் ..... வரியிலிட்டுக் கொள்க வென்று நாஞ்சொல்ல. . . . " என்று கூறும் கல்வெட்டு வாசகங்களால் அறியலாம்.

இத்தகைய வரி ஏய்ப்பு ஊழல் விசாரணையானது இனிமேல் இந்த மாதிரி நடவாமல் இருக்க வேண்டும் என்று பலர் முன்னிலையில் நடத்தப்பட்டது. அதாவது இந்தப் பகுதி பிரம்மதேயக் கிழவர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள். ஊரார்கள் பள்ளிச்சந்தம் மற்றும் பிற சபை அமைப்புகளின் அலுவலர்கள் ஆகியோரை அழைத்து நடத்தப்பட்டது. இதனை அரசனே காஞ்சிபுரத்தில் வந்து தங்கி செய்தான். . .

> "ஸ்வஸ்தி ஸ்ரீ கொனெரின்மை கொண்டான் மணையில்
> கொட்டத்தும் மணையில் நாட்டார்க்கும்
> பிரம்மதெய்க கிழவர்க்கும் தெவதானப்
> பள்ளிச்சந்தக் கணிமுற்றூட்டு வெட்டப்பெற்றுள்ளார்
> கனிலார்க்கும் நகரங்களிலார்க்கும் யாண்டு 14-வது நாள்
> 106னால் கச்சிப்பெட்டு நம் வீட்டிநுள்ளால்பொன் மாளிகை
> ஆதிபூமியில் நாமிருக்க,"

என்று கூறுவதால் அறியலாம்.

மேலும் அப்போது அவனுடன் ஆராய்கின்ற (தலைமைச்செயலர்) அதிகாரியாக ஒருவனும், நடுவிருக்கை ஆனத்தி, வாய்க் கேழ்வி, ஓலை எழுதும் அதிகாரி ஓலை நாயகன், புரவுவரி அதிகாரி, உத்தர மந்திரி வரிப்பொத்தகக் கணக்கு ஆகிய வருவாய்த்துறை அனைத்து

அதிகாரிகளும் இருந்து இதனை நடத்தி ஒழுங்குபடுத்தியுள்ளனர். இதிலிருந்து பிரம்மதேய சபையார்கள் அரசனின் ஆணைகளையே மதியாமல் ஏமாற்றும் துணிச்சலைப் பெற்று விளங்கினர் என்றும் இந்த ஊழலில் அளவையும், தன்மையையும் நாம் ஒருவாறு உணரலாம்.

## *கோயில் உண்ணாழிகை உடையார்களின் ஊழல்கள்*

இதே போன்ற ஊழல்கள் திருமால்புரத்திலுள்ள கோயிலில் இராசராச சோழன் காலத்தில் கண்டுபிடிக்கபட்டுள்ளது. இங்குள்ள அக்னீச்சுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைத் தாங்களே அனுபவித்து வந்ததுடன் வழிபாட்டு நிவந்தங்களையும் செய்யாமலும் விட்டு விடுகின்றனர். இறைவனுக்குப் படைக்கின்ற அமுதை வெறும் அரிசியாக அவித்து படைத்தனர். பல சிறிய பெரிய அதிகாரிகளின் துணையுடன் சென்று இதனை கண்டறிந்து அதிகாரிகளை தண்டித்துப் பழையபடி நிர்வாகத்தை சீர்பெறச் செய்தவன் உத்தமசோழனின் மகனான மதுராந்தகன் கண்டராதித்தன் என்பவன்.

இவனே இதே போன்று திருவலம் கோயிலுக்குச் சென்ற இறைவனுக்கு வழிபாடு நடத்தி வணங்கிய சமயத்தில், அங்கு இறைவனுக்குப்படைக்கப்படும் திருவமுதின் அளவு குறைந்தும் எண்ணெயின்றி விளக்கு ஒளி குறைந்து எரிவதையும் கண்டு இது பற்றி விசாரித்து ஊழல்களை கண்டு பிடித்துத் தண்டித்தார்.

> ". . . மதுராந்தகன் கண்டாதித்தனார் ஆழ்வாரை
> சகஸ்ரகலச மாட்டுவிக்க வந்து திருவடிகொழுது
> நிற்க ஆழ்வார்க்கு காட்டுகின்ற திருவமூர்தும்
> இருநாழியரிசித் திருவமூர்தாய்க கறியமுர்து
> நெய் அமுர்தும் தயிர் அமுர்தும் இன்றியெம்
> நொந்தாவிளக்கும் ஆலஸ்மாயிருக்க கண்டு
> இத்திருக்கொயில் சிவப்பிராமணரையும்
> திக்காலிவல்லத்து சபையாரையும்
> அழைத்து இத் தெவருடைய ஆயமும்
> வீயமும் திருவாணைக்குந் திருவொலைக்கம்
> உரிய வண்ணஞ் சொல்லுக வென்று விவை
> சிவப்பிராமணரும் திக்காலிவல்லத்து சபையாரும்
> சொல்ல!"

என்று கூறுகிறது. ஆனால் இக்கல்வெட்டு முழுவதும் நமக்குக்

கிடைத்திலது. இருப்பினும் விசாரணையின் முடிவு பற்றிய செய்தி மற்றொரு கல்வெட்டில் கிடைக்கிறது.

> ". . . யாண்டு ஏழாவதுதிக்காலி வல்லத்துத் திருத்
> திக்காலிப் பெருமானடிகள் போகமான நிலங்களை
> இக்கொயில் சிவப்பிராமணர்கள் இறக்கி உண்ட
> மையில் இவர்களை மதுராந்தகன் கண்டராதித்தநார்
> ஆராய்ந்து தண்டங்கொண்டபொன் எழுபத்து
> நாற் கழஞ்சும்"

என்றும் கூறுகிறது. இவ்விசாரணையில் ஊர்ச் சபையார் விசாரிக்கப்பட்ட போதிலும் அவர்கள் குற்றமற்றவர்கள் என்றும் கோயில் சிவபிராமணர்களே குற்றம் புரிந்தவர்கள் என்பதும் பெறப்படுகிறது.

இவ்விசாரணையைத் தொடர்ந்து பல ஊழல்கள் இந்த கோயில்களிலும் கோயிலைச்சேர்ந்த ஊர்களின் நிர்வாகத்திலும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் இக்கோயிலுக்கென்று புது நிர்வாக அதிகாரி ஒருவன் இராசராசனின் 13-ம் ஆட்சி ஆண்டில் நியமிக்கப்பட்டதைக் காண்கிறோம். (கி.பி. 998).

இவ்வதிகாரியின் பெயர் ஈராயிரவன் பல்லவனான மும்முடிசோழ போசன். இவன் இராசராச சோழனின் பெருந்தரத்து அதிகாரி. நித்தவினோத வளநாட்டு பாம்புணிக் கூற்றத்து அரைசூரைச் சேர்ந்தவன். தஞ்சைபெரிய கோயிலில் சண்டேசுவரர் திருமேனியை எழுந்தருளுவித்து ஏராளமான பொன்னைக் கொடையாக அளித்தவன். இவன் திருவல்லம் கோயிலுக்கு "மேநாயகஞ்செய்யும்" செய்யும் அதிகாரியாக நியமிக்கப்பட்டான் (208/1921) இவன் பொறுப்பேற்றபின் இவ்வூர் ஆளுங்கணத்தாருள் ஒருவனின் மருமகன் 25 பொன் பெற்றுக் கொண்டு ஒரு நந்தா விளக்கு எரிக்க ஒப்புக்கொண்டான். ஆனால் எரிக்காமல் விட்டு விட்டான். இதனைக் கண்டுபிடித்துத் தண்டித்தான்.

இப்படி இவன் பலவகை ஊழல்களையும் கண்டறிந்து அபராதமாக வசூலித்து கருவூலத்தில் சேர்ந்த பொன் 140 கழஞ்சு 7 மஞ்சாடி ஆகும்.

இதே போன்று திருவல்லம் கோயிலுக்கு சொந்தமான தேவதான ஊர் மந்திரத்துச் சபையார் செலுத்த வேண்டிய பஞ்சவாரத்தில் அளவு

விதிக்கப்பட வேண்டிய வரிவிதத்தில் விதிக்கப்படாமல் குறைந்த அளவாக நிர்ணயிக்கப்பட்டிருந்ததை (அல்லது வசூலாக வேண்டிய பஞ்சவாரம் செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்ததோ சரிவரத்தெரியவில்லை) அவன் ஆராய்ந்து வசூலித்தான். இதனை இராசராசனின் 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டுக் கூறுகிறது. (கி.பி.1107). மேலும் இச்சமயம் இவ்வதிகாரி 'மே நாம் செய்கின்றவர் என்ற பதவியில் இருந்து ஸ்ரீகாரியம் கடைக்காண்கின்ற' அதிகாரியாக பொறுப்புகள் நிறைந்த உயர் அதிகாரியாக உயர்த்தப்பட்டுள்ளான். இதிலிருந்து இப்பகுதி நிர்வாக சீர்கேட்டின் ஆழமான சிக்கலும் அதை தீர்க்கும் முகத்தான் இவருக்கு கூடுதலான தனி அதிகாரங்கள் வழங்கப்பட்டமையும் புலனாகிறது.

மதுராந்தகன் கண்டாராதித்தர், மும்முடி சோழ போசன் ஆசியோருக்குப்பிறகு இராஜேந்திர சோழன் காலத்திலும் இக்கோயிலின் முறைகேடுகளைச் சரிபார்த்துச் சீரமைக்கும் பணி தொடர்ந்து நடந்து வந்தது. இப்பணியைச் செய்தவர் கொட்டையூர் பூவத்தபட்ட சோமாசியர். இவர் மேற்படி கோயிலில் இருந்து கொண்டு திருவல்லம் கோயில்கணக்குகளையும், மேற்பாடி கோயில் கணக்குகளையும் ஆராயவந்தார். முன்பு மதுராந்தகன் கண்டராதித்தன் பின்பற்றிய முறையை இருவரும் கடைப்பித்துக் கணக்குகளை ஆராய்ந்தார்.

திருவல்லம் கோயிலின் ஊழல் விசாரணை, அதிராசேந்திரன் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பட்டது என்பதை இவனது 3-ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக்கூறுகிறது. இதனைச் சோழநாட்டு அதிகாரியும் படைகள் நடத்தும் சேனாபதி ஒருவனும் வந்து நடத்தினர். படைத்தளபதி வந்து விசாரித்தான் எனில் விசாரணைக்கு இப்பகுதியில் எதிர்ப்பு கிளம்பியதால் அதை அடக்க படைகளுடன் வர வேண்டியிருந்திருக்கும் என ஊகிக்கலாம். இக்கோயிலின் பல தேவதான ஊர்களின் கணக்குகள் சரிபார்க்கப்பட்ட செய்தியை அறிகிறோம்.

மேற்பாடி கோயிலில் செய்யப்பட்ட விசாரணைகள் இது திருவல்லத்துக்கு மேற்கே ஆறு கல் தொலைவில் உள்ள ஊர். இங்கு தான் இராசராசசோழன் சோழேந்திர சிங்க ஈச்வரம் என்ற சிவாலயத்தை 14 ஆவது ஆண்டிலும், அரிஞ்சய சோழனுக்குப் பள்ளிப்படையாக அரிஞ்சிகை ஈச்வரம் என்று கோயிலை தனது 29

ஆவது ஆண்டிலும் எடுப்பித்தான். அரசனால் கட்டப்பட்ட கோயில்கள் என்பதனால் அரசனும், அதிகாரிகளும், ஊர் மக்கள், நகரத்தார்கள் போன்ற ஏராளமான பேர்களும் இக்கோயில்களுக்குக் கொடையளித்தனர். இக்கோயிலின் வந்து குவிந்த செல்வங்களைப் பற்றி இவ்வூர்க் கல்வெட்டுக்கள் நிரம்பப் பேசுகின்றன.

ஆனால் சோழேந்திர சிங்க ஈசுவரர் கோயில் கட்டிச் சரியாக 20 ஆண்டுகள் ஆவதற்குள்ளாகவே இக்கோயிலின் செல்வங்கள் சூறையாடப்பட்டு செல்வங்கள் குறைந்து நிவந்தங்கள் நிறுத்தப்படுகின்ற நிலையைப் பார்க்கிறோம். இதனால் இராசேந்திர சோழனின் 4 ஆவது ஆட்சி ஆண்டிலேயே ஊழல் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

> ". . . யாண்டு நாலாவது நடுவிருக்கும் கொட்டையூர்
> ஆவதத்தபட்ட ஸொமாயாஜியார் . . . . சொளெந்திர சிங்க
> ஈஸ்வரமுடையார் கோயிலின் வடபக்கத்து சாலை
> அருமொழிதேவனிற்க் கோயில் கருமமாராயா விருந்து . . . "

என்ற வரிகளால் அறியமுடிகிறது.

இவ்விசாரணை தொடர்ந்து இவ்வரசனின் 10 ஆவது ஆட்சி ஆண்டிலும் நடத்தப்பட்டது. இதற்கு மற்ற காரணம் இம்மன்னன் பழையாறை கோயிலினுள்ளால் திருமஞ்சன சாலை பள்ளி பீடத்து எழுந்தருளியிருந்த போது இக்கோயிலுக்கு வேண்டிய நிவந்தங்களாகக் கருவேடு, ஒழுகையூர், வாங்கூர், மருதம்பாக்கம், பெரும்பனூர் ஆகிய ஊர்களை அளித்தான். ஆனால் இவை இவனின் 10 ஆவது ஆண்டுவரை நிவந்தஞ் செய்யாமல் கிடந்தது. இதன் பிறகு மன்னன் மேற்கூறிய ஊர்களின் வருமானத்தைக் கோயிலுக்குச் செலவிட ஏற்பாடு செய்த செய்தி காணப்படுகிறது.

இதே போன்று முதலாம் இராசராசன் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை ஒன்று நடத்தப்படாமல் கிடந்தது. மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

1. இத்தகைய முறைகேடுகளை செய்துள்ளவர்கள் சதுர்வேதி மங்கலம், பிரம்மதேயம், தேவதான ஊர்களில் உள்ள சபையார்கள் இவைகள் எல்லாம் அக்காலத்தில் சுயாட்சியும், தன்னாட்சியும் பெற்று விளங்கிய பிராமணர்களின் ஊர்களே.

2. கோயில் நிவந்தங்களை இறக்கி உண்டவர்கள் சிவப்பிராமணர்கள்.

3. நாட்டார், நகரத்தார், ஊர்மக்கள் ஆகியவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டதாக அதிகக் குறிப்புகள் இல்லை.

4. இத்தகைய ஊழல்கள் பற்றிய செய்திகள் அரசனுக்கு நேரில் கூறப்பட்டது.

5. அரசனே இவற்றைத் தீரவிசாரித்து ஒழுங்கு செய்துள்ளான்.

6. அரசே இதற்கென தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து ஊழல்களை ஆராய்ந்துள்ளது.

7. சிலசமயம் அரசின் உயர் அதிகாரிகள் தாங்களாகவே இத்தகைய ஊழல்களை உய்த்தறிந்து கண்டுபிடித்துள்ளனர்.

8. மேலும் இத்தகைய விசாரணைகளின் போது எதிர்ப்புகளும் இருந்தமையால் இப்பணியில் ஆய்வு அதிகாரிகளுடன் படைத் தளபதிகளும் அனுப்பப்பட்டனர்..

9. ஊழல்கள் நடந்துள்ள காலங்கள் பெரும்பாலும் பராந்தக சோழன் காலத்திற்குப் பிறகும் இராசராச சோழனின் ஆரம்ப ஆட்சிக்காலத்திலும் ஆகும். இந்த இடைப்பட்ட காலத்தில் தக்கோலப் போருக்குப் பிறகு தொண்டைமண்டலமானதும் ராட்டிரகூடர்களால் காப்பாற்றப்பட்டதும் அதை மீட்கும் போராட்டத்தில் தங்கள் உயிரை இழந்தும் சோழ அரசர்கள் போராடியுள்ளனர் என்பதும் அப்போது வலிவற்ற, நிலையற்ற, அரசு நிலவியது என்பதும் வரலாறு காட்டும் உண்மைகளாகும். இதனால் இக்காலத்தில் கோயில் செல்வங்களும், நிலங்களும் கவனிப்பாரின்றி அவரவர்களே கிடைத்ததை அனுபவித்து வந்துள்ளனர் என்று கருதவும் இடமிருக்கிறது.

10. விசாரணை நடத்தப்பட்ட சோழப்பேரரசின் தலைமை இடங்களிலிருந்து (தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம்) சுமார் 500 கி.மீ. தொலைவில் பேரரசின் வடகோடி எல்லையில் அமைந்திருந் தமையால் நடுவண் அரசின் உடனடி கவனத்திலும் நேரடிப் பார்வையிலும்

இருக்கமுடியாத நிலை இப்பகுதிக்கிருந்தமையால் முறைகேடுகள் நடக்க ஏதுவாயிற்று.

11. சோழப் பேரரசின் மீது பாண்டியர்களும் ஹொய்சாளர்களும், கோப்பெருஞ்சிங்கன் போன்ற சிற்றரசர்களும் தாக்கிய காலத்தில் வலுவிழந்து சோழப் பேரரசு ஆடிக்கொண்டிருந்த மூன்றாம் இராசராசன் காலத்தில் கி.பி.(1216-36) மீண்டும் இதுபோன்று கோயில் சொத்துக்களைச் சிவப்பிராமணர்கள் கொள்ளையடித்த செய்திகளைக் காண்கிறோம்.

இதுபோன்ற செயல் பிற இடங்களிலும் நடைபெற்றுள்ளது. திருமால்புரத்திற்கு அருகில் உள்ள சிவபுரத்தில் கி.பி.1239-ல் எழுதப்பட்ட கல்வெட்டானது இக்கோயில் சிவப்பிராமணர்கள் இருவர் சிவபுர இறைவனின் நகைகளைத் திருடிச் சென்று தம் காதற்பரத்தைக்குக் கொடுத்தும் நிவந்தங்களைத் தீய வழிகளில் செலவிட்டும், அரசுக்கு வரிகொடுக்க மறுத்தும், வரி கேட்க வந்த வரித் தண்டலர்களை அடித்தும், கன்னட வீரர்களுடன் சேர்ந்து கொண்டு மக்களைத் துன்புறுத்தி 50,000 காசுகள் வசூலித்தும் புரிந்த அட்டூழியங்களை வரிசைப்படுத்திக் கூறுகிறது.

**கல்வெட்டுகள்**

1. ஸுவஸ்திஸ்ரீ வீரவல்லாள தெ(வர்க்கு)
2. மேல் செல்லா நின்ற ஆங்
3. கிரச வருசத்து ஆடிமாதம் 2-ம் தியதிதெ
4. ண்ணா(யக்)கர் கோட்டைக்குத் தெற்கம்
5. ஆறுநாட்டுநாட்டவரோம் வடப
6. ரிசாரநாட்டு ஆலத்தூர் அமணே
7. தவர் அணி ஆதழகிய நாயனாற்கும்
8. புக்கொளியூர் அவிநாசி ஆளுடையாற்க்கு
9. ம் தன்ம சாதனம் பண்ணிக் குடுத்தபரி
10. சாவது இந்த ஆலத்தூர் முழுதும் அவி

11. [நாசி ஆளு] டையார்க்கு திரிபுவனச்சக்
12. [கரவர்த்திகு] டுத்தான் என்றும் அணியா
13. [தழகியார்க்கு] சேரமான் சக்கரவர்த்தி குடுத்தார்
14. என்றும் இரண்டு கோயில் தானதரும்
15. தேவர் சிரீதனமும் சோமப்பருக்கும்
16. கணி ஸ்ரீயக்கி உடையார் முன்பும்
17. நாட்டார் முன்பும் முறைப்பட்டு இரண்டுசா
18. தனமும் காட்டு கையில் இரண்டு சா
19. தனமும் பார்த்த அளவில் இரண்டும் பூ
20. ர்வ சாதனம் ஆனபடி ஆலே இரண்
21. டு கோயிலுக்கும் பொதுவாக்கி இந்த ஊ
22. ர் தெற்கில் தெருவும் இறை குறுப்பு கீழைகு
23. டி சூழும் அமண தேவர்க்கு இம் மருவாதி பிற
24. வும் திருமலையில வெட்டு
25. வித்துக் குடுத்தமைக்கு இதுவெச்ச தன்மம
26. ாகவும் அறுதிபியெர் சாதனம்ம
27. ாவதாக கடவதல்ல ஆகவும் இ
28. துக்கு இருபாலாக செ(ய்)வித்துக் குடுத்தோம்
29. ஆறுநாட்டு நாட்டவரொம் அமண் தெ
30. வர் அணி ஆதழகிய நாய நார் இந்த
தன்ம(ம்) விலக்கினவன்
31. ஏழெச்ச (ம்) அறுவான் ஸ்ரீ ஜி நான்ம ர மX

## நிர்வாகம்

கோவை மாவட்டம் அவிநாசி வட்டம் ஆலந்தூர் என்ற ஊரில் உள்ள சமணர்கோயிலின் மகா மண்டப மேற்குச்சுவரில் உள்ள கல்வெட்டுயில் கோசல மன்னர் மூன்றாம் வீரவல்லாலன் என்பவரின் 14-வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு அரசு வருவாய் நிருவாகத்தை அறிந்து கொள்வதற்கும் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு ஆவணங்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் சிறப்பினை

வெளிப்படுத்துவதற்கான சிறந்த சான்று இக்கல்வெட்டு கி.பி.10 நூற்றாண்டு ஆவணமும் கி.பி.12-ம் நூற்றாண்டு ஆவணமும் இக்கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது. எனவே அரசு ஆவணங்களை எப்படி பாதுக்கப்பட வேண்டும் என்பதற்கும் அதன் முக்கியத்துவதையும் இக்கல்வெட்டு மூலம் நன்கு அறியலாம்.

## திருமால்பூர் தூண் கல்வெட்டு

மாவட்டம் : வேலூர் — ஆட்சி ஆண்டு 5வது கி.பி.961

வட்டம் : அரக்கோணம்
திருமால்பூர் (தற்பொழுது வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.)

காலம் : பார்த்திவேந்திராதிவர்மன்

குறிப்புரை : சம்ப மூலை ஊரில் சுப்ரமண்ய தேவர்க்கு பகலில் இரண்டு நந்தா விளக்குகளும் இரவில் ஒரு நந்தா விளக்கும் எரிப்பதற்கு விளத்தூர் கிழவன் பட்டனமதியர் என்பவர் நிலம் அளித்தது.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பார்திவெந்திரா பந்
2. மக்கி யாண்டு 5 (ஐந்தாவது (ரு)) ஆவது தாமர் கோட்ட
3. த்து தந் கூற்று சம்பமூலை உளரோம் இவ்
4. வூர் விளத்தூர் கிழவன் பட்டமைதியர்
5. முறை எங்கள்ளூர் ஊருடை பெருமாளா
6. ன் ஸுப்ரஹமன்ய தேவர்க்கு வைத்த நொந்தா வி
7. ளக்குப் பகல் இரண்டும் இரவு ஒன்றும் சந்ரா
8. தித்ய வரை எரிப்பதக்கு வைத்த பூமி வாணிய
9. சேரி தும்பின் கால்வழி வாணியன் நெரிகண்ணா
10. ற்று தடிநூல் குழி எழுநூறும் இறையிழித்து
11. க் குடுப்பதாக விளத்தூர் கிழவன் பட்டனமதி

12. யர் முறை பக்கல் இறையித்துக் கொண்டு இப்பூமி
13. யிறையிழிச்சி சிலாலேகை சேது குடுத்தோம்
14. அ சம்ப மூலை ஊர் ம . . றன்று சொநோம்
15. நிருபானை மறுத்தார் . . ண்டமும் படு கெங்கையி
16. டை குமரியிடை செய்த பாவத்தில் படுவோம்
17. னோம் ஊரோம். இ . . பந்மாஹேஸ்வரகைக்ஷ

# திருமால்புரம் இன்றைய நிலை

## *மக்கள்*

சோழர் ஆட்சியின் போது மிகவும் சிறந்து விளங்கிய திருமாற்பேறு, தற்போது வளர்ச்சி குன்றி ஒருசிறு கிராமமாக இருக்கிறது. இவ்வூரில் பெரும்பாலும் செங்குந்தர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அநேகருடைய பூர்வீகமே இவ்வூர் தான் என்று கூறுகிறார்கள். தற்போது மக்கள் தொகை சுமார் 3,000 பேர் இருக்கின்றனர்.

## *சமூக பழக்க வழக்கங்கள்*

குழந்தை பிறப்பில் அநேகர் ஆண்மகவு பிறப்பதைத்தான் அதிகம் விரும்புகின்றனர். இருப்பினும் எம்மகவாயினும் ஒருசிலர் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றனர். மகப்பேறு இல்லாதவர்கள் எந்த மகவாயினும் விரும்புகின்றனர்.

## *பெயர் சூட்டுவிழா*

பெரும்பாலும் உடன்வீட்டிலேயே குழந்தைகளுக்கு (கணவர் வீட்டில்) பெயர் சூட்டப்படுகிறது. பெரியவர்கள் முன்னிலையில் மூங்கில் சல்லடையில் போட்டு அதன் பிறகு அவர்களின் குலத்தின் பெயரை சொல்லி இரண்டு அல்லது மூன்று முறை சொல்லிய பிறகு மற்ற நபர்களும் அவ்வாறே அழைத்து அதே பெயரை வைக்கின்றனர். பிறகு பள்ளியில் சேர்க்கும் போது தற்காலத்தில் உள்ள பெயரை மாற்றி அழைக்கின்றனர்.

## *காதணி விழா*

காதணி விழா இங்கு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. பெரும்பாலும் பாட்டனார் வழி மூலம், பொன்னும் பொருளும், உரிய மரியாதையோடு உறவினர்களை முறையாக அழைத்து வந்து காதணி விழா நடத்தப்படுகிறது. அப்போது சைவ உணவு முறையில்

செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. தாய்மாமன் சீர்வரிசையில் மிகவும் சிறப்பாக மேளதாளத்துடன் விழா நடைபெறுகிறது.

## திருமணம்

அநேகர் நெருங்கிய உறவினர்களுக்குள்ளும் உறவல்லாதோருக்குள்ளுமாக இவர்கள் திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். எனினும் இவர்களது சாதி, சமயம் ஆகிய கட்டுப்பாட்டுக்குட்பட்டு தான் திருமணம் செய்கின்றனர். பெரும்பாலும் எல்லாத் திருமணமும் சாதகம் பார்த்துத்தான் நடைபெறுகிறது. திருமணம் பெரும்பாலும் மணமகள் இல்லத்தில் தான் (கன்னிதாகதானம்) நடைபெறுகிறது. சில சமயங்களில் கோயிலில் நடைபெறுகிறது. இங்கு வரதட்சணை கிடையாது. உயர்தரக் கல்வியை திருமணத்திற்குரிய ஒரு நடையாக மக்கள் நினைப்பது கிடையாது. காரணம் பெரும்பாலும் பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் மேற்படிப்புக்கு செல்லாமல் நெசவு தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்கள் திருமணம் அந்தணரை வைத்துதான் நடைபெறுகிறது.

## வளைகாப்பு

வளைகாப்பு இங்கு மிகவும் சிறப்பாக கொண்டப்படுகிறது. ஏழாம் மாதம் அல்லது ஒன்பதாம் மாதம் நடைபெறுகிறது. குழந்தை பிறப்பு வரை பெண், தாயார் வீட்டிலே இருந்து, பின்னர் குழந்லதயுடன் தான் மாமியார் வீட்டிற்கு வருவார்கள்.

## திருவிழாக்களும், பண்டிகைகளும்

தீபாவளி அனைவராலும் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். பொங்கல் திருநாளில் தைப்பொங்கல், பொன்னி அம்மனுக்கு பொங்கல், மாசியில் அங்காளப்பரமேஸ்வரி அம்மனுக்கு பொங்கல், ஆடியில் அம்மனுக்கு பொங்கல் ஆகியவை சிறப்பாக நடைபெறுகிறது. பொங்கல் வைப்பதற்கு நாட்டாண்மைகாரர்தான் வந்து அடுப்பு திறப்பார்கள். இறந்தவர்களின் வீட்டில் பொங்கல் நடுவாசலில் ஊர் ஆள்தான் செய்வார்கள்.

## தாலி

தாலி பொதுவாக சாதாரணமாகவே உள்ளன. தென்னைமரம் கூடிய உருவம் பொறிக்கப்பட்ட தாலி 1/2, 3/4 பொன், அளவு கொண்டது. மேலும் பொட்டுத்தாலி, முருகனின் உருவம் உள்ள தாலி ஆகிய வகைகள் இவர்கள் பழக்கத்தில் இருக்கிறது.

## சவ அடக்கம்

இறந்தவர்களை அடக்கம் செய்து (புதைத்தல்) மறுநாள் பால் வைப்பார்கள். பிறகு 7 – ஆம் நாள் 8 – ஆம் நாள் துக்கம் கொண்டாடும் பொழுது எண்ணெய் தேய்த்து தலை முழ்குதல் செய்து விதவை, தாய்க்கு வீட்டிற்கு அழைத்து சென்று துக்கம் கொண்டாடி அனைவருக்கும் உணவு போடுவார்கள். நடப்பு நடைபெறும், மறுநாள் கருமாதி நடைபெற்ற பிறகு அந்த இறந்த நபரை மறுநாள் பெரியவரிடத்தில் (இறைவனாக) சேர்ப்பார்கள். அன்றும் சைவம் உணவு முறைப்படிதான் விருந்து நடைபெறும்.

## இருப்பிடம்

குடியிருப்பைப் பொறுத்தவரை இவ்வூர்வாசிகள் முழுவதும் தங்கள் சொந்த வீடுகளிலேயே வசிக்கின்றனர். கூரையிட்ட, ஓடுகளிட்ட, மற்றும் மஞ்சு பாவப்பட்ட வீடுகளில் குடியிருக்கின்றனர். பெரும்பான்மையானவை ஓட்டு வீடுகளே. வாடகை குடியிருப்பவர்கள் ஒருசில நபர் மட்டும். மாடிவீடுகள் ஒரு சில மட்டும் உள்ளது.

## குடும்ப முறை

பெரும்பாலும் கூட்டுக்குடும்பங்களாகவே உள்ளனர். ஆனால் திருமணம் நடந்த பிறகு தனிக்குடும்பமாக இருக்கின்றனர். இங்கு குடும்ப நல திட்டம் உண்டு.

## உணவுப் பழக்கங்கள்

எல்லாவிதக் காய்கறிகளையும், பயிறுகள், பருப்புவகைகளையும் உணவில் சேர்க்கின்றனர். அநேகர் சைவ உணவை விரும்பிச் சாப்பிடுகிறவர்களாவார்கள். ஒரு சிலர் மட்டும் அசைவ உணவை விரும்புகின்றனர். பானங்களாக காபி, தேனீர், மோர் ஆகியவையும்,

விசேஷ காலங்களில் ஒரு சில நபர் மட்டும் கள்ளும் பானமாகப்பயன்படுத்துகின்றனர்.

## ஆடை

பெரும்பாலோர் நம் நாட்டு உடை முறைகளையே எளிமையான ஆடை ஆதரிக்கின்றனர். மேலும் பருத்தி ஆடைகளை விரும்புகின்றனர். முழுக்க முழுக்க இவர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் பருத்தி ஆடைகளையே அணிகின்றனர். விதிவிலக்காக ஒருசிலர் நபர்கள் மட்டும் தற்கால நவநாகரீக ஆடைகளை விரும்புகின்றனர்.

## கல்வி

பொதுவாக இங்குள்ள அனைவரும் நடுநிலைப் பள்ளி, மற்றும் உயர்நிலைப் பள்ளி, மேனிலைப்பள்ளி வரைதான் படிக்கின்றனர். மேல் நிலைப்படிப்பு வரை ஒரு சில நபர் மட்டுமே படிக்கின்றனர். குறிப்பாக எட்டாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு வரை தான் பெரும்பாலும் படித்திருக்கின்றனர். கல்லூரி சென்று படிப்பவர்கள் ஒருசிலரே நபர்கள் மட்டுமே.

## சுகாதாரம்

அநேக கிராமங்களில் காணப்படும் சுகாதாரச் சூழ்நிலையே இங்கும் காணப்படுகிறது. பொதுமக்கள் தாங்களாகவே வைத்தியம் செய்து கொள்கின்றனர். மருத்துவம் பட்டம் பெற்ற மருத்துவர் ஒருவர் கூட இல்லை. ஹோமியோபதி படித்த மருத்துவர் இரண்டு நபர்கள் மட்டும் உள்ளனர். மருத்துவ வசதி தேவை என்றால் இங்கு 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காஞ்சிபுரத்திற்கு தான் வரவேண்டும். எனவே பெரும்பாலுமான மக்கள் மருத்துவ வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். மேலும் சுகாதாரம் சீர்கெட கழிவுநீர்க் கால்வாய்கள் என்று தனியே இல்லாத காரணத்தால் அந்நீர் ஒவ்வொரு வீட்டின் முன் பகுதியையும் கடந்து தெருவின் இரு மருங்கும் சென்று கொசுக்கள் போன்ற உயிரினங்கள் வாழ வகை செய்கிறது. ஆனால் ஊர்மக்கள் வாழ வழியில்லை, வசதியில்லை. மக்களில் அநேகர் குடிப்பழக்கம் கிடையாது.

## பொழுது போக்கு

நவீன கால அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாக மாறிவரும் திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் கேபிள் டி.வி. பார்த்தல் போன்றவை தான், சினிமா பார்த்தும் மக்களின் வழக்கமான பொழுதுபோக்குகளாகும்.

## பெண்களின் நிலை

இங்குள்ளவர்கள் பெரும்பாலும் கல்வியில் ஆர்வம் காட்டுவது கிடையாது. அதிலும் குறிப்பாக பெண்கள் என்றால் எட்டாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு வரைதான் பள்ளிக்கு அனுப்புகின்றனர். பிறகு சிறிய வயதிலேயே 16 முதல் 20 வயதிற்குள் திருமணம் நடத்தி விடுகின்றனர். ஆகையால் பெண்களில் கல்வியில் நம்பிக்கை இல்லை. மேலும் இவர்கள் விதவைகள் மறுமணத்தையும் ஆதரிப்பவர்கள் இல்லை. மறுமணமும் கிடையாது.

## பொருளாதார நிலை நெசவு

நாட்டின் உயிர்நாடி கிராமமே. அதிலும் குறிப்பாக நமக்கு (மனிதன்) தேவையான மிக, மிக முக்கியமான மூன்று பொருட்களில் 1. உண்ண உணவு, 2. உடுக்க உடை, 3. இருக்க இருப்பிடம் ஆகும். எனவே உயிர்நாடியாக இருப்பது உணவு விவசாயம் முதலிலும், இரண்டாவதாக உடை மானத்தை காப்பாற்ற. "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்", "ஆள்பாதி ஆடைபாதி" என பழமொழிகள் பல உண்டு. இறுதியில் இருப்பதற்கு தங்குவதற்கு நிலையான இருப்பிடம் 'வீடு' தேவை. எனவே இந்த ஊரின் முக்கியமான தொழில் நெசவுத் தொழில். எல்லோரும் நெசவாளிகள் சமுதாயத்தை சார்ந்தவர்கள். நெசவுத்தொழில் தான் இவர்களின் உயிர்நாடி ஆகும். நூற்றுக்கு 75% சதவீதம் நெசவு தொழில் தான், 2% சதவீதம் பால் வியாபாரம், 20% விசவாயம் மற்றும் மீதி உள்ளவர்கள், 3% பிறதொழில் ஈடுபட்டுள்ளனர். இங்கு நெய்யப்படும் ஆடைகள் சுற்றிலும் உள்ள ஊர்கள், கிராமம், காஞ்சிபுரம், சென்னை வரை வியாபாரததிற்கு செல்லுகின்றனர்.


மக்கள் தங்கள் வருமானத்தை உணவுக்கும், தொழிலுக்கும் செலவழிக்கின்றனர். சேமிப்பின் நன்மையை உணர்ந்தவர்கள்

பெரும்பாலும் இல்லை. இங்கு கூட்டுறவு வங்கிமட்டும் குறைந்த வட்டி வீதத்தில் மாத தவணையில் வழங்கப்படுகிறது. இவ்வூரில் அரசு உயர்நிலை பள்ளி இருக்கிறது.


## துணைநூல்கள் பட்டியல்

1. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி - III
2. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி - XIII
3. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி - XIX
4. தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி - XXII
5. Topgraphical List & Inscriptions of Tamil nadu and Kerala - states.
   By. T. V. Mahalingam
6. "திருமுறைத் தொகுதிகள்" - தருமபுரம் ஆதினம்
7. "தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்" - மயிலை சீனி. வேங்கடசாமி
8. "தமிழ் நாட்டுச் செப்புத் திருமேனிகள்" - மே. சு. இராமசுவாமி
9. "கல்வெட்டுகளால் அறியப்பெறும் உண்மைகள்"
   தி.வை. சதாசிவபண்டாரத்தார்
   தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம் - 1963 இரண்டாம் பதிப்பு.
10. "சங்காலச் சிறப்புபெயர்கள்" - டாக்டர் மொ. அ. அரங்கசாமி
11. "சோழர் கலைப்பாணி"- S. R. பாலசுப்பிரமணியம் - 1966.
12. "பிற்கால சோழர் வரலாறு"- தி. வை. சதாசிவ பண்டாரத்தார்
13. "தொண்டைநாட்டு பாடல்பெற்ற சிவதலங்கள்"
    வித்துவான் கண்ணப்ப முதலியார் திருமாற்பேறு பதிப்பகங்கள்.
14. "அருண்மொழி" தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1988.
15. "சூரக்குடிக் கோயில்" திரு மா. சந்திரமூர்த்தி
16. "தமிழக கோயிற்கலைகள்" - இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி,
    தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை-8.
17. "சோழர்கள்" K. A. நீலகண்டசாஸ்திரி
18. "இந்து சிலை வழிபாட்டு மூலங்கள்" T. A. கோபிநாதராவ்
    (ஆங்கிலம்)
19. "இந்திய ஆலயங்கள்" சி. முத்துப்பிள்ளை
20. "தென்னாட்டு கோயில்கள்" எம். இராதாகிருஷ்ணபிள்ளை.

# நிழற்படங்கள்



நால்வர் சன்னதி
திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்
கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு




பிராமி, கௌமாரி, வராகி, வைஷ்ணவி, மகேஸ்வரி
கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு




நவக்கிரக மண்டலம்



சூரியன்
கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு




துவாரபாலகர்-1
கி.பி. 15-16- ஆம் நூற்றாண்டு



துவாரபாலகர்-II
கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு



திருமால்
கி.பி.15-16-ஆம் நூற்றாண்டு




இராமர்
கி.பி.15-16-ஆம் நூற்றாண்டு




தட்சிணாமூர்த்தி
கி.பி.10-11-ஆம் நூற்றாண்டு



சண்டேஸ்வரர்
கி.பி.10-11-ஆம் நூற்றாண்டு




பைரவர்
கி.பி.10-11-ஆம் நூற்றாண்டு



வீரஆஞ்சநேயர்
கி.பி.16-17-ஆம் நூற்றாண்டு




நவகண்டம்




அஷ்டபுஜ துர்க்கை
கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு




கோனார் கோயில் தூண்
பல்லவர் காலம்



சோமாஸ்கந்தர்
கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு




நால்வர்
சுந்தரர் அப்பர் மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர்
கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு




பிரதோஷ நாயகர், நாயகி
கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு





சண்டேஸ்வரர் விஷ்ணு
கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு



மாணிக்கவாசகர் நடராஜர் சிவகாமி
கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு



கோனார் கோயில்

